விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 22 ஞாயிற்றுக்கிழமை (07.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 262

# ஆரம்பமாகிறது ஐ.நா அமர்வு

## இலங்கை மீதான அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

*(ஜெனிவா)*

***இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான ஐ.நா விசாரணைக்குழுவின் வாய்மூல அறிக்கை நாளை திங்கட்கிழமை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.***

இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஐ.நாவின் முன்னைய மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை விசாரணைக்குழு ஒன்றை நியமித்திருந்தார்.

இந்த விசாரணைக்குழு இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளை தற்போது நடத்தி வருகின்றது.

இந்நிலையில் ஜெனிவாவில் நாளை ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 27-வது கூட்டத் தொடரில் இந்த விசாரணைகள் தொடர்பிலான தமது வாய்மூல அறிக்கையை ஐ.நா விசாரணைக்குழு சமர்ப்பிக்கவுள்ளது.

ஐ.நா விசாரணைக் குழுவினால் இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகள் தொடர்பிலான முழு விபரங்க

24ஆம் பக்கம் பார்க்க....

## மாணவர் மத்தியில் எயிட்ஸ் ஆபத்து

(கொழும்பு)

இலங்கையில் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை கடந்த சில வருடங்களில் அதிகரித்திருப்பதை காண முடிவதாக பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் எயிட்ஸ் நோய் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் நோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் சிசிர லியனகே

23ஆம் பக்கம் பார்க்க....

## மன்னார்க் கடலில் கஞ்சா மீட்பு

(மன்னார்)

மன்னார் பேசாலை மற்றும் தலைமன்னாருக்கு இடையில் உள்ள கடலில் சுமார் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் மூழ்க செய்து மறைத்து வைக்கப்பட்டிருந்த கேரள கஞ்சா தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் பிரிவின் மோசடி தடுப்பு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து கடற்படையின் புலனாய்வு பிரிவின் உதவியுடன் இந்த கஞ்சா தொகை கைப்பற

23ஆம் பக்கம் பார்க்க....

## பல்கலைக்கழக வெட்டுப் புள்ளிகள் உள்ளே...

(கொழும்பு)

2013-ம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான குறைந்த பட்ச வெட்டுப்புள்ளிகள் பற்றிய தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

வெட்டுப்புள்ளிகளின் விபரங்கள 21-ம் பக்கத்தில்.

## சர்வதேச விசாரணைக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்

### ஐ.நா புதிய ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பான சர்வதேச விசாரணைக்கு முக்கியத்துவம் வழங்கப்படும் என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் புதிய ஆணையாளர் ஜோர்தான் இளவரசர் சையிட் அல் ஹூசைன் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இலங்கையின் அதிகாரிகள் அதற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 27-வது அமர்வு நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் அவருக்கு ஆணையாளர் பொறுப்புகள் வழங்கப்படவுள்ளன.

இந்நிலையிலேயே ஆணையாளர் சையிட்டின் ஆரம்ப அறிக்கை வெளியாகியுள்ளது.

இலங்கையில் மனித உரிமை காப்பாளர்கள் மற்றும் சாட்சிகளுக்கு எதிராக பயமுறுத்தல்கள் தொடர்பாக வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து சையிட் தமது கவலையை வெளியிட்டுள்ளார்.

தமது முதல் அறிக்கையில் இலங்கையில் சிறுபான்மை முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் மீதான

23ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த-அகாஷி சந்திப்பு



(கொழும்பு)

ஜப்பானின் இலங்கைக்கான விசேட சமாதான பிரதிநிதி யசுசி அகாஷி நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பு அலரி மாளிகை

24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜா தெரிவு

### கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தன் தொடர்வார்



23ஆம் பக்கம் பார்க்க....

## மாகாண சபை தலையிட முடியாது —இராணுவம்—

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் மாகாணசபைகள் தலையீடு செய்ய முடியாது என இராணுவம் அறிவித்துள்ளது.

மத்திய அரசாங்கம் மட்டுமே நாட்டின் தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் தீர்மானங்களை எடுக்க முடியும் என இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

வடக்கில் காணி சுவீகரிப்பு மற

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழீழம் அமைக்க முயற்சி கோத்தா கடும் சீற்றம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் தனி நாடொன்றினை அமைப்பதற்கு, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முனைவதாக தனது கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ள பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இந்த நோக்கத்தினை அடைவதற்கு வெளிநாடுகளின் ஆதரவினை திரட்டி வருவதாக தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் கொழும்பில் இடம்பெற்றிருந்த மாநாடு ஒன்றில் உரையாற்றும் பொழுது, இக்கருத்தினை கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியமான தீவிர ஆதரவாளர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவின் துணையால் தான் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உருவாகியதாகவும், விடுதலைப் புலிக

23ஆம் பக்கம் பார்க்க....



SISIL WORLD
SAMSUNG, HUAWEI, INTEX,SONY
தொலைபேசிகள்
இப்பொழுது எம்மிடமிருந்து!
கடன் அட்டைகளுக்கு வட்டி இன்றிய கொடுப்பனவு
விசேட விலைக் கழிவுகள்
2வருட உத்தரவாதம்
விசேட பரிசுப்பொருட்கள்

இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291.
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2242335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755
(C-8421)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வீதியில் மக்கள் வங்கிக்கு முன்பாக இரண்டு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077082528, 0776627952


## கிளிநொச்சியில் ஆயுதங்கள் மீட்பு

கிளிநொச்சியில் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் குறிப்பிட்டனர்.

நேற்றுச் சனிக்கிழமை கிளிநொச்சி மயில்வாகனப் புரகட்டுப் பகுதியிலுள்ள பதுங்குகுழி ஒன்றினுள் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது ரி-56 ரக துப்பாக்கி ஒன்றும் அதற்கு பயன்படுத்தப்படும் இரண்டு மகசீன்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொது மக்கள் வழங்கிய தகவலினைத் தொடர்ந்து நேற்று மாலை சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் குறித்த துப்பாக்கியையும், மகசீன்களையும் மீட்டுள்ளனர்.

இந்த துப்பாக்கி நீண்ட காலமாக குறித்த பதுங்கு குழியில் இருந்ததனால் அது பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-11)


## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள் - அன்பளிப்பு பொருட்கள் - உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-8419)



## தொண்டர் தேவை

தற்கொலைச் செய்திகள் உங்களை வருத்துகின்றனவா? முன்பின் தெரியாதோருக்கும் உதவத் தயாரா? எம்முடன் ஒரு தொண்டராக இணையுங்கள். வாரத்தில் ஒரு நாள் மட்டும், நான்கு மணித்தியாலங்கள் சம்பளம் இன்றிப் பணியாற்ற வேண்டும். பயிற்சி வழங்கப்படும். காலை 9.00 - பி.ப. 1.00 இடையில் அழையுங்கள்:

021 2228117

கைகொடுக்கும் நண்பர்கள்

(C-8422)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 321 0815, 021 567 1532



## CIMA

Chartered Institute of Management Accountants

@

ACCTECM

Lecturer from Colombo & Kandy

No.01, 2nd lane, Power house Road, Jaffna.

T.P:021 221 7733/0779895183

(C-8456)





## பதவி வெற்றிடம்

A/L, O/L எழுதியவர்களுக்கு...

நீங்கள் A/L எழுதிவிட்டீர்களா?

உங்கள் எதிர்காலத்தை ஒளிமயமாக்க பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள். வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 30 பேருக்கு முன்னுரிமை உண்டு

- பயிற்சியின் போது 15,000/= பின் 40,000/=
- தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு

தொடர்புகளுக்கு: 0775566226, 0778794077

(C-8431)



## A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

| | |
|---|---|
| Diploma in Information Technology | DiTec |
| Diploma in Office Automation | DOA |
| Diploma in Pc Applications | DPCA |
| Adv. Dip. in Hardware & Networking | ADHN |
| Dip. in Video Production & Multimedia | DVPM |
| Dip.in Web Designing & Development | DWD |
| Dip. in Computerized Accounting | DCA |

Tally, JAVA, AutoCAD

75% OFF



DMI COMPUTER EDUCATION

யாழில் முதற்தர ஆங்கில பயிற்சி மையத்தில் இருந்து

Spoken English

Vets Fluency Diploma

முழுமையானதும் தரமானதுமான கணினிக் கல்விக்கு

- அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
- இலகு தவணைக்கட்டண வசதிகள். இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பிரிவு I - 08/09/2014 9.30 am
பிரிவு II - 15/09/2014 9.30 am

## DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி, Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, Tel.: 021-226 2470 | No.174, கண்டி வீதி, Tel.: 021-227 0775 | No.130, K.K.S.வீதி, (NSB வங்கி அருகில்) Tel.: 021-224 1970 |

(C-8438)



## டோகா கட்டாரில் உடனடி வேலைவாய்ப்பு




- மேசன் 15 பேர்
- மரவேலை 15 பேர்
- சுத்திகரிப்பாளர் 15 பேர்
- எலெக்ரீசியன் 5 பேர்
- எலெக்ரீசியன் உதவியாளர் 5 பேர்

தொடர்புகளுக்கு:
021 7306000

Al Arab Serendib Recruitment Service
77, Clock Tower Road, Jaffna.

(C-8431)


## 21-ம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு
24 - 08 - 1943

அநியாய அழிப்பு
29 - 08 - 1993



அமரர்
### ஐயன் மயில்வாகனம்
(ஓய்வுபெற்ற - புகையிரத சேவையாளர்களின் மேற்பார்வையாளர்)

கொடியவன் ஏவிய குண்டொன்று
உந்தன் உடலை துளைத்து
சென்றதன்று
படியதனில் வழியனுப்பி
அம்மா உள் வருகையில்
இந்த சேதியும் வந்ததையா!
கடிந்து கொண்டோம் கடவுளை
கண்ணீர் விட்டு கதறினோம்
நாதியற்றுத் துடித்தோம்
துவண்டு நெழிந்தோம்
நெடிய வாழ்வினைப் பறித்த
கல் நெஞ்சம் கொண்ட

அரக்கனின் அராஜகத்தால் -
அன்பின் திருவுருவம்
அப்பா நீங்கள் பிரிந்து சென்று - இன்று
ஆண்டுகள் இருபத்தொன்று ஆனதோ!
காலங்கள் ஓடி மறைந்தாலும் -
ஒவ்வொரு கணமும்
உங்கள் நினைவுகளே
நெஞ்சுக்குள் உறவாடும்
அப்பா உங்கள் ஆத்மா
அமைதி பெற
கண்ணீர்ப் பூக்கள் சொரிந்து
கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

வீரபத்திரர் வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(சி-8439)


## கல்வி மற்றும் தொழில்சார் வழிகாட்டல் இலவசக் கருத்தரங்கு



"உயர்தரத்தின் பின்னர் மாணவர்களே நீங்கள் செல்லவேண்டிய பாதை....??"

கொழும்பின் பிரபல விரிவுரையாளர்களினால் நடாத்தப்படும் இலவசக் கருத்தரங்கு

10.09.2014 10.00 am

முன்னெடுக்கப்படும் விடயங்கள்
- சவால் மிக்க துறைகளில் காணப்படும் தொழில் வாய்ப்புக்கள் எவை?
- எமது தகைமைகள், தொழில்த் துறையில் வெற்றி பெற வழி தேடிக் கொள்வது எவ்வாறு?
- உங்கள் எதிர்காலத்திற்கும், பல்கலைக்கழகக் கல்விக்கும் உறுதியானவை எவை? அவற்றை இனங்காண்பது எவ்வாறு?
- நல்ல தொழில் வாய்ப்பைப் பெற மிகக்குறைந்த தகைமைகள் எவை?
- கற்பித்தல் நிலையமொன்றைத் தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டியவை என்ன?

*பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டது
100 Seats ONLY
பதிவுகளுக்கு: உங்கள் பெயர், முகவரியை
077 55 888 95
09/09 ற்கு முன்னர் அனுப்பி உறுதிசெய்யுங்கள்

கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு
Rs.2500
கற்கைநெறிக்கான விசேட சலுகை

குறிப்பு: மாணவர்களுடன் பெற்றோர்களும் சமூகமளிக்க முடியும்

ESOFT
Shaping Tomorrow's Leading Futures.

ESOFT METRO COLLEGE
No.01, Kanagapuram Rd, Kilinochchi
021 228 5444

Sri Lanka's Largest Higher Education Network

(C-8434)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



நல்லூர் சிவன் கோயில் குரு
ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்த சர்மா
[சிரேஷ்ட விரிவுரையாளர்]
சமஸ்கிருதத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்]

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் மனைவி ரவிச்சந்திராவிற்கும் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா, சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

திருமதி நவமணி செல்வராஜா(ராணி)
(இளைப்பாறிய பல்கலைக்கழக விரிவுரையாளர்
விலங்கியல் துறை,யாழ்.பல்கலைக்கழகம்)

57,அரசடிவீதி,
யாழ்ப்பாணம்

# கியூபா அமைச்சர் இலங்கைக்கு

இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற் கொண்டு கியூபா நாட்டு வெளிவிவகார அமைச்சர் புர்னோ ரொட்ரிகியுஸ் பரில்லா இன்று இலங்கைக்கு வரவுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கை வரவுள்ள புர்னோ ரொட்ரிகியுஸ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரை சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


## நிரந்தர தொழில் வாய்ப்பு

உங்கள் வயதிற்கேற்றவாறு நிரந்தர தொழில் மற்றும் தொழிலுக்கேற்ற சம்பளம் 18000/= 32000/= 17-50 வயது ஆண்/பெண் கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலுள்ள பால்மா/டோபி/கோடியல்/பிஸ்கட்/டிபிடிபி/கிளவுஸ்/ஜேம்... போன்ற பல தொழிற்சாலைகளில் உற்பத்தி உதவியாளர்/ லேபல்/ பொதியிடல்/ Loading/Unloading போன்ற பிரிவுகளுக்கு உடனடியாக ஆட்கள் தேவை
(நண்பர்கள், குழுக்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்)
வருகை அன்றே வேலைக்கு செல்லலாம். C-8425
தகவல்களுக்கு -0776838231/0771116770

CIMA
Chartered Institute of Management Accountants
@ Wisdom
021 2220727 | 021 7200777

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532


# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23 | 06 |
| 03 | 09 |
| 1946 | 2014 |



## திருமதி கனகம்மா செல்லையா

யார்க்கரு கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் ,அந்திரான் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா செல்லையா அவர்கள் 06.09.2014 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ் சென்ற சங்கரப்பிள்ளை செல்லையாவின் அன்பு மனைவியும் சிவராசா (ஓய்வுநிலை சிரேஷ்ட முகாமையாளர், இலங்கை வங்கி), தேவராசா(கணக்காளர், லண்டன்)ஆகியோரின் அன்புச்சகோதரியும். ஜெயகாந்தன்(டென்மார்க்), ஜெயசீலன்(லண்டன்), ஜெயந்தி(ஆசிரியை யா/ செம்பியன் பற்று றோ.க.த.க பாடசாலை) ஜெயமோகன் (ஆசிரியர் யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி). ஜெயவாணி (ஆசிரியை யா/ ஞானாகிரியர் கல்லூரி) ஜெயயாமினி (ஆசிரியை யா/ கரவெட்டி சரஸ்வதி மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் சுபத்திரா (டென்மார்க்) சுதர்சினி (லண்டன்), கலைச் செல்வன்(ஆசிரியர் , ஹாட்லிக்கல்லூரி ) நகுலேந்திரன்- கண்ணன் (மாவட்ட நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் சேவா லங்கா யாழ்ப்பாணம்) கல்யாணி (ஆசிரியர் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) பரணீதரன் (விக்கினேஸ்வரக்கல்லூரி-இணைப்பு பயிற்சி அதிகாரி 22NCC) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிநேகா, சிவான்ஜா, கஜீவன், சச்சின், வர்ணிகா, ஆர்த்திகா, கேசனா, அவந்திகா, சாருகா, அனங்கவி, கவிநயன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

ஈமக்கிரியைகள் 07.09.2014 இன்று முற்பகல் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில்அன்னாரின் கரவெட்டி கிழக்கு யார்க்கரு இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக வீரக்கழி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

யார்க்கரு.
கரவெட்டி கிழக்கு.கரவெட்டி
இலங்கை தொலைபேசி இலக்கம் 0213211441

தகவல்
குடும்பத்தினர்

C-8436

# மரண அறிவித்தல்

## திருமதி .கனகமணி வேலுப்பிள்ளை (சிப்போரா)



யாழ்ப்பாணம் கச்சேரியடியை பிறப்பிடமாகவும் இல 40/1, நொத்தாரிஸ் லேன் அரியாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகமணி - வேலுப்பிள்ளை (சிப்போரா) நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (05.09.2014) அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், பைரவி தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ் சென்றவர்களான கந்தையா, வெள்ளாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், சரோஜா, மோகனா, விஜயதாஸ் (டோகா), கோமளா, காலஞ்சென்றவர்களான ஜெயதாஸ், சுகுணா ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான நடராசா, சுந்தரம், தெய்வேந்திரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற தங்கராசா மற்றும் சிவலிங்கம், செல்வராசா ஜெயமலர் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ரமேஷ் (கொலண்ட்), சுரேஜினி (பிரான்ஸ்), ரனேஷ் (ஜெயா வெல்டிங் வேக்ஸ்), நரேஷ் (கனடா), கரேஷ் (யாழ். எலக்ரோனிக் ), சிராஞ்சினி (நோர்வே), சுதார் (சாரதி), சுமைலி, சுவர்ணா (பிரான்ஸ்), சுமணா (ஜேர்மனி), காண்டீபன் (சாரதி), தமயந்தி (பிரான்ஸ்), கஸ்தூரி, கயல்விழி, கார்த்திகன் (டோகா), கார்த்திகா, செல்வேந்திரா, அனித்தா (நெதர்லாந்து), மிஷாந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர்- விவசாய அமைச்சு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தி யும் யஸ்மின் (கனடா), சானுஜா, பவித்திரன், சந்தோஷ் (நோர்வே), விதுஷா (நோர்வே), லஜந்தினி, லதுஷாஜினி, குகதயாளன் (கஜி பிரான்ஸ்), கீர்த்தனா, சயந்தினி, இலக்கியா, சுபஸ்ரீனா (பிரான்ஸ்), சுதர்சிகா (பிரான்ஸ்), சுகிர்தன் (பிரான்ஸ்), பிறீஸ்கா (ஜேர்மனி), கஸ்வினி (ஜேர்மனி), அர்ச்சுன் (ஜேர்மனி), அஸ்வதி (ஜேர்மனி), காவ்யா, விஷாகன், திவ்வியன், கீர்த்தனன், சாரங்கன், ஆரணி, தேனுகா, ஜிஷ்ணிக்கா, செல்வஜன், சரஸ்ணிக்கா, அங்கிதா (நெதர்லாந்து) ஆகியோரின் பூட்டப் பிள்ளையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று 07.09.2014 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் இருபாலை கானாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

40/1, நொத்தாரிஸ் லேன்,
அரியாலை மேற்கு,
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்

(7708)

# இன்றைய இராசி பலன்

07.09.2014
ஆவணி 22, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 1.05 மணிவரை
திருவோணம் முற்பகல் 8.27 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை
நடேசரபிசேகம்

வளவன்

**மேடம்** தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**இடபம்** சுபகாரிய நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகையுண்டு, பயணங்களால் பலனுண்டு, புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** குடும்பத்தில் இடையிடையே சில கருத்து மோதல்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், போசன சுகமுண்டு, பயணத்தை தள்ளி வைக்க நினைப்பீர்கள், பணப்பற்றாக் குறை ஏற்படலாம்.

**கடகம்** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிம்மம்** நன்மைகள் நாடிவரும் நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கடன்சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**கன்னி** புண்ணிய காரியங்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**துலாம்** அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து சேரலாம், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்கள் எளிதில் கைகூடும்.

**விருச்சிகம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக்கொள்வீர்கள், விருந்தினர் வருகையுண்டு, குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**தனுசு** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, வார்த்தைகளில் நிதானம் தேவை.


**மகரம்** திடீர் பயணங்கள் செய்யும் சூழ்நிலை உருவாகும், மன அமைதிக்காக மகத்தான வழிபாடுகளைச் செய்வீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், போசன நன்மையுண்டு.

**கும்பம்** பணக்குறைவால் கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும், குடும்ப பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது, சயன சுகக் குறைவான நாள்.

**மீனம்** சந்தித்தவர்களால் சந்தோசங்கள் கிடைக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பொதுவாழ்வில் புகழ் கூடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இலங்கை மத்திய அரசாங்கத்தின் நிதியமைச்சின் செயலாளர் பி.ஜயசுந்தர நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். இதேவேளை யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலும் இவர் பங்கு பற்றியுள்ளார். வட மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி கலந்துரையாடலில் வடமாகாணசபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தொடர்பாகவும் 2015, 2017 ஆம் ஆண்டுக்கான நடுத்தர நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (படங்கள்:-என் குமார்)

## அவசர கலந்துரையாடல்

2014 ஆம் ஆண்டு ஆசிரிய பயிற்சியை நிறைவு செய்து வெளியேறியவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்ட ஆசிரிய உதவியாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. அக் கலந்துரையாடலில் நிரந்தர நியமனத்தை உறுதிப்படுத்துதல், சம்பள உயர்வு கோருதல், கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்தல் ஆகிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதுடன் தற்போது கற்பிக்கும் பாடசாலைகளின் பெயர் விபரங்கள் பெறுவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கின்றது. (இ)

# உலகில் 12 கோடிப் பெண்கள் பாலியல் தொல்லையால் பாதிப்பு

உலகம் முழுவதும் 20 வயதுக்கு உட்பட்ட 12 கோடி பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றனர் என யுனிசெவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

15-19 வயதுக்கு இடைப்பட்டவர்களுள் 8.4 கோடி பெண்கள் உடல் ரீதியாகவோ அல்லது பாலியல் ரீதியாகவோ துன்புறுத்தப்படுகின்றனர். இப் பெண்கள் பெரும்பாலும் அவர்களின் பெற்றோர், பாதுகாவலர்கள் அல்லது அவர்களின் ஆசிரியர்களினாலேயே துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

2012 இல் 20 வயதுக்கு உட்பட்ட 95 ஆயிரம் பெண்கள் வன்முறைகளுக்கு இலக்காகி கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் பெரும்பாலோனோர் இலத்தீன் அமெரிக்க நாடுகளை சேர்ந்தவர்கள். நைஜீரியாவில் அதிகளவிலான பெண் சிசுக்கொலை இடம் பெற்றுள்ளது. இங்கு 2012 இல் 13 ஆயிரம் பெண் சிசுக்கொலை இடம் பெற்றுள்ளது. இந்தியாவில் 77 வீதமான பெண்கள் உடல் ரீதியாகவோ அல்லது பாலியல் ரீதியாகவோ துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# தமிழருக்கு கொடுத்த வாக்குறுதியை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும்

### இந்திய மத்திய அமைச்சர்

இலங்கை தமிழர்களுக்கு இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என இந்திய அமைச்சர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

சென்னையில், செய்தியாளர்களை சந்தித்தபோது, அவர் இதனை தெரிவித்தார்.

மத்திய அரசை பொறுத்தவரையில் மற்ற நாடுகளை போலவே இலங்கை அரசுடனும் நல்லுறவு கொண்டுள்ளது.

இலங்கை பிரச்சினைக்கு தூதரகம் மூலம் அவ்வப்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

இலங்கை தமிழர்களுக்கு இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என அவர் இதன் போது வலியுறுத்தினார். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 140 | 130 | 130 | 140 |
| தக்காளி | 30 | 40 | 50 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 60 |
| கோவா | 60 | 70 | 70 | 80 |
| கரட் | 80 | 80 | 80 | 100 |
| பூசணி | 20 | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 50 | 50 | 60 |
| வாழைக்காய் | 80 | 60 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 90 | 60 | 70 | 100 |
| பயற்றங்காய் | 60 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 60 | 60 | 60 | 80 |
| பீற்றூட் | 40 | 40 | 40 | 50 |
| கறிமிளகாய் | 90 | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 40 | 60 | 50 | 60 |
| போஞ்சி | 100 | 120 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 35 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 25 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 60 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-35 | 30 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 128

டொறின் மன்மதநாயகம்




கிருஷ்ணசாமி சங்கீர்த்தனன்




மதீசன் கணேஷ்

பேரன் : தாத்தா தூக்கம் வரல ஏதாவது பேசிகிட்டு இருக்கலாம்?

தாத்தா : சரிடா, என்ன பேசலாம்?

பேரன் : இல்லை நாம் எப்போதும் 5 பேர் தான் இருப்போமா நம்ம வீட்டில, நான் நீங்க, அம்மா, அப்பா,தங்கச்சி...

தாத்தா : உனக்கு கல்யாணம் ஆனா 6 பேர் ஆகிவிடுவோம்ல...


பேரன் : அப்ப தங்கச்சி கல்யாணம் பண்ணி போய்விடுவா அப்ப நாம் 5 பேர் தானே...

தாத்தா : உனக்கு குழந்தை பிறக்கும்ல 6 பேர் ஆகிவிடுவோம்ல...

பேரன் : அப்ப நீ செத்துடுவியே தாத்தா. 5 பேர் தானே...

தாத்தா : உருப்படாதவனே, போய் ஒழுங்கா தூங்குடா....!!?

மாணிக்கம் அநோஸ்




ராகுலன் பாலா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Vacancies for Malaysia

1.Coconut Milk Company
(Salary 1350 RM, SR55000/=+O.T)
(Accommandation free, no food)
2.Hotel (Helper, Waiter, Room boy, Clearners)
(Salary1500RM SR 60000/=)
(Accommandation free, food Free)
3.Plumber, Welder, Election, Drivers
(Salary 2000RM SR 80000/= + O.T)
(Accommandation free, no food )

Contact No.0776076953, 0776712197
(7703)

# காணாமற் போன சிறுவனின் சடலம் நீர்த்தேக்கத்தில்

லிந்துலை- மட்டுக்கலை தோட்டத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் கடந்த 4 ஆம் திகதி இரவு 11 மணியளவில் காணாமற் போன நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

குறித்த சிறுவன் நேற்றுக் காலை தலவாலக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் சடலமாக மிதந்து கொண்டிருந்ததாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

யோகநாதன் சிவதர்ஷன் என்ற 16 வயது சிறுவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சிறுவனின் மரணம்தொடர்பில்பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)



29 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....
யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்) Nail art
- முக அழகுக் கலை (Facials) Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- மெஹந்தி போடுதல் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,



மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 14-09-2014
ஞாயிறு காலை 9.30 மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 15-09-2014
திங்கள் காலை 9.30 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-
GURU

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 25 | 09 |
| 10 | 08 |
| 1947 | 2014 |

## அமரர் கந்தையா கந்தசுவாமி

அவர்கள்

குடும்பத்தின் ஒளி விளக்காய் அன்பின் இருப்பிடமாய்
நற்பண்புகளுடன் நல் வாழ்வுக்கு வழி காட்டி எமக்காகவே
வாழ்ந்த என் அன்புத் தெய்வமே உங்கள்
நினைவுடன் என்றும் வாழ்கின்றோம்

எங்கள் இதயக் கோயிலின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் ஈமக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ளூர், வெளியூர்களில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகளை தெரிவித்தவர்களுக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இன்னும் பல வழிகளிலும் துக்கத்தில் பங்கு கொண்டு உதவியவர்களுக்கும் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவ்வண்ணம்: மனைவி, பிள்ளைகள்.**

(7597)

## மணிவிழா நாயகனை மாண்புடன் வாழ்த்துகின்றோம்



செல்வநாயகம் பத்மநாதன்
(SLPS1) (B.A Dip in Edu)
அதிபர்,
யா/அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி

கிளி/பளை றோ.க.த.க பாடசாலையில் ஆசிரியராக அடியெடுத்து யா/மத்தியகல்லூரியில் ஆசிரியராய், பிரதிஅதிபராய், பதில் அதிபராய் அலங்கரித்து யா/அத்தியார் இந்துக்கல்லூரியில் அதிபராக உறுதிபெற்று ஓய்வு பெறும் பெருந்தகையீர் சகல சௌபாக்கியங்களுடனும் நீடுழி வாழ்க.

கோப்பாய் கோட்டஅதிபர் சங்கம்,
கோட்டக்கல்விப்பணிப்பாளர்,
பணியாளர்கள்.

c-8433

## கல்யாண மாலை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 14.5 செவ். 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Bachelor of Business Communication Accounting/ உதவிக் கணக்காளர் (அவுஸ்திரேலியா PR)<br>தொ.இ: B/3533 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா: 46.5<br>தகைமை/தொழில்: B.Sc (கனடா சிற்றிசன்)<br>தொ.இ: G/3552 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா: 12.5 செவ். 1 இல்<br>உயரம் 170 cm<br>தகைமை/தொழில்: O/L /கட்டாரில் வேலை<br>தொ.இ: B/3534 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 20 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:கலைப்பட்டதாரி, நூலக டிப்ளோமா/ நூலகர்<br>தொ.இ: G/3553 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 34 உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்<br>தொ.இ: B/3536 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: 49.5 செவ் 2 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில் A/L அரச உத்தியோகம்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/3554 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 24 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்<br>தொ.இ: B/3537 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: 13.5 சூரி செவ் 10 இல்<br>தகைமை/தொழில்: B.Sc / விரிவுரையாளர்<br>தொ.இ: G/3565 |

## கல்யாண மாலை


(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
[illegible] காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
[illegible] செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர்
# ஆலய தேர்த் திருவிழா சிறப்புமலர்-07.09.2014



## மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச் செய்தி



திருவெண்காடு திவ்ய பதியில் வீற்றிருக்கும் சித்திவிநாயகப் பெருமானின் பெருந்திருவிழா வின் இரதோற்சவம் இன்றாகும். 1773 ஆம் ஆண்டு வெள்ளை யானை வடிவில் தோன்றி திரு வெண்காட்டில் ஆலமர நிழலில் குடியமர்ந்து அருள் சுரக்கும் ஆனைமுகனுக்கு இன்று பெரு விழா பொலிவுற நடைபெறுகின்றது.

தர்மகர்த்தாக்களாகத் திகழும் திரு.பொ.வி. திருநாவுக் கரசு, திரு.இ.யோகநாதன் ஆகியோரும் அவர்களின் குடும் பத்தினரும் பிள்ளையார் மீது கொண்ட அன்பு மிகப்பெ ரியது. இவர்களைப்போல் இப்பதிவாழ் மக்களும் அன்பும் பக்தியும் உடையவர்களாக திகழ்கின்றார்கள்.

அதனால் திருவிழா மிகமிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தர்மகர்த்தாக்கள், அவர்தம் குடும்பத்தினர், விழா உபயகாரர்கள், தொண்டர்கள், இளைஞர்கள், கலைஞர்கள், சமய சொற்பொழிவாளர்கள், அடியார்கள் அனைவருக்கும் திருவிழாவின் திருவருள் சித்திக்க விநா யகரை வேண்டி ஆசிர்வதிக்கின்றேன்.

இந்திரலோகத்து பெருவிழாவாக நடைபெறும் மகோற் சவத்தில் விநாயகர் அருளால் அனைவரும் சகல செல் வங்களோடு வாழ திருவெண்காட்டு சித்தி விநாயகரை வேண்டி ஆசீர்வதிக்கின்றேன்.

வித்தியாசாகரம்
சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள்
மகோற்சவகுரு
(பிரதம குருசிவன்
தேவஸ்தானம், சித்தன்கேணி)

## சின்மய மிஷன் சுவாமிகளின் ஆசிச் செய்தி



மண்டைதீவு திருவெண்காடு திரு வருள்மிகு சித்தி விநாயகப் பெருமானு க்கு இன்று தேர்த்திருவிழா இடம்பெறு வது நம் எல்லோருக்கும் ஆனந்தத்தை தருவதாகும்.

சித்தர்கள் வாழ்ந்த மண்டைதீவுப் பதி சைவப் பண் பாடு நிறைந்த புண்ணியபூமி .

இவ்வூரில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருவெண்காட்டு சித்தி விநாயகப் பெருமான் மண்டை தீவு மக்களின் மனங்களில் நீக்கமற நிறைந்துள்ளார்.

திருவெண்காட்டுப் பெருமான் தேரேறி வந்து திரு வருள்பாலிக்க வேண்டி ஆசி கூறுகின்றோம்.

ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள்
வதிவிட ஆச்சார்யார்
சின்மய மிஷன்,
யாழ்ப்பாணம்.

## ஆலய வரலாறு

மண்டைதீவு மையப்பகுதியில் அமைந்துள்ள திருவெண் காடு எனும் குறிச்சி அக்காலத்தில் பற்றைகளும் திருக்கொ ன்றை, வேம்பு முதலிய மரங்களும் அடர்ந்த காட்டுப் பகுதியா கத் திகழ்ந்தது.

இக்காட்டில் ஒரு பெரிய ஆலய விருட்சமும் காணப்பட்டது. இக்கிராமத்தின் வடபகுதியில் வசித்த மக்கள் தென்பகுதிக்கு இக்காட்டின் ஊடாகவே சென்று வந்தார்கள். அவர்கள் சென்ற இப்பாதை அந்த ஆல விருட்சத்தின் அருகாமையில் அமைந்தி ருந்தது.

ஒருநாள் மாலைநேரம் ஐயம்பிள்ளை உடையார் இப் பாதை வழியாகச் சென்று அவ் ஆல விருட்சத்தைக் கடந்து கொண்டிருக்கையில் தன்னைப் பின் பக்கத்தினால் ஏதோ ஒன்று பிடித்து இழுப்பது போன்ற உணர்வு அவருக்கு ஏற்பட் டது. அவர் திடுக்குற்றுத் திரும்பிப் பார்த்தபோது ஆலய விருட் சத்தின் கீழ் பெரிய வெள்ளை யானை ஒன்று அவரை நோக்கி தன் துதிக்கையை நீட்டிய வண்ணம் நின்றது. இதைக் கண் ணுற்ற ஐயம்பிள்ளை உடையார் ஆச்சரியப்பட்டார். இதன் போது யானை ஆலமரத்தின் மறுபக்கம் சென்று மறைந்து விட்டது.

இச்சம்பவம் அவருக்கு ஓர் அதிசயமாகவும் மிகுந்த பய மாகவும் இருந்தது. எனினும் அவ்யானையைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலுடன் அச்சுற்றாடலில் தேடினார். ஆனால் அவரால் யானையை மீண்டும் காணமுடியவில்லை. அவர் இச்சம்பவத்தை தனது உறவினர்களுக்கும் நண்பர்க ளுக்கும் தெரிவித்து அவர்களுடன் கலந்தாலோசித்தார்.

அவர்கள் எல்லோரும் பிள்ளையார் தான் இவ்வாறு காட்சி அளித்தார் என்ற கருத்தைக் கூறினார்கள். இதன் காரண மாகவே அவர் அந்த ஆல விருட்சத்தின் அருகில் பிள்ளையார் ஆலயத்தை அமைத்தார். அதுவே திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயமாகச் சிறப்புற்று விளங்குகீன்றது.

18 ஆம் நூற்றாண்டில் அமைக்கப் பெற்ற வரலாற்று பெருமைமிக்க இவ்வாலயத்தில் இன்று சித்திரத்தேரில் விநாய கன் வீதியுலா வரும் அற்புதம் நாம்செய்த தவப்பேறேயாகும். திரு வெண்காடு சித்தி விநாயகன் தேரேறி வருகின்ற இந்நாளில் நாமும் அவன் திருப்பாதம் தொழுது இன்புறுவோமாக.

*பொ.வி.திருநாவுக்கரசு,*
*ஆலய தர்மகர்த்தா.*

***************************

**தேர்த் திருவிழா ஆவணித் திங்கள்**
**22 ஆம் நாள் இன்று (07.09.2014)**
**சங்கற்பம் - காலை 6.00 மணி**
**விஷேட பூசை - காலை 7.45 மணி**
**வசந்தமண்டப பூசை - காலை 8.15 மணி**
**தம்பபூசை - காலை 9.00 மணி**
**தேரில் ஆரோகணம் - காலை 10.35 மணி**
**அவரோகணம் - பிற்பகல் 12.30 மணி**

***************************

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



சிவநேயச் செல்வர்களே!

சைவமும் தமிழும் செழுமையுறும் மண்டைதீவுப் பதியில் இன்று திருவெ ண்காட்டு சித்தி விநாயகர் சித்திரத்தேரில் பவனி வருவது நமக்கெல்லாம் மகிழ்வைத் தருவதாகும். பல்வேறு இன்னல்களைச் சந்தித்த மண்டைதீவு மக்கள் எத்தனை துன்பம் வந்தபோதிலும் திருவெண்காடு சித்திவிநாயகன் மீது கொண்ட அளவு கடந்த அன்பை இவ்விழா உணர்த்தி நிற்கின்றது.

விநாயகரின் திருவருளும் அடியார்களின் பக்திப் பிரவாகமும் சேர்ந்து தேர்த்திருவிழா சிறப்புற நல்லாசி கூறுகின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு
*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், ஆதீன குருமுதல்வர், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.*

## வெண்காட்டுப் பெருமானின் தேர்ப் பவனி காண்போம்

சைவமும் தமிழும் உயர் பண்பாடும் என்றும் குறை யாது மண்டைதீவில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் திரு வெண்காடு சித்திவிநாயகர் ஆலயத்தின் மஹோற்சவம் சிறப்பாக நடைபெறுவது இறைவனின் திருவருளேயாம். மக்கள் பட்ட துன்பங்கள் விலகி இன்பமயமான சூழ்நிலை தோன்ற சித்திரத்தேரில் திருவெண்காடு விநாயகன் வலம் வரும் அற்புதக்காட்சி அமைகின்றது.

இடப்பெயர்வுகள், சொத்து இழப்புக்கள் என்ற பல் வேறு துன்பங்களை மண்டைதீவு மக்கள் கடந்த காலங் களில் சந்தித்த போதிலும் அவர்கள் திருவெண்காடு சித்தி விநாயகர் மீது கொண்ட பக்தியில் இம்மியும் மறையேற் பட்டதில்லை.

தாம் செய்கின்ற எல்லா செயல்களிலும் திருவெண் காட்டு சித்தி விநாயகனை நினைந்து கொள்ளும் அளவில் அவனுடைய அருளாட்சி எங்கள் அனைவரையும் பரிபாலித்து வருகிறது.

வெண்காட்டுப் பெருமானின் திருத் தேர் பவனியை நாம் அனைவரும் கண்டு பெரும் பேறு அடைவோமாக.

*இரத்தினசபாபதி யோகநாதன் (இந்திரன்)*
*ஆலய தர்மகர்த்தா*

## தீவகத்தின் தலைமகனே...! திருவெண்கா குறையிறையே...!

தீவகத்தின் தலைமகனே திருவெண்கா குறையிறையே
பூசித்தெழும் அடியார் புடம்போடும் பொற்குகையே - உன்
தம்பியோ போர்வீரன் தந்தையுமோ அக்கினியான்
அன்னையவள் உமையோ அவள் தந்தை செருக்
கொழித்தாள்...
குஞ்சரத்தின் எழிலானே நாம் குடியிருந்த மனைவிட்டு
கொஞ்சிக் குலாவியவிக் குதுாகலமாம் பதிவிட்டு
திக்கொன்றாய்ப் பிரிந்து திரிந்தழிந்தோம் அந்நியரால்
சுட்டிவிழித்தந்த சூழ்ச்சியரை மாய்க்காமல்
பத்தியமேன் காக்கின்றாய்...? எம் பதியுறையும் நாயகனே.

ஆக்கம்
தீவக தியாகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகளில் சேரும் கழிவுகளை வீதிகளில் போடுவதை தவிர்க்க

யாழ்.நெல்லியடி கலட்டிப் பகு தியிலுள்ள மக்கள் தமது வீடுகளில் சேரும் கழிவுப் பொருட்களை வீதிகளில் கொட்டாது பொலி த்தீன் பைகளில் போட்டு வைக்குமாறு வட மராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை பிரதேச மக்களுக்கு வேண்டு கோள் விடுத்துள்ளது.

குறித்த வீதியில் பிரதேச மக்க ளால் தினமும் கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்டு வருகின்றது.


இதனால் அவ்வீதியால் செல் லும் பாதசா ரிகள் மிகுந்த சிரமத் தின் மத்தியில் தினமும் சென்று வருகின்றார்.

இம் மக்களால் வீதியில் கொட்ட ப்படும் கழிவுப் பொருட்கள் 4 நாட்களுக்கு மட்டும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையால் அகற்றப்பட்டு வருகிறது.

பிரதேச சபையால் கழிவுப் பொருட்கள் அக ற்றப்பட்ட பின்பும் மக்கள் மீண்டும் கழிவுப் பொருட்கள் வீதியில் கொட்டப்படுகின்றன.

இதனால் இவ்வீதியால் பயணிக்கும் பாதசாரிகளுக்கு மட்டுமல்லாது அப்பிர தேசத்தை அண்டியிருக்கும் மக்களுக்கும் பல பிரச்சி னைகளை எதிர் கொண்டு வருவ தாகவும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை சுட்டிக் காட்டியுள்ளது.

எனவே, தத்தமது வீடுகளில் சேரும் கழிவுப் பொருட்களை உரிய முறையில் பொலித்தீன் பைகளில் போட்டு வைக்குமாறு பிதேசசபை அப்பிரதேச மக்களுக்கு வேண் டுகோள் விடுத்துள்ளது. (இ-60)




# ஊழியர்கள் நலன்கருதி விசேட கலந்துரையாடல்

யாழ். மாவட்டத் தொழில் அலுவலகத்தினால் தனியார் வர்த்தக நிறுவனங்கள், தனியார் தொழிற்சாலைகள், தனியார் கம்பனிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவற்றில் பணிபுரியும் ஊழியர்கள் வேலை நேரம், விடுமுறை, ஊழியர் சேமலாப நிதி மற்றும் தனியார் துறை தொழில் சட்டங்கள் தொடர்பான கலந் துரையாடல் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ்.வணிகர் கழகக் கட்டடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடத்து வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்டத் தொழில் அலுவலகத்தின் உதவித் தொழில் ஆணையாளர் திருமதி நீ.ஜெகதீஸ் வரன் தெரிவித்துள்ளார். (இ)

# நாட்டின் முன்னணி மாகாணமாக வடமாகாணத்தை மாற்ற வேண்டும்

## நிதியமைச்சின் செயலர் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் பல்வேறு அபி விருத்தி நடவடிக்கைகளை மேற் கொண்டு இலங்கையின் முன்னணி மாகாணங்களில் ஒன்றாக வடமா காணத்தை மாற்றவேண்டும் என நிதியமைச்சின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர தெரிவித்தார்.

வடமாகாணத்தின் 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான வரவு செலவுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் காலை இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரை




யாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் வீதிகள் புனர மைப்பு, கல்வி அபிவிருத்தி நடவடிக் கைகள், மீன்பிடி, விவசாயம், புகை யிரத நிலையங்கள் உள்ளிட்ட பல் வேறு திட்டங்களுக்காக அதிக முதலீ டுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் நோக்கம் வடமாகாண த்தை சிறந்த முறையில் முன்னே ற்ற வேண்டும் என்பதாகும். இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் வெற் றிகரமாக முன்னெடுக்கப்பட்ட அதே வேளை எதிர்காலத்திலும் இந்த நட வடிக்கைகள் முன்னெடுக்கப்ப டும்.

இலங்கையிலுள்ள அனைத்து மாகாணங்களையும் ஒரே விதமா கப் பார்க்கும் ஜனாதிபதி அனைத்து மாகாணங்களின் நலனிலும் அக் கறை கொண்டுள்ளார்.

உட்கட்டுமானம், கல்வி மற்றும் இதர அபிவிருத்தி நடவடிக்கைகள் தெற்கில் மேற்கொள்ளப்பட்டதைப் போன்று வடக்கிலும் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.


வடமாகாண அமைச்சர்கள் மற் றும் செயலாளர்கள் உள்ளிட்ட அனை வரும் கலந்து கொண்டு வரவு செல வுத் திட்டம் தொடர்பான தேவை களை வெளிப்படுத்துகின்றமை நல்ல தொரு விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமாகாண பிர தம செயலாளர் திருமதி விஜயலட் சுமி ரமேஸ், வடமாகாண கல்வி யமைச்சர் த.குருகுலராஜா, மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடமா காண ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (இ-4)

# விவேகானந்தா முன்பள்ளியின் விளையாட்டு போட்டிகள் இன்று

விவேகானந்தா முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு விவேகானந்தா முன்றிலில் விவேகா னந்தா முன்பள்ளி முகாமைத்துவக் குழு தலைவர் வி.கே.குகானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தி னராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தின் முன்பள்ளி உதவிக கல்விப் பணிப்பாளர் க.விமல நாதன், இணுவில் மத்திய கல்லூரி அதிபர் இ.துரைசிங்கம், நல்லூர் பிரதேச செலகத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.மாலினி பாஸ்கரனும் கௌரவ விருந்தின ராக கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சஞ்சீவ ஜெயக் கொடியும் கலந்து சிறப்பிக்க உள் ளனர். (இ)





வரலாறறுப பிரசிததி பெறற தெலலிபபழை துாககையமமன ஆலய வருடாநத மஹோறசவததின தோததிருவிழா நேறறு இடமபெறற போது... (படஙகள:- உ.சாளின)

# வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோவிலாக்கண்டி மேற்கு தச்சன் தோப்பு கந்தையா கனகம்மா நினைவு நிதியம், சாவகச்சேரி பிர தேச சபையின் நாவற்குழி உப பணி மனையுடன் இணைந்து நடத்தும் பௌர்ணமி அரங்கம் க.பொ.த சாதாரண தர தேர்வுக்கு (2014) தோற்றும் மாணவர்களுக்கான வழி காட்டல் கருத்தரங்கு நாளை திங் கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கந்தையா கனகம்மா நினைவால யத்தில் காப்பாளர் க.மயில்வாகனம் தலைமையில் இடம்பெறவுள் ளது.

இதில் வளவாளராக ஆசிரியர் இரா.செல்வவடிவேல்கலந்துகொண்டு கருத்துரையினை வழங்கவுள் ளார். (இ)

# தடங்கல்களுக்கு மத்தியிலேயே மாகாணசபை இயங்குகின்றது

## வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு

பல்வேறு தடங்கல்களை எதிர் கொண்ட நிலையிலேயே மாகாண சபை இயங்கிக் கொண்டிருக்கின்றது என வடக்கு மாகாண முதலமைச்சா சி.வி.விகனேஸ்வரன் தெரிவித்தார்.

3 இலட்சம் ரூபா பெறுமதியான, அதிநவீன லேசர் போட்டோப்பிரதி இயந்திரமும் நூல்களும யாழ். பொது நூலகத்திற்கு நேற்று முன் தினம் அன்பளிப்பாக வழங்கப்பட் டுள்ளன. யாழ்.பொதுசன நூலகத் தில் பிரதம நூலகர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமா காண முதலமைச்சர் சி.வி.விக்னே ஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பொருட்களை வழங்கிவைத்தார். இந்நிகழ்வில் முதலமைச்சர் மேலும் தெரிவிக் கையில்.

தமிழர்கள் பல்வேறு அழிவு களைச்சந்தித்து மிகவும் நெருக் கடியான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை யில் வடமாகாணசபையும் தன்னா லான பங்களிப்பை வழங்கியே வருகின்றது. எனினும் பல்வேறு தடங்கல்களை எமது சபைக்கு தொடர்ச்சியாகவே ஏற்படுத்தி வருகி றார்கள்.

குறிப்பாக வடமாகாண முதல மைச்சர் நிதியச்சட்டமூலத்தை ஏற்க முடியாதென எனக்குக் கூறப் பட்டு இருக்கிறது. இவ்வாறான நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் [illegible] எமது புலம்பெயர் உறவுகள் [illegible] களை வழங்கி உதவியுள்ளார். இது மிகவும் பாராட்டுக்குரிய விடயமாகும். இவ்வாறான வசதிவாய்ப்பும் நல்ல உள்ளமும் மிக்க புலம்பெயர் தேச த்தவர்கள் இங்கு வந்து இவ்வா றான செயறபாடுகளை முன்னெடுக்க வேணடும் எனக்கேட்டுக்கொள்கின் றேன் என அவர் மேலும் தெரிவித்து ள்ளார். (இ)

## தேர்த்திருவிழாவை முன்னிட்டு சங்கீத கதாப் பிரசங்கம்

யாழ்.மண்டைதீவு திருவென் காடு அருள் மிகு ஸ்ரீ சித்தி விநா யகர் தேவஸ்தான தேர்த்தி ருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமைகாலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தேர்த்திருவிழாவை முன்னிட்டு பிற்பகல் 3 மணிக்கு நல்லைக்குரு மணியின் வாரிசுகான கதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வைநித்தியானந்த சர்மாவினால் கஜமுகன் வதம் பற்றி சங்கீத கதாப் பிரசங்கம் இடம்பெற வுள்ளது. (இ)


# புரட்டாதி மாத நிறைமதி கலைவிழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வித் திணை க்களமும் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகமும் இணைந்து நடத்தும் புரட்டாதி மாத நிறைமதி கலை விழா நாளை திங்கட்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் தலைமையில் பிற்பகல் 1.30 மணி க்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் எஸ.இராசேந்திரம், கௌரவ விருந்தினராக மாகாண கல்வி உதவிச் செயலாளர் திருமதி சுகந்தி செபஸ்ரியனும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அப்பா, அம்மா இல்லாத சலீம் (விஜய்ஆண்டனி) தனியார் மருத்துவமனையில் டாக்டராக வேலை பார்த்து வருகிறார். நேர்மையான எண்ணமும் எந்த பிரச்சினைக்கும் செல்லாமலும் சமூக அக்கறையுடன் வாழ்ந்து வருகிறார். இவருக்கும் நாயகியான நிஷா(அக்ஷா)வுக்கும் நிச்சயதார்த்தம் நடக்கிறது. அதன்பின் இருவரும் பழக ஆரம்பிக்கிறார்கள்.

இவர்கள் பழகியதில் சலீமின் குணாதிசயங்கள் நிஷாவிற்கு பிடிக்காமல் போகிறது. இதனால் நிஷா, சலீமை திருமணம் செய்ய மறுக்கிறார். இதற்கிடையில் சலீம் வேலை செய்யும் மருத்துவமனையின் நிர்வாகம் நோயாளிகளிடமிருந்து பணத்தை கொள்ளையடிக்கிறது. இதற்கு

## திரைவிமர்சனம்

துணைப் போகாத சலீமை வேலையை விட்டு தூக்கிவிடுகிறார்கள்.

இவ்வளவு நாள் நேர்மையாக வாழ்ந்ததற்கு பரிசாக வேலையை விட்டு நீக்கப்பட்டதும், தனக்கு மனைவியாக வரவேண்டிய நிஷா தன்னை தூக்கி எறிந்ததையும் நினைத்து மனவேதனை அடைகிறார். இதனால் நேர்மையை தூக்கிப்போட்டு விட்டு தன் இஷ்டத்திற்கு வாழ நினைக்கிறார் சலீம். இதனால் என்ன நடந்தது? அவர் அடைந்த இலக்கு என்ன? என்பதே மீதிக்கதை.

படத்தில் விஜய் ஆண்டனி தனக்கு பொருத்தமான கதாபாத்திரத்தை தேர்வு செய்து நடித்திருக்கிறார். முதற்பாதியை விட இரண்டாம்பாதியில் ஆக்ரோஷமான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். இவர் குடித்துவிட்டு ரகளை செய்யும் காட்சி ரசிக்க வைக்கிறது. நிஷாவுடன் காதல் செய்யும் காட்சிகளில் அழுத்தமாக பதிகிறார். சண்டைக்காட்சிகளில் மிரட்டுகிறார். சலீம் கதாபாத்திரத்திற்கு வேறு யாரையும் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு நடித்திருக்கிறார் விஜய் ஆண்டனி.

நாயகி அக்ஷா தோற்றத்தில் முதிர்ச்சி தெரிந்தாலும் நடிப்பில் இளமைத் துள்ளலுடன் நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். தவறு செய்பவர்களை உடனே தட்டிக்கேட்கும் கதாபாத்திரத்தில் கச்சிதமாக பொருந்துகிறார். பாடல் காட்சிகளில் அழகாக இருக்கிறார்.

மத்திய அமைச்சராக வரும் ஆர.என்.மனோகர் பார்வையிலேயே மிரட்டுகிறார். பொலிஸ் அதிகாரியாக வரும் சந்திரமௌலி, இன்ஸ்பெக்டராக வரும் அருள்தாஸ் ஆகியோர் துடிப்பான நடிப்பால் நம் கண்முன் நிற்கிறார்கள்.

கதையை நல்ல திரில்லர் படங்களுக்கே உரிய காட்சி அமைப்புகளுடன் திரைக்கதையாக்கியிருகிறார் இயக்குநர் நிர்மல் குமார். முதல் பாதியில் திரில்லர் கதைக்கான அச்சாரத்தைப் போடும் திரைக்கதை, இரண்டாம் பாதியில் முழு திரில்லர் படமாக உருவெடுக்கிறது. இரண்டாம் பாதி முழுவதும் ஹோட்டலைச் சுற்றி கதை நகர்ந்தாலும் எந்தவொரு காட்சியிலும் சலிப்பை ஏற்படுத்தாமல் அழகாக படமாக்கியிருக்கிறார் இயக்குநர்.

படத்திற்கு கூடுதல் பலம் விஜய் ஆண்டனியின் இசை. பாடல்கள் அனைத்தும் சிறப்பாக அமைந்துள்ளன. குறிப்பாக சிவசம்போ, மஸ்காரா மஸ்காரா பாடல்கள் ஆட்டம் போட வைக்கின்றன. பின்னணி இசையிலும் மிரள வைத்திருக்கிறார். இது அறிமுகப்படம்தானா? என்ற அளவிற்கு ஒளிப்பதிவில் அசத்தியிருக்கிறார் கணேஷ் சந்திரா. பாடல் காட்சிகளில் அனுபவம் வாய்ந்த ஒளிப்பதிவாளர் போல் காட்சி அமைத்திருக்கிறார். படத்தின் எடிட்டிங், காட்சிகளை கோர்வையாக கொண்டு செல்ல உதவியிருக்கிறது.


## பத்துவருட முன்னணியில் திரிஷா



தமிழ் சினிமாவில் பத்து வருடங்களுக்கு மேலாக முன்னணி நடிகையாக இருப்பவர் நடிகை த்ரிஷா. இவர் முதன் முறையாக பவர் என்ற படத்தின் மூலம் கன்னடத் திரையுலகில் அறிமுகமானார். முன்னணி நடிகரான புனித்ராஜ்குமார ஜோடியாக த்ரிஷா அறிமுகமான இப்படம் பல சாதனைகளைப் புரிந்து வருகிறது. 275 திரையரங்குகளுக்கும் மேல் வெளியான 'பவர்' படம் மூன்று நாட்களுக்குள்ளாகவே சுமார் 7 கோடி ரூபாயை வசூல் செய்துள்ளது. 80 வருட கன்னட சினிமா வரலாற்றில் மிகப் பெரிய ஓபனிங் கிடைத்த படம் என்ற சாதனையை 'பவர்' திரைப்படம் புரிந்திருக கிறதாம். முதலிரண்டு நாள் வசூலை விட மூன்றாம் நாள் வசூல்தான் அதிகமாக இருந்ததாம். இதுவும் ஒரு சாதனை என்கிறார்கள். ஒரு நாளைக்கு 1060 காட்சிகள் கர்நாடக மாநிலம் முழுவதும திரை யிடப்படுகிறதாம். இந்த படத்தின் வெற்றி மூலம் த்ரிஷாவிற்கு அங்கு பலத்தவர வேற்பு கிடைத்துள்ளதாம

## பாலிவுட் நடிகை மோனா கன்னா தூக்கில்





தி ஹான்டடு ஹவுஸ் என்ற பாலிவுட் படத்தின் மூலம சினிமாவில் அறிமுகமானவர் மோனா கன்னா. ஆனால் இந்த படம் இன்னும் திரைக்கு வரவில்லை, அதற்குள தூக்குப்போட்டு இறந்துவிட்டார். இது குறித்து பொலிஸார் விசாரணையில் அவர் எழுதிய கடிதம் கிடைத்தது. இதில் ' என் மரணத்திற்கும் யாரும் காரணம் இல்லை' என்று குறிப்பிட்டுள்ளார். இதை முற்றிலுமாக மறுத்த அவரது தங்கை ' என அக்கா பிரபல நடிகரின் மகனை காதலித்து வந்தார், அவர் ஏமாற்றியாதால் தான் இந்த முடிவை எடுத்துள்ளார்' என்று கூறியுள்ளார். தற்போது அந்த காதலன் யார், மரணத்திற்கு அவர் தான் காரணமா? என்று பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்

## 'தில்லுக்கு துட்டு' சந்தானத்தின் அடுத்த படம்

வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் படத்தை தொடர்ந்து சந்தானம் தனது அடுத்த படத்திற்கு தயாராகி வருகிறார். இந்தப் படத்தை இயக்குபவர் முருகானந்தம். இவர்தான், சந்தானம் பிரபலமாக காரணமாக இருந்த விஜய் தொலைக்காட்சியின் லொள்ளு சபா நிகழ்ச்சியை இயக்கியவர். இந்த படத்திற்கு 'தில்லுக்கு துட்டு' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளதாம். சந்தானம மீண்டும் இந்த படத்தில் நாயகனாக நடிக்கிறார். இது அவர் நாயகனாக நடிக்கவிருக்கும் இரண்டாவது படம். படத்தில் அவருக்கு ஜோடியாக நடிகக இரண்டு முன்னணி நடிகைகளிடம் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. கண்ணா லட்டு தின்ன



ஆசையா படத்தை ராம.நாராயணனுடனும், வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் படத்தை பிவிபி சினிமாவுடனும் இணைந்து சந்தானமே தயாரித்திருந்தார். அதேபோல் இந்தப் படத்தையும் யுடிவி நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்க வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. முழுக்க முழுக்க நகைச்சுவையை மையமாக வைத்து இந்தப் படம் தயாரர்கவுள்ளது. விரைவில் படம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பை எதிர்பார்க்கலாம்.



## தேசிய கொடியை அவமதித்தார் மும்பை மல்லிகா



மல்லிகா ஷெராவத் டர்டி பாலிடிக்ஸ் என்ற படத்தில் நடிக்கிறார். இப்படத்தை விளம்பரபடுத்தி சமீபத்தில் மும்பை மற்றும் தெலுங்கானாவில போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. அதில் மல்லிகா ஷெராவத் ஆடைக்கு பதில் தேசிய கொடியை உடுத்தி இருப்பது போன்ற படம் இடம் பெற்று இருந்தது. இந்த போஸ்டருக்கு எதிர்ப்புகள் கிளம்பின. இரண்டு பேர் கோர்ட்டுக்கு சென் றனர். தேசிய கொடியைமல்லிகா ஷெராவத அவமதித்து விட்டார். அவர் மீது நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு உத்தரவிட வேண்டும் என்று மனுவில் குறிப்பிட்டு இருந்தனர். இந்த வழக்கை நீதிபதிகள் விசாரித்து மல்லிகா ஷெராவத்துக்கும் மத்திய அரசுக்கும் நோட்டீஸ் அனுப்ப உத்தர விட்டனர். தற்போது மல்லிகா ஷெராவத் மீது வழக்கு பதிவு செய்யும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டு உள்ளார். இதையடுத்து மல்லிகா ஷெராவத் மீது ஐதராபாத்தில் உள்ள பலக்னுமா பொலிஸ் நிலையத்தில் தேசிய கொடியை அவமதித்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. இதனால மல்லிகா ஷெராவத் கைதாகலாம் என்று தெலுங்கு பட உலகில் பரபரப்பு ஏற்பட்டு உள்ளது.


## அறை கொடுத்த நயன்தாரா வைத்தியசாலையில் உதயநிதி




சில மாதங்களுக்கு முன் உதயநிதி- நயன்தாரா காதல் கிசு கிசு என தமிழ் திரையுலகமே அதிர்ச்சியில் இருந்தது.

அதிலும் உதயநிதி தற்கொலை முயற்சி செய்து கொண்டார் என வதந்திகள் பரவ ஆரம்பித்தது. இதுநாள் வரை மௌனம் சாதித்த உதயநிதி தற்போது அவரே விளக்கம் அளித்துள்ளார். இதில் நான் மருத்துவமனைக்குப் போக நயன்தாராவும் ஒரு விதத்தில காரணம் தான். ஆனால், அது தற்கொலை முயற்சி இல்லை.'நண்பேன்டா" படத்தில் ஒரு பைட் சீன். அதில நயன்தாராவை நான் சுத்திவிட, அவர் வில்லனை அறைந்துவிட்டு திரும்ப வருகிற மாதிரி ஒரு காட்சி. ஆனால், நான சுத்திவிட்டதும் என்னையே அவர் அடித்துவிட்டார். அவரது நகம் என் இடது கண்ணில் குத்தி ரத்தம் வழிந்தது. அதனால் தான் மருத்துவமனைக்கு சென்றேன்' என்று விளக்கம் அளித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## உண்மையான வேண்டுதலால் அன்று நாயன் மார்களின்

அன்பின் வியாசரே!

✉ சு.ஜெயரூபன், பருத்தித்துறை

**இன்று நம் நாட்டிலுள்ள ஆலயங்களில் திருட்டுச் செயல்கள் வெகுவாக அதிகரித்து விட்டனவே, அதைத் தடுக்க என்ன வழி?**

ஒரு துறவி கண் மூடி தியானம் செய்து கொண்டிருந்தார். அப்போது ஒருவர் வந்து அவர் வேட்டியை கள்வாட முற்படுகின்றார். கண் விழித்த துறவி வேட்டியில் பாதியை கிளித்து அவனிடம் கொடுத்துவிட்டு மீதியை தன் இடுப்பில் கட்டிக் கொண்டு மறுபடியும் தியானம் செய்ய தொடாங்குகிறார்.

திடீரென யாரோ தன் வேட்டியை இழுப்பதை உணர்ந்த துறவி கண் விழித்த போது அவன் துறவியின் இடுப்பில் இருந்த வேட்டியுடன் ஓடுவதை கண்டார். அந்த வேட்டியில் இருந்த பற்றினால் ஒருவனை கள்வன் ஆக்கி விட்டேனே என மனம் வருந்தினார் துறவி. ஆலயங்கள் என்பது மனித மனங்களை சாந்திப்படுத்துவதே தவிர சஞ்சலமடைய அல்ல. முதலில் ஆலயங்களில் விலை உயர்ந்த பொருட்களை வைப்பதை தடை செய்ய வேண்டும். இல்லையேல் இந்த கதைபோல் தான் எல்லாம் முடியும்.

அன்பின் வியாசரே!

✉ க.தில்லையம்பலம், வதிரி

**வெளிநாடுகளிலிருந்து வருத்தப்பட்டு உழைத்த வாலிபர்கள் அனுப்பும் பணத்தை இங்குள்ள வருத்தப்படாத வாலிபர்கள் வீண் செலவு செய்து எமது கலாசாரத்தை சீரழிப்பதை ஏற்க முடியவில்லையே?**

நேற்று முன்தினம் ஒரு மோட்டார் சைக்கிள் திருத்தும் கடையில் ஒரு பல்சர் மோட்டார் சைக்கிளுடன் அங்கு வேலை செய்யும் இருவர் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தனர். நானும் என்னமோ ஏதோ என பார்த்தால், மின்னி மின்னி எரியும் பல்ப் எங்கே பொருத்துவது என்பதற்கே அந்த மல்லுக்கட்டு. கடைசியில் அந்த பல்ப் மோட்டார் சைக்கிளின் அடிப்பகுதியில் பூட்டப்பட்டது. இது ஏன் என்று அந்தப் பெரிய மோட்டார் சைக்கிளின் சின்ன முதலாளியிடம் கேட்டேன். "சும்மா ஒரு பண்ணுக்குத்தான்" என்று கொண்டே வெளிநாட்டில் இருந்து வந்த தொலைபேசி அழைப்பில் ஐக்கியமானான். என்ன செய்ய இங்கே தம்பிக்கு மின்னி மின்னி பல்ப் எரிக்க அங்கே அண்ணன் ஓடி ஓடி உழைக்கிறான் தன் வாழ்வின் வெளிச்சத்தை இழந்து.

அன்பின் வியாசரே!

✉ அ.நளினாசினி, கோண்டாவில்

**உலகிலே மனிதனிடம் திருத்த முடியாத குணம்/ மிகப் பெரிய குறை எது?**

ஏனையவர்களை குறை கூறுவது. தன்னிடம் இருக்கும் குறைகளை புரிந்து கொள்ளாதது.

## வெளிநாடுகளிலிருந்து வருத்தப்பட்டு...

Hi அண்ணா!

✉ த.மோகனரூபன் , சுழிபுரம்)

**உண்மையான வேண்டுதலால் அன்று நாயன் மார்களின் மூலம் அற்புதம் நடந்தது என நம் சைவ பெரியார்கள் சொல்கிறார்கள். ஆனால் முள்ளி வாய்க்கால் போரில் மக்கள் உண்மையாக வேண்டினும் அற்புதம் நடைபெறவில்லையே, அது ஏன்?**

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டு வதற்காக பாரதப் போரில் நிறைய நல்லவர்கள் மாண்டு போனார்கள். ஆனால் தர்மம் வென்றது. அதர்மம் அழிந்து போனது. அதே கொள்கையைத்தான் இறைவன் முள்ளிவாய்க்காலிலும் கடைப்பிடித்தான் "தர்மம் அழிந்து அதர்மம் மேலோங்கும் சந்தர்ப்பத்தில் நான் மீண்டும் அவதாரம் எடுப்பேன்" என்ற ஹரிநாதனின் வாக்கு எம் காதுகளில் கேட்க ஆரம்பித்து விட்டதே!

Hi Vija

✉ ஆஷா,ஆனைக்கோட்டை

**நானும் ரெம்பவே துாங்கிப் பார்க்கிறேன் எனக்கு கனவு வருவதில்லையே?**

காதலித்துப் பார் உனக்கு கண்டபடி கனவு வரும். கூடவே இலவச இணைப்பாக கவிதையும் வரும்.

# புலம்பெயர்ந்துள்ள எமது உறவுகள் தமிழ் மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும்

## மாகாண சபை உறுப்பினர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் இருக்கக்கூடிய எமது உறவுகள் எமது மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும் என வடக்கு மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஏழாலையைச் சேர்ந்தவரும் இலண்டனை வசிப்பிடமாகக் கொண்டவருமான சிவலிங்கம் சிவகாந்தன் என்பவரால் சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான அதி நவீன லேசர் போட்டோப்பிரதி இயந்திரமும் நூல்களும் யாழ். பொது நூலகத்திற்கு நேற்று முன்தினம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்னிலையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.இந்நிகழ்வில் கலந்து கொணடு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னாசியாவிலேயே மிகப் பெரிய அறிவுக் களஞ்சியமாகத் திகழ்ந்த யாழ். நூலகம் 1981 ஆம் ஆண்டு அந்நியரால் நியாயமாகச் சிதைக்கப்பட்டபொழுதும் எமது மக்களின் அறிவுத்தாகத்தை எவ்விதத்திலும் மழுங்கடித்து விட முடிய வில்லை. இன்று நூலகத்தின் வளர்ச்சிக்காக எம்மாலும் ஒரு சிறு பங்களிப்பையேனும் வழங்க முடிந்தமையையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

பொது நூலகத்திற்கு இந்தப் பொருட்களை தனது தனிப்பட்ட பங்களிப்பின் மூலம் வழங்கிய எமது ஏழாலை ஊரைச்சேர்ந்த சிவகாந்தனின் சமூக சேவைகளையும் நான் நன்கு அறிந்தவன். எமது ஊர்ப்பாடசாலைக்கு தனது தனிப்பட்ட நிதிப்பங்களிப்பில் விளையாட்டு மைதானம் உட்பட பல்வேறு அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றித் தந்துள்ளார்.

இதைப்போல புலம்பெயர் தேசங்களில் இருக்கக்கூடிய எமது உறவுகள் எமது மக்களின் பொருளாதாரத்தைக்கட்டியெழுப்ப முன்வர வேண்டும்என பகிரங்க வேண்டுகோளை முன்வைக்க விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

**செல்வச் சந்நிதியில் ஆன்மீக நிகழ்வு**

தொண்டைமானாறு செல்வச் சந்நிதிப் பெருந்திருவிழாவையொட்டி சந்நிதியான் ஆச்சிரமக் கலை. பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு அதிபர் ஆ. சிவநாதன் வழங்கும் **உள்ளம் பெருங் கோவில்** எனும் தலைப்பிலான சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (இ)

## ஓய்வூதியர்களின் கொடுப்பனவை மாதம் தோறும் வங்கியிலிட முடிவு

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியர்களது மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவுகளை இம் மாதத்திலிருந்து அவர்களது வங்கிக் கணக்குகளில் நேரடியாக வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

ஓய்வூதியர்களது செப்டெம்பர் மாதத்திற்கான ஓய்வூதியம் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் ஓய்வூதிய நிலுவைக்ள் வழங்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் அக் கொடுப்பனவுகள் அனைத்தும் ஓய்வூதியத் திணைக்களத்தால் அவர்களது வங்கிக் கணக்குகளிற்கு நேரடியாக வைப்பிலிடப்படும் எனவும் இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் தங்களிற்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

## பௌர்ணமி விழா

(கரணவாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளின் பௌர்ணமி தின விழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். நெல்லியடி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

எனவே இவ்வருடமும் இந்நிகழ்வை சிறப்பாக நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் அறிவித்துள்ளார். (இ-60)



யாழ். மாநகர சபையின் தீயணைப்பு படைப்பிரிவிற்கான பயிற்சி வழங்கலும் பயிற்சி வழங்கியவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் யாழ். மாநகர சபை மைதானத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற போது.... (படம்:- உ.சாளீன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

914

# அரண்மனை ஊழியன்!



...சஞ்சீவகன் பல நூல்களைப் படித்து அறிவு வளர்ச்சி பெற்றிருந்தது. முரட்டுப் பிங்களகனுக்கும் அவற்றை எல்லாம் கற்றுக் கொடுத்து, சில நாட்களிலேயே அதையும் அறிவாளியாக ஆக்கிவிட்டது. மேலும் பிங்களகனின் கொடிய சுபாவத்தை மாற்றி சாந்தமான குணத்துக்கு அதைத் திருப்பிவிட்டது சஞ்சீவகன்.

மிருகங்களை அடித்துக் கொன்று தின்னும் வழக்கத்தை பிங்களகன் இப்போது கைவிட்டுவிட்டது.

சஞ்சீகனும் பிங்களகனும் தினந்தோறும் ரகசியமாக எதை எதையெல்லாமோ பற்றிப் பேசிக்கொண்டே இருந்தன. அவை இரண்டும் பேசிக் கொண்டிருக்கும்பொழுது மற்ற மிருகங்கள் தூரத்திலேயே நின்றுகொண்டிருக்க வேண்டியதாயிற்று. தமனகனும் கரடகனும்கூட இப்பொழுதெல்லால் அவர்களை நெருங்க முடியவில்லை.

பிங்களகனின் சுபாவமான வலிமைக்கு இப்போதெல்லாம் வேலை இல்லாமல் போய்விட்டது. அதுதான் இப்போது மிருகங்களைக் கொல்வதில்லை அல்லவா.

பிங்களகனான சிங்கம் தினமும் வேட்டையாடி ஏதாவதொரு மிருகத்தைக் கொன்று தின்றுவிட்டு மீதியைத் தன்னுடைய பரிவாரங்கள் தின்பதற்கு அளிப்பது வழக்கம். அந்த வழக்கத்தை பிங்களகன் கைவிட்டதால் தமனகன் கரடகன் ஆகிய நரிகளும் இதர மிருகப் பரிவாரங்களும் உணவுக்கு வழி இல்லாமல் பசியால் வாடி, நலிந்திருந்த நிலையில் ஓர் இடத்தில் கூடின.

உயர்ந்த குடியில் பிறந்தவனாகவும் பெருமை மிக்கவனாகவும் ஒரு அரசன் இருக்கலாம். ஆனாலும் அவனிடம் இருப்பதில் பயனில்லை என்றால் ஊழியர்கள் அவனைவிட்டு விலகிப் போய்விடுவார்கள். பட்டுப்போன மரத்தைப் பறவைகள் விட்டு விட்டு வேறிடங்களுக்குச் சென்று விடுகின்றன அல்லவா?

மரியாதை உள்ளவர்களையும் கட்டுப்பாடுகளுக்கு அடங்கி நடப்பவர்களாகவும் மேன்மைக் குணம் உடையவர்களாகவும் எஜமானரிடத்தில் நன்றி உள்ளவர்களாகவும் இருக்கக் கூடிய ஊழியர்கள் சம்பளம் தராத அரசனை விட்டு விலகிச்சென்று விடுவார்கள்.

குறிப்பிட்ட திகதியில் சம்பளம் கொடுக்கக்கூடிய அரசன் என்னதான் மூர்க்கத்தனமாகக் கோபித்துக் கொண்டபோதிலும் ஊழியர்கள் ஒருபொழுதும் அவனை விட்டுவிலகிச் செல்ல மாட்டார்கள். இது முற்றிலும் உண்மையே.

அரசர்கள் நாடுகளை விழுங்கி விடுகின்றனர். மருத்துவர்கள் நோயாளிகளை விழுங்கி விடுகின்றனர். வியாபாரிகள் சரக்கு வாங்கும் வாடிக்கையாளர்களை விழுங்குகின்றனர். அறிவாளிகள் முட்டாள்களை விழுங்குகின்றனர். திருடர்கள் ஏமாந்த சோணகிரிகளை விழுங்குகின்றனர். முதலாளிகள் வேலையாட்களை விழுங்குகின்றனர். பிச்சை எடுப்போர் குடும்பத்தார்களை விழுங்குகின்றனர். வேலையோ எல்லோரையும் விழுங்கிவிடுகின்றது.

வஞ்சகர்கள் பல யுக்திகளைக் கையாள்வார்கள். இரவு பகலாகச் சமயம் பார்த்துக் காத்திருப்பார்கள். சந்தர்ப்பம் வாய்க்கும்போது சிறிய மீன்களைப் பெரிய மீன்கள் விழுங்குவது போல் த்ங்களுடைய வலிமையால் பிறரை அடித்து உண்டு அவர்கள் உயிர் வாழ்கிறார்கள்.

இப்போதெல்லாம் கரடகனுக்கும் தமனகனுக்கும் பிங்களகனின் ஆதரவு இல்லாமல் போயிற்று. அவற்றிற்குத் தேவையான இரையும் இப்பொழுதெல்லாம் கிடைக்கவில்லை. பசியால் தொண்டை வறண்டுபோய் சோர்ந்து உட்கார்ந்துவிட்ட அவை இரண்டும் ஒருநாள் பேசிக்கொண்டன.

தோழனே! இப்பொழுது அரசருக்கு நாம் முக்கியம் இல்லை என்று ஆகிவிட்டது. சஞ்சீவகனின் பேச்சில் ஆசை கொண்டு அதிலேயே அரசர் மூழ்கிக் கிடக்கிறார். தம்முடைய சொந்த அலுவல்களில்கூட அவருக்கு இப்பொழுது அக்கறை இருப்பதில்லை. அரசருடைய பரிவாரங்கள் எல்லாம் எங்கெங்கோ பிரிந்துசென்றுவிட்டன.

இனி நாம் செய்ய வேண்டியது யாது? என்று கேட்டது தமனகன்.

உன் பேச்சுக்கு அரசர் செவி சாய்க்கவில்லை என்ற போதிலும் சரி, இந்த சமயத்தில் நீ அவரை எச்சரித்துத் திருத்த முற்படவேண்டும்.

திருதாஷ்டிரனுக்கு விதுரன் கூறியது போல் அமைச்சர்கள் அரசனுக்குப் புத்திமதிகளை எடுத்துச் சொல்ல வேண்டும்.

மமதை கொண்ட மன்னரை அமைச்சர்கள் கைவிட்டுச் செல்லமாட்டார்கள். மதயானையைப் பாகன் கைவிட்டுவிட மாட்டான்.

மேலும் இந்தப் புல் தின்னும் பிறவியை மன்னரிடம் சேர்த்து வைத்தது உன் குற்றமே தவிர வேறு இல்லை.

(தொடரும்)

09.2014
07

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 70 - ரோமப் பேரரசின் இராணுவம் தளபதி டைட்டஸ் தலைமையில் ஜெருசலேமைக் கைப்பற்றியது.
- 1539 - குரு அங்காட் தேவ் சீக்கியர்களின் இரண்டாவது குருவானார்.
- 1812 - நெப்போலியன் ரஷ்யாவின் முதலாம் அலெக்சாண்டரின் படைகளை பரடீனோ என்ற கிராமத்தில் தோற்கடித்தான்.
- 1821 - வெனிசுவேலா, கொலம்பியா, பனாமா மற்றும் எக்குவாடோர் ஆகியவற்றை உள்ளடக்கிய கிரான் கொலம்பியாக் குடியரசு உருவானது. சிமோன் பொலிவார் இதன் தலைவர் ஆனார்.
- 1822 - பிரேசில், போர்த்துக்கல்லிடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஜோர்ஜியாவின் அட்லாண்டா நகரில் மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர்.
- 1942 - உக்ரேனில் 8,700 யூதர்கள் நாசி ஜேர்மனியரினால் கொலைக்களத்திற்கு அனுப்பப்பட்டனர்.
- 1953 - நிக்கிட்டா குருசேவ் சோவியத் ஒன்றியத்தின் மத்திய குழு தலைவரானார்.
- 1965 - இந்திய எல்லைகளில் சீனா தனது படைகளைக் குவிக்கப்போவதாக அறிவித்தது.
- 1977 - பனாமா கால்வாய் தொடர்பாக பனாமாவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது. 20ம் நூற்றாண்டின் இறுதியில் பனாமா கால்வாயின் கட்டுப்பாட்டை பனாமாவுக்குக் கையளிப்பதாக அமெரிக்கா உறுதி தந்தது.
- 1978 - கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தில் அவ்ரோ விமானம் ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.
- 1986 - தென்னாபிரிக்காவின் ஆங்கிலிக்கன் திருச்சபையின் முதலாவது கறுப்பினத் தலைவராக டெஸ்மண்ட் டூட்டு நியமிக்கப்பட்டார்.
- 1986 - சிலியின் அதிபர் ஆகுஸ்டோ பினொச்செ கொலை முயற்சி ஒன்றிலிருந்து தப்பினார்.
- 1988 - ஆப்கானிஸ்தானின் முதலாவது விண்வெளி வீரர் அப்துல் அஹாட் மொஹ்மண்ட் சோவியத்தின் சோயூஸ் விண்கலத்தில் பூமி திரும்பினார்.
- 1998 - கூகிள் ஆரம்பிக்கப்பட்டது.
- 1999 - இலங்கை இராணுவத்தினரால் யாழ்ப்பாணம் செம்மணியில் கொல்லப்பட்ட 600 இற்கும் மேற்பட்ட தமிழர்களின் புதைகுழி விபரம் தெரியவந்தது.
- 2004 - சூறாவளி ஐவன் கிரனாடாவைத் தாக்கியதில் 39 பேர் கொல்லப்பட்டு 90 விழுக்காடு கட்டிடங்கள் சேதமாயின.

பிறப்புகள்

- 1533 - முதலாவது எலிசபெத், இங்கிலாந்தின் அரசி. (இ. 1603)
- 1913 - அப்துல் காதர் லெப்பை, இலங்கை கவிஞர் . (இ. 1984)
- 1953 - மம்முட்டி, மலையாள நடிகர்
- 1984 - பர்வீஸ் மவுரூவ், இலங்கையின் துடுப்பாளர்
- 1984 - மாலிங்க பண்டார, இலங்கையின் துடுப்பாளர்

இறப்புகள

- 1949 - எல்ரன் மாயோ, ஆஸ்திரேலிய உளவியலாளர (பி. 1880)
- 1997 - மொபுட்டு செசெ செக்கோ, சயீரின் குடியரசுத் தலைவர் (பி. 1930)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்




..விளையாட்டிலும் அப்படி ஒன்றும் மோசம் இல்லை. ஏற்கனவே கூறியபடி ஆடிய 7 டெஸ்ட் போட்டிகளில் 4 செஞ்சுரிகள். மீதி டெஸ்ட்களில் ஐம்பதுக்கும் மேல் நன்றாக ஆடுகிறான்.

செய்யும் தொழிலே தெய்வம் என்பது பழமொழி. ஒரு செயலைச் செய்ய முனையும்போது முழு ஈடுபாட்டுடனும் ஆர்வத்துடனும் ஆழமாகவும் ஆத்மார்த்தமாகவும் அதைச் செய்யவேண்டும். இந்த குணங்கள் அத்தனையும் சச்சினிடமிருந்தது.

ஆனால், காம்ப்ளியிடம் இருந்த மிகப்பெரிய குறை மேற்கூறிய குணங்கள் எதுவுமே அவரிடம் இல்லை என்பதுதான்.

அவர் விளையாட்டை விளையாட்டாகவே எடுத்துக்கொண்டார். அதை சீரியசாக எடுத்துக்கொள்ளவில்லை. இதற்கு ஒரு உதாரணம் கூறலாம்.



சிறிய வயதில் அச்ரேகர் சச்சின், காம்ப்ளி இருவரையும் கிரிக்கெட் விளையாட ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்றார். ஆட்டம் ஆரம்பிக்க சிறிது தாமதம் ஆயிற்று. சச்சினோ இதை நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு அங்கிருந்த மற்ற சிறுவர்களுடன் சேர்ந்து கொண்டு பேட்டிங், பௌலிங், ஃபீல்டிங் என பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தான். ஆனால், காம்ப்ளியோ அருகிலிருந்த ஒரு புளிய மரத்திற்குச் சென்று புளியங்காய் பொறுக்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். திறமை இருந்தும் போட்டியில் ஜெயிக்க வேண்டும் என்ற பொறுப்பில்லாத காரணத்தினால் அவனது எதிர்கால கிரிக்கெட் வாழ்க்கை கேள்விக்குறியாகி விட்டது.

> ✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦
>
> சச்சின் கிரிக்கெட்டிற்காக வாழ்ந்தான் என்றால் காம்ப்ளி உயிர்வாழ்வதற்காக கிரிக்கெட் விளையாடினான். சச்சினுக்கு கிரிக்கெட் ஸ்வாசம். ஆனால், காம்ப்ளிக்கோ வருவாய் ஈட்டித்தரும் தொழில். இன்னும் சொல்லப்போனால், கிரிக்கெட் தவிர உலகில் அனுபவிக்கவும் சந்தோஷப்படவும் எவ்வளவோ இருக்கின்றன என்பது காம்ப்ளியின் எண்ணம். வெளி நாடுகளுக்கு பயணிக்கும்போது விளையாட்டு முடிந்தவுடன் சச்சின் ஓய்வறைக்குத் திரும்பி அடுத்த நாள் ஆட்டத்திற்குத் தன்னை தயார்ப்படுத்திக் கொள்வான். ஆனால், காம்ப்ளியோ கேளிக்கை விடுதிகள், ஹோட்டல்கள் ஆகிய இடங்களுக்குச் சென்று உல்லாசமாக இருப்பான்.
>
> ✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

### காம்ப்ளி-உனக்கு நான் இவ்வளவு பெரிய இடைவெளி?

சச்சின் கொஞ்சம் வசதியான உயர் நடுத்தர வருவாய் குடும்பத்தில் பிறந்தவன். அப்பா பேராசிரியர். சகோதரர் அஜீத்துக்கு நல்ல நிறுவனத்தில் வேலை. மேலும் சச்சின் கிரிக்கெட் ஆர்வத்திற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்ததே குடும்ப உறுப்பினர்கள்தான். சச்சினின் ஒவ்வொரு அசைவையும் புரிந்துகொண்டு அவன் மனம் கோணாமல் கிரிக்கெட் உலகில் அவன் சாதிக்க அவர்களால் முடிந்த அனைத்து உதவிகளையும் அவர்கள் செய்து கொடுத்தனர். ஆனால், காம்ப்ளி குடும்பமோ இதற்கு நேர் எதிர். மிகவும் ஏழ்மையான குடும்பம். அப்பாவுக்கு பந்துப் பகுதியில் பட்டறையில் வேலை. குடும்பத்திலுள்ள மொத்தம் ஏழு பேரையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு. சச்சின் அளவிற்கு காம்ப்ளிக்கு குடும்ப ஊக்குவிப்போ, ஆதரவோ இல்லை. என்றாலும், அவன் கிரிக்கெட் விளையாடுவதற்கு தடைபோடவில்லை. காரணம் அப்பாவிற்கு கிரிக்கெட் ஆர்வம் உண்டு. ஆக, சச்சின் கிரிக்கெட் சூழலுக்கும் காம்ப்ளி கிரிக்கெட் விளையாடிய சூழலுக்கும் நிரம்ப வேறுபாடு இருந்தது. சச்சினுக்கு சங்கோஜம் அதிகம். அதிகம் பேசமாட்டான். கூச்ச சுபாவம் ரொம்ப ரொம்ப ஜாஸ்தி. ஆனால், காம்ப்ளியோ திறந்த வாயை மூடமாட்டான்.

ஓயாமல் பேசிக்கொண்டே இருப்பான். யாருடனும் எளிதில் பழகிவிடுவான். சச்சினுக்கு வீடு மற்றும் கிரிக்கெட் தவிர வேறு எதுவுமே தெரியாது. வீடே கிரிக்கெட் அல்லது, கிரிக்கெட்டே வீடு என்று வாழ்பவன். மேலும் சச்சின் கொஞ்சம் வசதியானவன் என்பதால் பணம் சம்பாதிக்க ஆரம்பித்தவுடன் பெரிய அளவில் பணம் என்பது அவனைப் பாதிக்கவில்லை. ஆனால், காம்ப்ளியின் நிலைமையோ வேறு. அவருடைய வறுமையான குடும்பம் என்பதால் கொஞ்சம் காசு சேர ஆரம்பித்தவுடனேயே அவருக்குத் தலைகால் புரியவில்லை என்றுதான் கூறவேண்டும். புதுப்பணக்காரன் என்ற பழமொழிக்கு சரியான உதாரணமாகத் திகழ்ந்தான் அவன்.

சச்சின் கிரிக்கெட்டிற்காக வாழ்ந்தான் என்றால் காம்ப்ளி உயிர் வாழ்வதற்காக கிரிக்கெட் விளையாடினான். சச்சினுக்கு கிரிக்கெட் ஸ்வாசம். ஆனால், காம்ப்ளிக்கு அது ஒரு வருவாய் ஈட்டித்தரும் தொழில். இன்னும் சொல்லப்போனால், கிரிக்கெட் தவிர உலகில் அனுபவிக்கவும் சந்தோஷப்படவும் எவ்வளவோ இருக்கின்றன என்பது காம்ப்ளியின் எண்ணம்.

கே. ரமேஷ் (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

...நினைவகத்தில் இந்தத் தொகுப்பின் மீது இன்னும் சிறிது செயலாற்றப்படுகிறது. உதாரணத்திற்கு, இப்பொழுது நீங்கள் என்னைப் பார்க்கிறீர்கள் என்றால் அந்தத் தொகுப்பு சக்ஷுவால் பகுத்தாராயப்பட்டு, சித்தத்திற்கும் பிறகு நினைவகத்திற்கும் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நினைவகத்தால் ஆராயப்படுகிறது.

தொகுப்பு பகுத்தாராயப்பட்டு அல்லாத விடயங்களை தள்ளப்படுகின்றன. அதாவது இது ஒரு விலங்கல்ல, இது ஒரு தாவரம் அல்ல. இது ஒரு பாறை அல்ல என்பதுபோல, அல்லாதவற்றைத் தள்ளும் இந்தச் செயன்முறை சித்தத்தால் செய்யப்படுகிறது.


பிறகு இந்தத் தொகுப்பானது மனம் அல்லது மனஸ்-ஐ அடைகிறது. மனம் இந்தத் தொகுப்பின் மீது அடையாளம் காணும் வேலையைச் செய்கிறது. அதாவது, இது ஒரு மனிதன் வகுப்பை எடுத்துக்கொண்டிருக்கும் ஒரு மனிதன் என்று மனம் இதுதான் என்று தீர்மானம் செய்கிறது.

பிறகு, இந்தத் தொகுப்பானது ஒரு பெரிய தாவலில் அஹங்காரத்தை அடைகிறது. அஹங்காரம், உங்கள் பழைய அனுபவங்களின் அடிப்படையில், உங்களின் அடுத்த செயல் அல்லது தீர்மானம் என்ன என்பதை முடிபு செய்கிறது. இதுபோன்ற யோகா அல்லது தியான வகுப்புக்களில் உங்களுக்கு முன்பே அனுபவம் இருந்தால் அவை உங்களுக்கு சரியென்றுபட்டால் அவை உங்களுக்கு உதவுவதாக நீங்கள் நினைத்தால்சரி. இங்கே அமரலாம் என்று தீர்மானிப்பீர்கள். அல்லது இங்கிருந்து போய்விடுவது நல்லது என்று நினைப்பீர்கள்!

இந்த செயன்முறையைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். நீங்கள் என்னைப் பார்க்கிறீர்கள். கண் இந்தச் செய்தியை சக்ஷுவிற்கு அனுப்புகிறது. சக்ஷு இதனை மின் துணுக்குக் குறிப்புகளாக மாற்றுகிறது. பின் நினைவகம், இது அல்ல, இது அல்ல என்று அல்லாதவற்றைத் தள்ளுகிறது. பின்னர், மனம் இதுதான் என்று அந்தத் தொகுப்பை அடையாளம் காணுகிறது. பிறகு இந்த மொத்தத் தொகுப்பும் ஒரு பெரிய தாவலில் அஹங்காரத்தை அடைகிறது. இங்கு உங்கள் முன்னனுபவத்திலிருந்து உட்காரலாமா அல்லது அறையை விட்டு வெளியேறி விடலாமா என்று தீர்மா

**ஆன்மீகம் 10**

**பரமஹம்ஸ சுவாமி**



னிக்கிறீர்கள். நாம் இப்பொழுது கண்ணிற்கும் மனதிற்கும் இடையே நடைபெறும் செயன்முறைக்கான நேரத்தை tp என்று அழைப்போம். tp என்பது கண்ணிற்கும் மனதிற்கும் இடையே நடைபெறும் செயன்முறைக்கு எடுத்துக் கொள்ளும் காலம். கண்ணிற்கும் மனதிற்கும் இடையே நடைபெறும் செயன்முறை தர்க்கரீதியானது மற்றும் விழிப்புடன் நடைபெறுவது. இந்த செயன்முறையை நீங்கள் முழுவதுமாக அறிகிறீர்கள். இது உங்கள் விழிப்புணர்வுடன் நிகழ்கிறது. இப்பொழுது மனதிலிருந்து அஹங்காரத்துக்குச் செல்லும் இந்தப் பெரிய தாவலானது பெரும்பாலும் விழிப்பற்ற நிலையில் நிகழ்கிறது. வாஸ்தவத்தில் இந்தச் சமயத்தில் நீங்கள் எடுக்கும் தீர்மானங்கள் பெரும்பாலும் ஒரு விழிப்பற்ற செயற்பாடாகவே இருக்கிறது. இது உங்கள் விழிப்புணர்வில்லாமலேயே நிகழ்கிறது. இந்த நேரத்தை நாம் tp என்றழைப்போம். இந்த சமயத்தில் நீங்கள் வெறுமனே தர்க்கரீதியற்றுத் தீர்மானிக்கிறீர்கள். உங்கள் தர்க்கரீதியான சிந்தனைக்கு எதிராகத் தீர்மானிக்கிறீர்கள். அதன் விளைவாக நீங்கள் தர்க்கரீதியற்ற அவசரமான முடிவை எடுக்கிறீர்கள். ஏன் இவ்வாறு நிகழ்கிறது? நீங்கள் ஏன் விழிப்பின்றி தீர்மானித்துவிட்டு பின்னர் வருத்தப்படுகிறீர்கள்? இதற்கு காரணம், இந்த விழிப்பற்ற பகுதியானது எதிர்மறை நினைவுகளாலும், அமைதியின்மையாலும், நிரப்பப்பட்டிருக்கிறது. சமஸ்கிருதத்தில் ஸம்ஸ்காரங்கள் என்று அழைக்கப்படும் உங்களின அனைத்து இறந்தகால நினைவுகளும், எல்லா இறந்தகால எண்ண வடிவ அமைப்புகளும், இந்தப் பகுதியில்தான் தொகுப்புகளாகச் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆணையாளரின் அறிக்கையின் பிரதி இலங்.அரசிடம் அனுப்பி வைக்கப்படவுள்ளது

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் புதிய மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட் ராட் அல் ஹுசைன், இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் தொடர்பில் வாய்மூல அறிக்கையை சமர்ப்பிக்கும் முன்னர் அது தொடர்பான பிரதி இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இம்மாதம் 24 ஆம் திகதி இந்த அறிக்கை இலங்கை அரசிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்தநிலையில் அந்த அறிக்கையின் பிரதி நியமப்படி 24 மணித்தியாலங்களுக்கு முன்னதாக இலங்கைக்கு கிடைக்கப்பெற வேண்டும் என்று இலங்கையின் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கைக்கு இலங்கை பிரதிநிதியால் பதில் வழங்க முடியும் என்று அமைச்சு சுட்டிக்காட்டிள்ளது.

இலங்கை பெரும்பாலும் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கைக்கான பதிலை 25 ஆம் திகதி வழங்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. (இ)

# அரசின் எதிராளியாகவே சரத் பொன்சேகாவுள்ளார்

அரசாங்கத்தின் எதிராளியாகவே சரத் பொன்சேகா உள்ளார். எனவே, அவர் மீது எமக்கு நம்பிக்கை இல்லை. இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணையில் சாட்சியமளிக்க தயாரென அவர் கூறுவது அரசாங்கத்தை நெருக்கடியில் தள்ளிவிடுவதற்கான முயற்சியாகும் என தேசிய மொழிகள் மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் வாசுதேவ நாயணயக்கார தெரிவித்துள்ளார்.

நாட்டையோ, படையினரையோ, மக்களையோ பாதுகாக்கும் எண்ணம் சரத் பொன்சேகாவிடம் இல்லை. இருப்பது ஒன்றே ஒன்று தான். அதுதான் பழிவாங்கும் எண்ணமாகும். அத்தோடு சர்வதேச விசாரணையை நாம் எதிர்க்கின்றோம். உள்ளக விசாரணைகள் இடம் பெறும் நிலையில் எதற்கு சர்வதேச விசாரணை யென்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கேள்வி எழுப்பியுள்ளார். (இ)

## தீ விபத்து குறித்து தீவிர விசாரணை

இலங்கை மருந்தாக்கல் கூட்டு தாபனத்தின் தலைமையகத்தில் இடம்பெற்ற தீ விபத்து தொடர்பில் கொழும்பு குற்ற புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்து நேற்று அதிகாலை 1.30 மணியளவில் ஏற்பட்டுள்ளதுடன் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக 4 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பிணையில் விடுவிப்பு

ஜனாதிபதியின் பதாதையை சேதப்படுத்திய இருவரை வலப்பனை நீதிமன்ற நீதவான் தலா 50 ஆயிரம் ரூபா பிணையில விடுவிக்கப்பட்டனர்.

ஹங்குரன்கெத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரிகில்லகஸ்கட மற்றும் பொரமடுல்ல ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி திட்டங்களுக்காக நகரில் பொருத்தப்பட்டிருந்த ஜனாதிபதியின் பதாதை யை குறித்த இருவரும் சேதப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து குறித்த இருவரையும் கைது செய்த பொலிஸார் அவர்களை வலப்பனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே நீதவான் இவ்வாறு உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ)

## மீனவர்களைத் தேட கடற்படை மறுப்பு

தமிழகம் பாம்பன் பகுதியில் இருந்து கடலுக்கு சென்று காணாமல் போயுள்ள மூன்று மீனவர்களையும் தேடும் பணிகளை இலங்கையின் நெடுந்தீவு பகுதியில் மேற்கொள்ள இலங்கை கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் 25 ஆம் திகதி கடலுக்கு தொழிலுக்காக சென்ற நிலையில் படகு பழுதடைந்து கவிழ்ந்தமையால் நான்கு மீனவர்கள் காணாமல் போயிருந்தனர்.


அதில் ஒருவர் அடுத்த நாள் மீட்கப்பட்டார். எனினும் ஏனைய மூவரையும் இதுவரை கண்டு பிடிக்க முடியவில்லை.

இந்தநிலையில் இறந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் அவர்களின் சடலங்கள் நெடுந்தீவு கரையில் ஒதுங்கியிருக்கலாம் என்ற அடிப்படையில் பாம்பன் மீனவர்கள் கடந்த வியாழக்கிழமை தேடுதலுக்காக நெடுந்தீவு கடலுக்கு சென்றனர். எனினும் நெடுந்தீவு கடலில் அவர்களை அனுமதிக்க இலங்கை கடற்படை மறுப்பு தெரிவித்தது.

தேடுதலில் ஈடுபட்டவர்களுக்கு உணவுகளை வழங்கிய இலங்கை கடற்படையினர் அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்து திருப்பியனுப்பிவைத்தனர். இதனையடுத்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணங்களை வழங்குமாறு பாம்பன் மீனவர்கள் தமிழக அரசாங்கத்தை கோரியுள்ளனர். (இ)

# விரோதிகளாகவே பார்க்கின்றது அரசு

## நீதியமைச்சர் ஹக்கீம் ஆதங்கம்; முதுகெலும்பற்றது முஸ்லிம் காங்கிரஸ் என்றும் விளக்கமளித்துள்ளார்



(கொழும்பு)

அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொடுத்து அமைச்சுப் பதவிகளையும் வகிக்கும் நாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விரோதிகளாக பார்க்கப்படும் நிலைமைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு வால்பிடிக்க, கூஜா தூக்க வேண்டுமென்றால் அதை என்னாலும் நன்றாகச் செய்ய முடியும். அப்படி நாம் நடந்தால் முஸ்லிம் காங்கிரஸ் சூடு, சுறனையற்ற கட்சியென போராளிகள் எம்மைச்சாடுவார்கள். சாஸ்டாங்கமாக விழுந்து ஆட்சியாளர்களுக்கு சேவகம் செய்ய வேண்டுமென்ற அவசியம் எமக்கில்லை. அந்த இழிநிலைக்கு எமது கட்சியின் போராளிகளை கொண்டு போய் விடும் கேவலத்தை முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் செய்யாது.


ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை எப்பொழுதுமே உண்மையை எடுத்துக் கூறுவதற்கு தயங்குவதில்லை. நாம் வேறு யாருடைய தயவிலும் தங்கியில்லாத கட்சியென்பதனால் உண்மைகளை இடித்துரைக்க பயப்படுவதில்லை.

இன்று அட்டகாசமான மேலாதிக்கப்போக்கு ஆபத்தானது என்ற விடயத்தை அரசாங்கத்துக்கு எடுத்துக்கூற வேண்டியது அவசியமாகும். அதற்காக எங்களை விரோதிகளாகப்பார்க்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறோம். நாம் கூடயிருந்து குழிபறிக்கும் வேலையை பார்க்கமாட்டோமென கூறிக்கொள்கிறேன்.

கிழக்கு மாகாணத்தில் இனப்பரம்பலை மாற்றுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் வெளிப்பாட்டை அம்பாறை மற்றும் சேருவில தொகுதிகளில் நேரடியாகவே காணலாம். வடக்கிலும் இவை கனதியாக மேற்கொள்ளப்படுகின்றன. அநீதிகள் நடைபெறுகின்ற போது அதை தட்டிக்கேட்கவில்லையாயின் முதுகெலும்பற்ற முஸ்லிம்காங்கிரஸ் என எமது கட்சியின் போராளிகள் எம்மை சாடுவார்கள்.

சிறு விடயங்களைக்கூட விட்டுக் கொடுக்காத அரசின் பிடிவாதப் போக்கினால் புரிந்துணர்வும் நல்லிணக்கமும் சீர்கெட்டு விடுமோ என மக்கள் அச்சம் கொள்கிறார்கள். எங்கள் மீது திணிக்கப்படும் பலாத்காரத்துக்கு எதிராக அல்லது மாறாக நடப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸினால் முடியவில்லையென்றால் நாங்கள் இந்த ஆட்சியின் பங்காளராக இருப்பதில் அர்த்தமில்லை.

அரசாங்கத்திலிருந்து வெளியில் வரவும் எமக்குத்தெரியும். வெளியில் வரும்போது மற்றவர்களை படுகுழியில் தள்ளிவிட்டு வரவும் எமக்குத்தெரியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)



யாழ்.ஏழாலையைச் சேர்ந்தவரும் லண்டனை வசிப்பிடமாக கொண்டவருமான சிவலிங்கம் சிவகாந்தன் என்பவரால் சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான அதிநவீன லேசர் போட்டோ பிரதி இயந்திரமும் நூல்களும் யாழ்.பொது நூலகத்திற்கு நேற்று முன்தினம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்னிலையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபனும் கலந்து கொண்டிருந்தார்.

# வெளிநாட்டு மூலதனங்களை அழுத்தம் காரணமாக பெற முடியவில்லையாம்

அமெரிக்கா போன்ற நாடுகளின் அழுத்தங்கள் அதிகரித்துள்ள போதும் இலங்கையால் போதுமானளவு வெளிநாட்டு மூலதனங்களை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் அனுசரணையில் ஐக்கிய நாடுகளில் மனித உரிமைகள் தொடர்பான பிரேரணை முன் வைக்கப்பட்டது. எனினும் 2020 ஆம் ஆண்டில் 67 மில்லியன் டொலர்கள் என்ற வெளிநாட்டு மூலதன இலக்கை நோக்கி இலங்கைக்கு சென்று கொண்டிருப்பதாக கப்ரால் தெரிவித்தார்.

நியூயோர்க்கின் புளும்பேக் இணையத்தளத்துக்கு செவ்வியளித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகளின் அழுத்தம் காரணமாக சில முதலீட்டாளர்களின் இலங்கை தொடர்பான அக்கறை குறைந்திக்கின்றது. எனினும் அது பாரிய பிரச்சினையை ஏற்படுத்தவில்லை. இலங்கையின் பொருளாதாரம் இந்த வருடத்தில் 7.8 சதவீதமாக விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதன்மூலம் இலங்கையின் உள்நாட்டு உற்பத்தியை 2020ஆம் ஆண்டில் 150 பில்லியன் டொலர்களாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை

## ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனுடனான சந்திப்பின் போது ஜனாதிபதி இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

சில தினங்களில் ஊவா மாகாணசபைத் தேர்தல்கள் இடம்பெறவுள்ளன.


அண்மைய நாட்களாக தேர்தல் வன்முறைகள் மற்றும் விதி மீறல்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் குற்றம் சுமத்தியுள்ளன. குறிப்பாக மொனராகலை மாவட்டத்தில் அதிகளவான வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.



இந்நிலையில் தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, ஆளும் கட்சியினரே அதிகளவில் தேர்தல் விதி மீறல்களில் ஈடுபட்டு வருவதாகவும் தேர்தல் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதாகவும் எதிர்க்கட்சிகள் கடுமையான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராக பொறுப்பேற்றுள்ள பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் என்.தெய்வேந்திரராஜாவுக்கு பாடசாலை அபிவிருத்திக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரிவுபசார விழா அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது விழா நாயகன் தெய்வேந்திரராஜாவுக்கு பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர் எஸ்.ஆனந்தமூர்த்தி பாராட்டுப்பத்திரம் வழங்குவதையும் அருகில் ஹாட்லிக் கல்லூரி புதிய அதிபர் ரி.முகுந்தன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:-தும்பளை செய்தியாளர்)



நிகழ்வின் நிழல்கள்

யாழ்.தென்மராட்சி பிரதேச கலாசாரப் பேரவையின் கலாசார பெருவிழா அண்மையில் தென்மராட்சி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.


இதன்போது **சத்தியவான் சாவித்திரி** நாடகத்தில் சத்தியவானாக நடித்த கொடிகாமத்தைச் சேர்ந்த புகைப்பட கலைஞரும் நாடகக் கலைஞருமான ஏ.வி.எம்.மூர்த்திக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட போது...




நல்லைக்கந்தன் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில் நடைபெற்ற கம்பராமாயண தொடர் இசைப் பேருரைப் பூர்த்தி இடம்பெற்ற போது வயலின் வித்துவான் அ.ஜெயராமனுக்கு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா பொன்னாடை போர்த்தி **சுகஸ்வர ஞான பூஷணம்** என்ற பட்டம் வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

நிகழ்வின் நிழல்கள்


யாழ்.நீர்வேலி காமாட்சி அம்பாள் கோவிலடியில் இயங்கும் பனையோலை கைப்பணி பயிற்சி நிலையத்தில் வடமாகாண தொழிற்றிணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுளகுப் பயிற்சி நெறியில் சித்தியடைந்த திருமதி செல்வராசா புவனேஸ்வரிக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் சான்றிதழ் வழங்குவதையும் அருகில் வடமாகாண தொழிற்றுறை திணைக்களப் பணிப்பாளர் க.சிவகரன் நிற்பதையும் படத்தில் காணலாம்.



நிகழ்வின் நிழல்கள்



அகில இலங்கை ரீதி யாக அண்மையில் ஹற்றன் ஸ்ரீ பாத கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரியின் **தக்கன் வதம்** என்ற வில்லுப்பாட்டு முதலிடம் பெற்றது. இதில் யாழ்.இந்துக் கல்லூரிசார்பாக பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களை படத்தில் காணலாம். (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)



யாழ்.திக்கம் மத்திய சன சமூகநிலையத்தின் கீழ் இயங்கும் திக்கம் பாலர் பாடசாலையில் அண்மையில் நடை பெற்ற கண்காட்சியில் பிர தம விருந்தினராக கலந்து கொண்ட திக்கம் மத்திய சன சமூகநிலையத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய போஷகருமான கதிரவ ரங்கன் கண்காட்சியை நாடா வெட்டி திறந்து வைப்பதை படத்தில்காணலாம். (படம்:-கரணவாய் செய்தியாளர்)



இலங்கை நாடாளுமன்றத்தில் கடந்த 1960 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம்ஆண்டு வரையில் தொடர்ந்து 23 ஆண்டுகள் உடுவில், மானிப்பாய் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினராக மக்களுக்கு சேவையாற்றி மக்களின் நெஞ்சங்களில் நீங்கா இடத்தைப் பெற்ற விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் 29 ஆம் ஆண்டு நினைவு தினம் கடந்த 2 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. 29 ஆவது நினைவுதின நிகழ்வுகள் யாழ்.தாவடியில் அமைந்துள்ள நினைவுத் தூபிக்கு முன்பாக இடம்பெற்ற போது...

நிகழ்வின் நிழல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைத் தேர்தல் முடிவுகள் பா.ஜ.கவுக்கு தோல்வியா?

...கர்நாடகாவில் சித்தராமையாவுக்கும், ம.பியில் சிவராஜ் சிங் சௌகானுக்கும் மக்களிடையே செல்வாக்கு குறையவில்லை என்பதையும் இடைத்தேர்தல் காட்டியுள்ளது. பஞ்சாபில் மக்களின் அதிருப்தியை மீறி, காங்கிரஸ் வசமிருந்து ஒரு தொகுதியை அகாலிதளம் கைப்பற்றியுள்ளது. இதனால் மாநில முதல்வர் பிரகாஷ் சிங் பாதல் நிம்மதி அடையலாம்.

### மோடி அலை வீசவில்லையா?


லோக்சபா தேர்தலில் நாடு முழுவதும் வீசிய மோடி அலை இப்போது எங்கு போனது என்று சில எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளன. நடந்தது மாநில சட்டசபை தேர்தல் என்பதால் தான் மோடியின் செல்வாக்கு முழுமையாகப் பயனளிக்கவில்லை என்பதே இதற்கான பதில். இப்போது லோக்சபாவுக்கு தேர்தல் நடந்தால் 315 தொகுதிகளில் பா.ஜ.க கூட்டணி வெல்லும் வாய்ப்பு இருப்பதாக 'இந்தியா டுடே' வார இதழ் கணிப்பு வெளியிட்டுள்ளதை இங்கு நினைவு கூரலாம்.


தவிர, மோடி மீதான அதீத எதிர்பார்ப்பும்கூட மக்களுக்கு ஏமாற்றம் .அளித்திருக்கலாம் என்பதை பா.ஜ.க கருத்தில் கொள்ள வேண்டும். மோடி பிரதமரான பிறகு பல ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை எடுத்திருந்தாலும், அவரிடம் நாடு இன்னமும் வேகத்தை எதிர்பார்க்கிறது.

குறிப்பாக, காங்கிரஸ் கூட்டணி ஆட்சியின் சீர்கேடுகளால் பாதிக்கப்பட்ட மக்கள் முந்தைய அரசின் செயன்முறை போலவே தற்போதும் சில நடைமுறைகள் தொடர்வதை விரும்பவில்லை. உதாரணமாக, ரயில் கட்டண உயர்வு, பெட்ரோல் விலையுயர்வு ஆகிய விவகாரங்களில் முந்தைய அரசு மீது பழிபோட்டு மோடி அரசு தப்பிவிட முடியாது.

ஊழல் விவகாரங்களில் மோடி அரசு காட்டும் கண்டிப்பு மக்களிடையே நம்பிக்கை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் வெளியுறவுக் கொள்கையில் தென்படும் மாற்றமும், அரசு அதிகாரிகளை கையாள்வதில் காட்டும் உறுதியும், பாராட்டிற்குரியதாகவே உள்ளன. எனினும், கருப்புப்பண மீட்பு நடவடிக்கை, இலங்கைத் தமிழர் விவகாரம், ராமர் கோவில் உள்ளிட்ட பிரச்சினைகளில் இந்த அரசிடம் தெளிவான, உறுதியான செயற்பாட்டை மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தாங்கள் கொண்டுவந்த மக்கள் நலத் திட்டங்களையே பா.ஜ.க அரசு தொடர்வதாக காங்கிரஸ் தலைவி சோனியாவும், தங்கள் அரசின் பொருளாதாரக் கொள்கையையே மோடி அரசு தொடர்வதாக முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரமும் கூறி வருகின்றனர். இதற்கு சரியான பதிலை பா.ஜ.க அரசு இதுவரை தெரிவிக்கவில்லை. காங்கிரஸ் அரசுக்கும் பா.ஜ.க அரசுக்கும் உள்ள வேறுபாட்டை மக்கள் உணரும் வண்ணம் கொள்கைகள் வடிவமைக்கப்பட வேண்டும்.








காப்பீட்டுத் துறையில் அன்னிய முதலீட்டை அதிகரிக்க பா.ஜ.க அரசு எடுத்த முடிவை, பா.ஜ.கவின் சகோதர அமைப்பான பாரதீய மஸ்தூர் சங்கமும் எதிர்க்கிறது. பாதுகாப்புத் துறையில் அன்னிய முதலீட்டுக்கு அனுமதி அளித்தது வரவேற்கப்படும் அதே நேரத்தில், காப்பீட்டுத் துறையில் இதற்கு எழுந்துள்ள எதிர்ப்பை அரசு பரிசீலிக்க வேண்டும்.

இவை அனைத்தையும்விட, ஆட்சிக்கு வந்தபின், பா.ஜ.கவின் கட்சிச் செயற்பாடுகள் சற்று முடங்கி இருப்பதாகவே காணப்படுகிறது.



பா.ஜ.கட்சிக்குள் அதிவேக மாற்றங்கள்



கட்சியின் பலமே ஆட்சிக்கு வலுச் சேர்க்கும். இதனை உணர்ந்து தற்போதைய தேசிய தலைவர் அமித்ஷா, பிரதமர் மோடியுடன் இணைந்து தக்க திட்டங்களைத் தீட்டுவது காலத்தின் கட்டாயம்.

விரைவில் நடைபெறவுள்ள 4 மாநில சட்டசபை தேர்தல்களில் (ஹரியானா, மகாராஷ்டிரா, ஜார்கண்ட், ஜம்மு காஷ்மீர்) எதிர்க் கட்சிகள் வசமிருந்து ஆட்சியைக் கைப்பற்றுவது பா.ஜ.கவுக்கு முன்னுள்ள கடும் சோதனை. வரவுள்ள நாட்களில் பா.ஜ.கவுக்கு எதிரான கட்சிகள் அணி திரளும் வாய்ப்பு அதிகரித்துள்ளதால், பிரதமர் மோடியும் பா.ஜ.க தலைவர் அமித்ஷாவும, தங்கள் படைகளை வலுப படுத்துவது அவசியம்.

பா.ஜ.கவின் ஆட்சிமன்றக்குழு அதிரடியாக மாற்றி அமைக்கப் பட்டுள்ளது பல கேள்விகளை எழுப்பியுள்ளது. கட்சியின் முக்கிய முடிவுகளை எடுக்கும் நாடாளுமன்ற பா.ஜ.கவிலிருந்து முதுமையைக் காரணம் காட்டி வாஜ்பாய், அத்வானி, ஜோஷி ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள், புதிதாக உருவாக்கப்பட்ட வழிகாட்டும் குழுவில் (மார்க்க தர்ஷக் குழு) சேர்க்கப்பட்டுள்ளனர்.

இப்போதைய பா.ஜ.க அணி 70 வயதுக்கு மேற்பட்டோரைத் தவிர்த்து, இளமைத் துடிப்புடன் அணி வகுத்துள்ளது. பா.ஜ.கவை இவ்வளவு காலம் வளர்த்த மும்மூர்த்திகளை மோடி ஒதுக்கிவிட்டதாக விமர்சனங்கள் வந்துள்ளன. அவர்கள், பா.ஜ.கவின் உள்கட்சி ஜனநாயகத்தைப் புரிந்துகொள்ளாமல் பேசுகிறார்கள்.

பா.ஜ.கவின் உள்கட்சி ஜனநாயகம் காரணமாகவே, மோடி போன்ற ஒருவர் நாட்டின் உயர்பதவிக்கு படிப்படியாக முன்னேற முடிந்தது. இந்த நிலையை, பா.ஜ.க தவிர்த்த வேறெந்தக் கட்சியிலும் காண முடியாது. காங்கிரஸ், தி.மு.க, சமாஜ்வாதி, தேசிய மாநாட்டுக் கட்சி, ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா போன்ற பல கட்சிகளில் வாரிசுகள் மட்டுமே தலைமையை அடைய முடிகிறது. சரத்பவார், லாலு யாதவ், சந்திரபாபு நாயுடு, சந்திரசேகர ராவ், மம்தா பானர்ஜி, நவீன் பட்நாயக், ஜெயலலிதா போன்ற தனிப்பட்ட ஆளுமையுடைய தலைவர்களின் கட்சிகள், அவர்களின் காலத்திற்குப் பிறகு என்னவாகும்என்றே சொல்ல முடியாது.

### பாஜக: இளையவர்களுக்கு பெரியவர்கள் வழி விடுவது இயல்பான காட்சி

ஆனால் பா.ஜ.கவோ, மூன்று தலைமுறைகள் மாறியும்கூட, உழைப்பவர்களை உயர்த்தும் கட்சியாக உள்ளது. இளம் தலைமுறையினர் கட்சியை வழிநடத்தும் நிலைக்கு உயர்வதையும், வாரிசு அடிப்படையோ, தனித்த செல்வாக்கோ இல்லாமலும்கூட கட்சியின் செல்வாக்கான பதவிகளைப் பெறுவதையும் பா.ஜ.கவில் மட்டுமே காண முடியும்.

வாஜ்பாய், அத்வானி, ஜோஷி மூவரும் பா.ஜ.கவின் வழிகாட்டும் குழுவுக்கு மாற்றப்பட்டு இரு நாட்கள் கழித்து, தமிழகத்தில் அ.தி.மு.கவின் நிரந்தர பொதுச்செயலாளர் ஜெயலலிதா 7ஆவது முறையாக பொதுச்செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். பா.ஜ.கவை இவ்விடயத்தில் விமர்சிப்பவர்களுக்கு அரசியல் களமே சத்தமின்றி சரியான பதிலை வெளிப்படுத்தியுள்ளது. ஆனால், இதனை ஊடகங்கள் ஏனோ கண்டு கொள்ளக் காணோம்.

பா.ஜ.கவின் தேசிய. மாநில் அளவிலான நிர்வாகிகளின் மாற்றங்கள் முற்றுப் பெறும் போதுதான், புதிய வேகத்துடன் கூடிய செயற்பாடுகள் அக்கட்சிக்கு அமையும். அரசின் ஆக்கப்பூர்வமான பணிகளை மக்களிடையே கொண்டு சேர்ப்பதும், அரசுக்கு எதிரான கருத்தாக்கங்களை பிரசாரத்தில் எதிர்கொள்வதும் பா.ஜ.க முன்னுள்ள முக்கிய பணிகள். அதற்கு கட்சி விரைவில் தயாராக வேண்டும்.

(முற்றும்)

-இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் அனுமதியின்றி வெளிநாடு செல்ல முடியும்

## மத்திய அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

வடமாகாண சபை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இந்தியா அல்லது வெளிநாடுகளுக்கு செல்வதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதிபெற வேண்டிய அவசியமில்லை. அவர் இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டு அந்த நாட்டின் அரச தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எந்தவித தடையுமில்லை என்று அரசின் பங்காளிக் கட்சியான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வடமாகாண முதலமைச்சருக்கு மட்டுமல்ல அனைத்து மாகாண சபை முதலமைச்சர்களுக்கும் மாகாண செயலாளர்களுக்கும் தலைவர்களுக்கும் இவ்வாறு வெளிநாடுகளுக்குச் சென்று பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அரசாங்கம் அனுமதித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் இந்தியா சென்று அந்நாட்டு அரசுடன் பேச்சு நடத்த வேண்டுமானால் அரசாங்கத்தின் அனுமதியை பெற வேண்டும் என்று அமைச்சர் தினேஷ் குண வர்த்தனவும் ஆளுநரின் அனுமதி பெறவேண்டியது அவசியம் என அமைச்சரவையின் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெலவும் கருத்துத் தெரிவித்திருந்தனர். இது குறித்து அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டு அந்நாட்டு அரசுத் தலைவர்களுடன் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு எவ்விதமான தடையும் இல்லை. இந்தியாவுக்கு மட்டுமல்ல எந்தவொரு நாட்டுக்கும் விஜயத்தை மேற்கொண்டு பேச்சுவார்த்தைகளை நடத்தலாம்.

அபிவிருத்திக்கான ஒத்துழைப்புக்களை கோருவதற்கும் முடியும். அதற்கு எந்தவிதத்திலும் தடையில்லை. அத்தோடு மத்திய அரசாங்கத்தின் அனுமதியை கேட்க வேண்டிய அவசியமுமில்லை.

வடமாகாண முதலமைச்சருக்கு மட்டுமல்ல அனைத்து மாகாண சபை முதலமைச்சருக்கும் மாகாண செயலாளருக்கும் தலைவருக்கும் இவ்வாறு வெளிநாடு சென்று பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. இதற்கு எந்தவிதமான தடையும் விதிக்கப்படவில்லை. இலங்கையின் அரசியலமைப்பிலும் இதற்கு தடைகள் இல்லை.


வாசு

ஆனால், வடமாகாணத்தின் பிரச்சினைகளின் தீர்வுகள் தொடர்பாக இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த முதலமைச்சர் விரும்பினால் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி அரச பிரதிநிதியொருவரையும் தன்னுடன் கூட்டிச்செல்வதே நன்மைபயக்கும். ஏனென்றால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு முத்தரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டியது அத்தியாவசியமாகும்.

இப்பிரச்சினையோடு இலங்கை, இந்தியா மற்றும் தமிழ் தரப்பென மூன்றும் பின்னிப் பிணைந்துள்ளன. இதனை தனித்தனியாக பிரிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## ஜானக பெரேராவின் கொலையுடன் தொடர்புடையவருக்கு கடூழிய சிறை

(கொழும்பு)

வடமத்திய மாகாணத்தின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் இராஜதந்திரியுமான மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா படுகொலையுடன் தொடர்புடைய முன்னாள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினருக்கு 20 ஆண்டு கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினரான சண்முகநாதன் சுதாகரன் என்பவருக்கு அனுராதபுரம் உயர் நீதிமன்றம் இந்த தண்டனையை அறிவித்துள்ளது.

அனுராதபுரம் உயர் நீதிமன்ற நீதவான் சுனந்தகுமார ரட்நாயக்கவினால் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது படுகொலைச் சம்பவத்துடன் தொடர்பு உள்ளதாக வழக்கின் இரண்டாம் பிரதிவாதியான சுதாகரன் நீதவானிடம் ஒப்புக்கொண்டிருந்தார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு எதிர்க்கட்சிக் காரியாலய திறப்பு விழா நிகழ்வுகளில் பங்கேற்ற மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்டவர்கள் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலில் ஜானக பெரேரா உள்ளிட்ட 29 பேர் கொல்லப்பட்டனர். முதலாம் பிரதிவாதிக்கு எதிரான வழக்கு விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## சுப்பிரமணியம் சுவாமியை கட்டுப்படுத்தியாக வேண்டும்

### பா.ஜ.கவை நோக்கி ஜி.கே.வாசன்


ஜி.கே.


சுவாமி

இலங்கை விவகாரத்தில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் சுப்பிரமணியன் சுவாமியை பா.ஜ.க. உயர்மட்டத்தினர் கட்டுப்படுத்த வேண்டும் என ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

அரியலூரில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய போதே ஜி.கே. வாசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை விவகாரத்தில் சுப்பிரமணியன் சுவாமி வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிறார். அவரைக் கட்சி மேலிடம் கட்டுப்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இந்திய தொலைக்காட்சி ஒன்றுக்கு அண்மையில் பேட்டி அளித்திருந்த சுப்பிரமணியம சுவாமி, இலங்கைக் கடலில் அத்துமீறும் இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்க வேண்டாம் என தான் இலங்கை அரசிற்கு ஆலோசனை வழங்கியிருந்ததாக கூறியிருந்தார்.

கைது செய்யும் மீனவர்களை விடுவிக்கும் படி தான் கோரியதாகவும் மீனவர்கள் தொழிலாளர்கள், என்றும் படகு உரிமையாளர்கள் பணக்காரர்கள் என்றும் தான் இவ்வாறு ஆலோசனை வழங்கியிருந்ததாகவும் தெரிவித்தார்.

அவரது இந்தக் கருத்து தமிழகத்தில் பெரும் எதிர்ப்பலைகளை ஏற்படுத்தியிருந்தது. இதேவேளை எதிர்ப்புகளை எதிர்கொள்ள முடியாத நிலையில் சுப்பிரமணியம் சுவாமி தான் அவ்வாறு கூறவில்லை என்று பல்டியடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## வாரம் ஒரு தகவல்

### முதலும் முடிவும்

"சேர் உங்களிடம் ஒரு யோசனை கேட்க வேண்டும்."

"என்னிடம் யோசனை கேட்க என்ன காரணம் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?"

"உங்களுக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகிவிட்டது. அதனால் தான்!"

"சரி கேளுங்க"

நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாமா, வேண்டாமா சேர்?"

"எப்படி இருந்தாலும் கல்யாணம் செய்து கொள்! நல்ல மனைவி வாய்த்தால் சந்தோஷமாக இருப்பாய்! மோசமான மனைவி கிடைத்தால் நீ ஞானியாவாய்!"

"அப்படியா சேர்?"

"ஆமாம். இது நான் சொல்லவில்லை. சோக்கிரடீஸ் தான் இப்படி சொல்லியிருக்கிறார்"

"நான் ஞானியாக வேண்டும் என்று ஆசைப்படவில்லை சேர்"

"அப்படியானால் மனைவியை நேசிக்கக் கற்றுக் கொள்"

"அது எப்படி"

"ஒருவனுக்குத் தன் மனைவியின் பழக்கவழக்கங்களில் ஏதேனும் ஒன்று பிடிக்கவில்லையெனில் அதற்காக அவளை அவன் வெறுத்தலாகாது. அவற்றுள் அவனுக்குப் பிடித்த ஒன்றை நினைத்து அவன் அவளை நேசிக்கட்டும் என்கிறார் நபிகள் நாயகம் (ஸல்)"

சான்றோர்களின் சிந்தனைகளைக் கூறியதற்கு நன்றி சேர். இது சம்பந்தமாக உங்களுடைய சொந்த சிந்தனையை தெரிந்து கொள்ள ஆசைப்படுகின்றேன்.

"என்னைப் பொறுத்த வரை குடும்பத்தில் கணவன்– மனைவிக்குள் சண்டையே வரக் கூடாது. அதுதான் நல்ல குடும்பம்"

"உங்கள் குடும்பத்தில் சண்டையே வந்ததில்லையா?"

"எனக்குக் கல்யாணமாகி 20 வருடத்தில் இது வரைக்கும் ஒரு தடவை தான் சண்டை வந்திருக்கு. அதுவும் கல்யாணம் ஆன புதிதில்!"

"அதற்குப் பின் வரவேயில்லையா?"

"வருவதற்கு சான்சே இல்லை!"

"ஏன்?"

"அந்த முதல் சண்டையே இன்னும் முடியவில்லையே!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலபோக நெற்செய்கைக்காக நிலம் பண்படுத்தலில் ஈடுபடும் விவசாயிகள்

(பூநகரி)

மழை பெய்து நிலம் குளிர்ச்சியடைந்ததையடுத்து காலபோக நெற்செய்கைக்கான நிலம் தயார்படுத்தலில் பூநகரி பிரதேச விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

நீண்ட காலத்தின் பின் பெய்துள்ளள மழையினால் விவசாய நிலங்களுக்கு ஓரளவு நீர் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதனையடுத்து உழுது பண்படுத்தும் வேலையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.






அத்துடன் காலபோக நெற்செய்கைக்கான ஆரம்பகட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை சென்ற ஆண்டில் முற்றாக பருவமழை பெய்யாததன் காரணமாக 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் வயல் நிலங்கள் முற்றாக அழிவடைந்தன.

இதனால் விவசாயிகள் பெரும் நட்டத்தை சந்தித்தனர்.

இந்நட்டத்தை ஈடுசெய்ய விவசாயிகளுக்கு உரக்கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் என எதிர்பார்த்த காப்புறுதி உதவிகளோ, நட்ட ஈட்டுத்தொகையோ கிடைக்காத நிலையில் விதை நெல்லைப் பெற்றுக்கொள்வதில் அவர்கள் பெரும் சிக்கலை எதிர்கொண்டனர்.

இப்பிரதேசத்தில்விதைப்புக்கான விதை நெல்லைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது.

வெளி மாவட்ட விவசாயிகளிடமிருந்தே விதைப்புக்கான விதை நெல்லைப் பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆதலால் இதுவரை வறட்சி அழிவுக்கான அரசின் உதவிகள் கிடைக்காத நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து கூடிய விரைவில் விதை நெல்லைப் பெற்றுக்கொள்ள ஆவன செய்யுமாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-84)

# தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு வவுனியாவில்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாடு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகியது.

இம்மாநாடு தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த மாநாட்டில் முதல் நாள் நிகழ்வாக கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களது கூட்டம் நடைபெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியினர் மற்றும் அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவும், மாலை 4 மணிக்கு இளைஞரணி மாநாடும் நடைபெற்றது. இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கட்சியின் பேராளர் மாநாடும், பிற்பகல் 2 மணிக்கு கட்சியின் தேசிய மாநாடும் நடைபெறவுள்ளன. (2-250)



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் திருவையாறு கிராமத்தில் ஜப்பானிய மக்களின் நிதியுதவியுடன் யு. என் ஹபிரற் நிறுவனத்தினரால் 28 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்ட போது...

# மன்னார் மாவட்டத்தில் AO -14 பிரதான வீதி அகலிப்பு பணி துரிதகதியில் இடம்பெறுகிறது

## வீதி அபிவிருத்தி சபை

(மல்லாவி)

மதவாச்சியிலிருந்து மன்னார் ஊடாக தலைமன்னார் வரை செல்லும் மன்னார் மாவட்டத்தின் பிரதான வீதி யான AO-14 வீதியின் அக லிப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவ தாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாண பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் மன்னார் பிரிவு ஊடாக குடிநீர் பெற்றுக்கொள்ள விரும்பும் குறித்த வீதிக்கு அருகில் குடியிருக்கும் மக்களின் கவனத்திற்கென அறிவித்தல் ஒன்றையும் அவர் விடுத்துள்ளார். அவ்வறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

மதவாச்சியிலிருந்து மன்னார் ஊடாகத் தலைமன்னார் வரையான AO-14 வீதியின் 47+000 கிலோ மீற்றரிலிருந்து 7+500 வரையான பிரதான வீதி புனரமைப்பும் அகலிப்பும் செய்யப்பட்டு வருகிறது.

இதன்போது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின்மன்னார்பிரிவுஊடாக நீர்வழங்கல் வசதியினை பெற்றுக்கொள்ள விரு ம்புபவர்கள் சம்பந்தப்பட்ட குடிநீர் பிரிவுடன் தொடர்பு கொண்டு நீர் இணைப்புகளுக்கான வேலைகளை பூர்த்தி செய்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

இப்பாதை புனரமைப்புகள் பூர்த்தி செய்யப்பட்டதன்பின் தங்களுக்கான குடிநீர் சேவைகளுக்காக வீதியின் குறுக்காக பாதையை சேதப்படுத்தி குழாய் இணைப்புகளுக்கான அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதை அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளரின் 021 222 2826 என்ற தொலைபேசி இலக்கமூடாகவோ அல்லது 021 222 2517 என்றதொலைநகலூடாகவோ மற்றும் மன்னார் மாவட்ட நிறைவேற்று பொறியியலாளரின் 023 222 2126 என்ற தொலைபேசி இலக்கமூடாகவோ தொடர்பினை ஏற்படுத்தி தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமென அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (2-15)

# மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் மாணவன் மீது சரமாரியாக தாக்குதல்

(கிளிநொச்சி)

பாடசாலை முடிந்து வீதியால் சென்று கொண்டிருந்த மாணவன் மீது மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் சரமாரியாகத் தாக்கியதில் குறித்த மாணவன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளி/திருவையாறு மகா வித்தியால மாணவர்கள் கடந்த 5 ஆம் திகதி பாடசாலை முடிந்துவீதியால்சென்றுகொண்டிருந்த வேளை அக்கிராமத்தை சேர்ந்த நபர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் அவ்வீதியூடாக பயணித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த மாணவர்களில் ஒருவரின் கை தனது மோட்டார் சைக் கிளில் தட்டுப்பட்டதையடுத்து அவர் அம்மாணவனை தாக்கியுள்ளார். கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயத்தில் 10 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் ஞானேஸ் காலேப் என்ற மாணவனே தாக்குதலுக்கு உள்ளனவராவார். குறித்த மாணவன் அடியின் அகோரத்தால் பாடசாலைக்கு திரும்பி ஓடியுள்ளான். அவனை பின் தொடர்ந்த மோட்டார் சைக்கிள் நபர் பாடசாலையினுள் நுழைந்து அதிபர், ஆசிரியர்கள் முன்னிலையில் மீண்டும் விரட்டி விட்டு சென்றுள்ளார். இதனையடுத்து பெற்றோருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் அவ்விடத்திற்கு வருகை தந்த அவர்கள் மாணவனிடம் நடந்தவற்றை விசாரித்துள்ளனர்.

நடந்தவற்றை விபரமாகக் கூறிய மாணவன் தனது ஒரு காதுகேட்கவில்லையென கூறி அப்படியே மயங்கி தரையில் வீழ்ந்தான். பெற்றோர் இம்மாணவனை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்தனர்.

இது தொடர்பில் பாடசாலை சமூகம் மாணவன் மீது எதுவித அக்கறையும் கொள்ளவில்லை என பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலும் மனிதவுரிமை ஆணைக்குழுவினரிடமும் முறையிட்டுள்ளனர். (2-271)

# தென்னை, பனை மரங்களில் தொழில் செய்ய முடியாத நிலை

## தொழிலாளர்கள் கவலை



(கிளிநொச்சி)

இவ்வருடம் ஏற்பட்ட கடும வறட்சியால் தென்னை மற்றும் பனை மரங்கள் முழுமையாக வாடியும் செழிப்பின்றி பயனற்றவையாக காணப்படுவதால் சீவல் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலையில் நாளாந்தம் தமது வாழ்வாதாரத்தை முன்னேற்ற முடியாது உள்ளதாக சீவல் தொழிலில் ஈடுபடுவோர் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி, கண்டாவளை, வட்டக்கச்சி ஆகிய பிரதேசத்தைச் சேர்ந்த சீவல் தொழிலாளர்களே தமது தொழிலை செய்ய முடியாதுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் காலகாலமாக இத்தொழிலையே நம்பி வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது தாம் தொழிலின்றி வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாகவும் வறுமை தொடர்ந்து வாட்டி வருவதால் தமக்கான கிளிநொச்சி பனை, தென்னை வள உற்பத்தி கூட்டுறவு சங்கத்தை நாடிய போதும் எதுவித பயனும் கிடைக்கவில்லையென அவர்கள் ஆதங்கம் வெளியிடுகின்றனர்.

முன்பெல்லாம் எங்களிடமிருந்து பதநீர் பெறுகின்றபோது ஒரு போத்தலுக்கென்று பிடிக்கின்ற பிடிப்பணத்திலிருந்து அரைப்பங்கு பணத்தையாவது எமது வறுமை நிலையினை போக்க தந்துதவினால் பெரிதும் உதவியாக இருக்கும்.

தற்போது இச்சங்கத்தின் பதிவில் 520 சீவல் தொழிலாளர்கள் இருக்கின்றபோதும் எங்களுக்கென இச்சங்கம் இருந்தும் வேலை இல்லாத் திண்டாட்ட நிலையில் எம்மிடமிருந்து பெற்ற பிடிப்பணத்திலிருந்து வட்டியில்லாக் கடன் வழங்காது இருக்கின்றனர்.

இதைவிட இத்தொழிலை நம்பி, தென்னை மற்றும் பனை மரங்களை சீவுவதற்காக ஆயத்தம் செய்து தொழில் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையில் நாட்டில் தற்போது ஏற்பட்ட கடும் வரட்சியால் எங்கள் தொழிலை முன்னெடுக்க முடியாது பின்னடைவு ஏற்பட்டது.

எனவே, எமது குடும்பங்களின் வாழ்வாதாரத்தை தொடர்ந்து முன்னெடுக்க சம்பந்தப்பட்டவர்கள் உதவ முன்வர வேண்டுமென பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## ஆகமங்களின் முன்னறிவிப்பு


யதார்த்தத்தை
தெளிவுபடவுரைக்கும்
நடுநிலை முகங்களுக்கு முன்
பரவிவிழுகின்றன எச்சில் துளிகள்
ஜீரணிக்கா ஏளனத்தின் வெளிப்பாடாக
புன்னகைக்கும் பொய்மைகளின்
மறுபக்க வடிவங்களுக்கு
இப்பொழுதுங்கூட
பூமாலைகளும்...
புகழ்வாழ்த்துக்களும்...
தாராளமாய்!
தலைகவிழ்கிறது
பக்கம்சாரா மனசாட்சி!
தாண்டவமாடுகிறது
அராஜகங்களின் பெருநீட்சி!
இதோ!
யாவும்
முடிவடையும் காலம்
நெருங்குவதாக
மீண்டும்
முன்னறிவிப்புச் செய்கின்றன
ஆகமங்களின்
நியமக் கோட்பாடுகள்

**அலெக்ஸ் பரந்தாமன்**
**புதுக்குடியிருப்பு**

## ஒய்யாரமாய் ஓடுங்களேன்...

தினம்தினம் ஓட்டம்தான்
தீர்வுகளும் ஓடற்ற ஓட்டை வீடுகளாய்
திசையில்லா பயணமாய்
திருப்தியற்ற வாழ்க்கை
ஏன் வாழ்கின்றோம் என்று
எதுவித அர்த்தமுமின்றி
எப்படி வாழ்கின்றோம் என்று
எண்ணிக்கூடப் பார்க்காமல்
காலை முதல் மாலைவரை
காளையர் முதல் காவோலை வரை
கண்மண் தெரியாமல் ஒரே ஓட்டம்
யார் வெற்றி யார் தோல்வியென்று
தீர்ப்பு சொல்வது என்னவோ காலம்தான்
ஆயினும் கணிப்புக்கள் தவறி
தள்ளாடி தடுமாறும் வரை
தினம்தினம் இவர்கள்
ஓடத்தான் போகிறார்கள்
ஓய்வு இல்லாமல் இறுதியில்
ஒப்பாரி இசைக்கும் போதாவது
ஒய்யாரமாய் ஓடுங்களேன்

**அ.நளினாசினி**
**கோண்டாவில்**



## பஸ்சில் படும்பாடு

அவித்த பிட்டை விழுங்கி
அரைமிடறு நீர் பருகி
வேகமாகி
மிதிவண்டிக்கு உயிர்தந்து
வந்துவிட்டேன் பஸ்ராண்டு
முக்கி முனகி பெருமூச்சைவிட்டபடி
வந்தது பஸ்சை
பட்டென்று மறித்தேன்
பாதிகால் படியில்
பஸ் எடுத்தான் ட்ரைவர்
நல்லகாலம் சாகவில்லை
உள்ளே போ உள்ளே போ
உறுமினான் கெண்டக்ரர்
வேதவாக்கென்று
வேகமாய் உள்ளே போனேன்
என்னருகில் ஓர் கிழம்
அதனருகில் ஓர் இளம்
கிழம்பட்ட பாட்டை
எப்படி நான் இங்குரைக்க
கேடுகெட்ட சங்கதிதான்
பெண்ணவளுக்கு அவஸ்தை
பெரிசுக்குப் பேரிச்சை
வாழ்க்கையை அனுபவித்த அவருக்கு
இப்படியும் கேட்கிறதோ?
இது ஒன்று இன்னும் பல

**அ.பதீமினி**
**மிருசுவில்**

## இமயம் தொட...


அதிகாரங்களை
உன்னுள் கட்டுப்படுத்து
அரவணைப்புக்களை
எப்போதும் பரவவிடு
துஷ்பிரயோகங்களுக்கு
முற்றுப்புள்ளியிட்டு
தூய அன்பை வெளிப்படுத்து
இல்லை என்பதைவிட
இருப்பதை பயன்படுத்து
பயன்; பண்படும்

மாவை.நா. கஜேந்திரன்

## விடியாத இரவுகள்

அடுப்பிலே
சுடுநீர் வைக்கையில்
ஒருநாள் கஷ்டம்
உணவு சமைக்கையில்
மறுநாள் கஷ்டம்
அடுப்பே தஞ்சமென
மாறிய பின்
தினமும் கஷ்டம்
வீட்டுக்கு
கூலிப்பணத்தை
ஒழுங்காக
தராதமையால்
வீட்டிலே பஞ்சம்
விடியாத இரவுகளாய்

**மருதங்கேணியூர்**
**வே.வே.அகிலேஸ்வரன்**



## பால் நினைந்தூட்டும்

நீறான தேசத்தில்
நீ மட்டும் எச்சமோ...?
நிலைத்த தமிழர் தடயங்களில்
நீயும் தான் அடக்கம்...
நினைந்தூட்டு தாயே
நின் உதிரத்தோடு
தேசப்பற்றையும்

அம்மு

## முதியோர் இல்லம்

நன்றியுள்ள ஜீவனே– உன்னை
ஊட்டி வளர்க்கும் அன்னைக்காய்
ஆட்டிவைப்பாய் வாலை–ஆனால்
மாந்தர்களோ அன்னைக்காய்
ஆக்கிவைத்தனர்
முதியோர் இல்லங்கள்

பி.வேதிகா
வ/கனகராஜன் குளம் ம.வி

## பாச உணர்வு

பசியோடு வீதியில் கிடக்கும்
ஏழைக்கு ஒருபிடி சோற்றை
புசி என்று கொடுக்காது
விலகிச் செல்லும் காலத்தில்
தனக்குணவு இல்லாவிடினும்
தன்குட்டிகளின் பசிபோக்க
உதிரத்தை பாலாக ஊட்டவிடும்
நாயின் பாச உணர்வு மேலானது

துரை
தென்மட்டுவில்

# மௌனத்தின் தேடல் – 219

## தாய் அன்பு

நோயில்லை பயமில்லை
வயிற்றிலே பசியில்லை
உயிர் குளிர்ந்து உடல் செழித்து
வாயில்லா ஜீவனுக்கும்
தாயிருந்தால் துன்பமில்லை
அதைத்தான் நாய்த்தோல்
என்றாலும் தாய்த்தால்
வேண்டும் என்பர்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## கற்றுக் கொள்வார்கள்

வற்றாத தாய்மடியில்..
வாயருந்தும் பிள்ளைகளே
உங்களிடம்
கற்றுக் கொள்ளட்டும்
கருணையின் இலக்கணத்தை

த.பருத்திதாசன்

## பாடம்

ஆறறிவு மனிதா தன்குட்டிகளுக்கு
அன்போடு பாலூட்டும்
இந்த ஐந்தறிவு மிருகத்திடம்
நீ கற்க நிறையவே உண்டு

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## பாசப்பிரிவு

ஒரு தாயின் அரவணைப்பில்
பல உயிர்கள் இணைந்திருக்கும்
இவ்வுயிர்கள்
நாளை பல திசையில்
பிரிந்துவிடும் பாசப்பறவைகள்

## தாய்

தாயிழந்து தவித்த
கன்றுகளுக்கு
பன்றியாய் வந்து
பால் குடித்த
பரமன் போல
தாயிழந்த குட்டிகளுக்கு
தாயாய் மாறி
பாலூட்டும்
நாயே..
நீ அன்பின் தாயே!

சி.தனுஷா
யாழ்ப்பாணம்

## குமுறல்

யார் பெத்த
குஞ்சுகளோ
பசியில்
துடிக்கையில்
பால் கொடுக்கும் தாயே
நாயென்று
மனிதரை
உவமை
கொள்வது சரியோ?
என நீ குமுறுவது
எம் காதில்
கேட்கிறது

சி.தர்சிகன்
யாழ்ப்பாணம்

## பகுத்தறிவு

இதுதான் இந்த மனிதர்க்கு
நீ உபதேசிக்கும்
முதல் பாடம்
படித்துக்கொள்ளுங்கள்
மனிதர்களே
ஐந்தறிவு ஜீவனிடமிருந்து
அன்பு கருணை என்பதை


சி.ரேணுஜா

## இதுவரை

வளரும் வரை
சேய்க்கு தாயல்லவா!
கனியும் வரை
காய்க்கு மரமல்லவா!
உறங்கும் வரை
உடலுக்கு பாயல்லவா!
அடங்கும்வரை
உயிருக்கு மெய்யல்வா!

அராலியூர்
சோ.சிவகுமாரன்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –220



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 10.09.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு உக்ரைனில் போர்நிறுத்தம்; இராணுவம் வாபஸ் பெறுகின்றது



அரசு மற்றும் போராட்டக் காரர்கள் இடையே கிழக்கு உக்ரைனில் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. உக்ரைனில் கிழக்கு பகுதியில் டொனெட்ஸ்க், லூகான்ஸ் மாகாணங்களில் ரஷ்ய மொழி பேசுபவர்கள் மெஜாரிட்டி ஆக உள்ளனர். கிழக்கு உக்ரைனில் தங்களுக்கு தன்னாட்சி அதிகாரம் கேட்டு போராட்டம் நடத்தினார்கள்.

இவர்களுக்கு ரஷ்யா ஆதரவு அளித்ததால் உள்நாட்டு போர் ஆனது. கிழக்கு உக்ரைனில் அரசு படைகளுக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே கடந்த 5 மாதங்களாக கடும் சண்டை நடந்தது. 2 ஆயிரத்து 600 பேர் உயிரிழந்தனர். ரஷ்யாவுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் பொருளாதார தடை விதித்தன.

உக்ரைனில் நிலைமை நாளுக்கு நாள் மோசமானது. இந்த நிலையில் இருதரப்புக்கும் இடையே போர் நிறுத்தம் ஏற்பட அண்டை நாடான பெலாரஸ் முயற்சி மேற்கொண்டது. அதைத்தொடர்ந்து பெலராஸ் தலைநகர் மின்ஸ்க் நகரில் போர்நிறுத்தம் குறித்து பேச்சுவார்த்தை நடந்தது.

அதில் உக்ரைன் அரசு பிரதிநிதிகளும், போராட்டக்காரர்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். முடிவில் போர்நிறுத்தத்துக்கு இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டனர். அதைத் தொடர்ந்து போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இத்தகவலை உக்ரைன் ஜனாதிபதி பெட்ரோ பொரொ சென்சோ டுவிட்டரில் தெரிவித்துள்ளார். அதை போராட்டக்காரர்களின் தலைவர் அலெக்சாண்டர் ஷகான் சென்கோவும், உக்ரைனுக்கான ரஷ்ய தூதர் மிக்கைல் ஷீராபோவும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கிழக்கு உக்ரைனுக்கு தன்னாட்சி வழங்குவது, இராணுவதை வாபஸ் பெறுவது மற்றும் இரு தரப்பிலும் தலா ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறைக்கைதிகளை விடுவிப்பது உட்பட 12 அம்சங்கள் ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ)

# வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட ஒன்பது இராணுவ வீரர்கள் மாயம்

காஷ்மீர் மாநிலத்தில் பெய்து வரும் கனமழை மற்றும் வெள்ளப் பெருக்கில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டிருந்த 9 இராணுவ வீரர்கள் ஜீலம் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் புல்வாமாவில் 9 இராணுவ வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜீலம் ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால் அவர்களை மீட்கும் பணியில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

வெள்ளம் காரணமாக ஸ்ரீநகரின் தெற்கே விமான நிலைய சாலை பகுதிகளுக்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ)

## வீட்டின் சுவர் இடித்து வீழ்ந்தது

# ஒரே கும்பத்தை சேர்ந்த 8 பேர் பலி

பஞ்சாபில் தொடர்ந்து சில நாட்களாக கன மழை பெய்து வரும் நிலையில் தல்லா என்ற கிராமத்தில் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் பலியாகினர். ஒருவர் படுகாயத்துடன் மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு அனைவரும் உறங்கிக் கொண்டிருந்த போது வீட்டின் தளம் இடிந்து கீழே விழுந்ததில், தந்தை, தாய் அவரது 3 மகன்கள், ஒரு மகள், 2 பேத்திகள் என 8 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். பெண்ணொருவர்' படுகாயத்துடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பஞ்சாபில் பெய்து வரும் கன மழை காரணமாக ஆங்காங்கே வீடுகள் இடிந்து விழும் சம்பவங்கள் நிகழ்கின்றன. (இ)

# ஆசிரியர் சேவைக்கு சிறந்த மாணவர்கள் வருவது குறைவு-பிரதமர் நரேந்திரமோடி

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் நாடு முழுவதிலும் உள்ள பள்ளி மாணவர்களிடம் வீடியோ கான்ஃபரன்சிங் மூலம் பேசினார். இதனை இந்தியா முழுவதும் இலட்சக்கணக்கான மாணவர்கள் பார்த்தனர். பலர், இந்த வீடியோ கான்ஃபரன்சிங்கில் பங்குபெற்று பிரதமரிடம் கேள்விகளையும் கேட்டனர்.

பிரதமரிடம் கேள்விகேட்பதற்கு நாடு முழுவதுமிருந்து இரண்டாயிரம் மாணவர்கள் தேர்வுசெய்யப்பட்டிருந்தனர். நாடு முழுவதும் பத்து மாநிலங்களில் 600 வீடியோ கான்ஃபரன்சிங் மையங்கள் இதற்காக உருவாக்கப்பட்டிருந்தன. தமிழ்நாட்டில் திருவண்ணாமலையில் உள்ள கேந்திரிய வித்தியாலயா பள்ளியில் மட்டும் இதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. தமிழகத்தில் உள்ள மத்திய அரசுப் பள்ளிகளான கேந்திரிய வித்யாலயா பள்ளிக்கூடங்களில் மோடியின் பேச்சை கேட்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதேபோல, சிபிஎஸ்சி பாடத்திட்டத்தைப் பின்பற்றும் வேறு சில தனியார் பள்ளிகளும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தன.

**இந்தியில் பேசினார் மோடி**


சென்னையில் பிரதமர் மோடி பேசுவதைக் கேட்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு பள்ளியில் படிக்கும் மாணவர்களிடம் இது குறித்துக்கேட்டபோது, அவர்கள் மிகுந்த உற்சாகத்தை வெளிப்படுத்தினர். இருந்தபோதும், பிரதமர் மோடி இந்தியில் பேசியதால், சில மாணவர்கள் தங்களுக்கு ஓரளவுக்கே புரிந்ததாகவும் தெரிவித்தனர்.

பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரை, பிரதமரின் பேச்சை விளக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகக் கூறுகின்றனர். பெரும்பாலான சிபிஎஸ்சி பள்ளிக்கூடங்களில் இந்தியும் ஒரு பாடமாக இருப்பதால், பிரதமரின் பேச்சைப் புரிந்துகொள்வதில் சிக்கல் ஏற்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

முதல் முறையாக பிரதமர் மாணவர்களுடன் பேசுவது, நல்ல விடயமாக இருந்தாலும் அவர் இந்தியில் பேசியதால் எத்தனை பேருக்குப் புரிந்திருக்கும் என்று பெற்றோர் சிலரும் கருத்துத் தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி "உலக அளவில் ஆசிரியர்களின் தேவை நாளுக்கு நாள், துறைக்கு துறை அதிகரித்துக்கொண்டே போகிறது. ஆனால் நல்ல மாணவர்கள் ஏன் இந்தத் துறைக்கு வருவது குறைந்துகொண்டு போகிறது என்பது மட்டும் புரியவில்லை என்று குறிப்பிட்டார். படித்து முடித்தவர்கள் அருகில் உள்ள பள்ளிகளுக்கு சென்று கற்பிக்க வேண்டும் என்றும் கழிப்பறை இல்லாத பள்ளிக்கூடங்களே இருக்கக்கூடாது" என்றும் மோடி தனது உரையில் குறிப்பிட்டார். (இ)

# கட்டுப்பாட்டையிழந்த விமானம் விழுந்து விபத்துக்குள்ளானது



அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் ரோசெஸ்டர் நகரை சேர்ந்தவர் லார்ரி கிளேசர். இவர் ரியல் எஸ்டேட் அதிபர் ஆவார். இவரது மனைவி ஜானே.

இவர்கள் இருவரும் தங்களது குட்டி விமானத்தில் பயணம் செய்தனர். இவர்கள் புளோரிடாவில் நாபிள்ஸ் பகுதியில் 25 ஆயிரம் அடி உயரத்தில் பறந்தனர்.

அப்போது விமானம் திடீரென கட்டுப்பாட்டை இழந்தது. அதனால் விமான கட்டுப்பாட்டு அறையுடன் ஆன தொடர்பு துண்டிக்கப்பட்டது.

அதை தொடர்ந்து அமெரிக்காவின் 2 போர் விமானங்கள் அவற்றை தேடும்பணியில் ஈடுபட்டன.

இந்த நிலையில் அந்த விமானம் அமெரிக்கா அருகேயுள்ள ஜமைக்காவில் போர்ட் அன்டோனியோ தீவில் கடலில் விழுந்து நொறுங்கியது.

இந்த விப்த்தில் லார்ரி கிளேசரும் அவரது மனைவி ஜானே ஆகிய 2 பேரும் உயிரிழந்தனர். அவர்களின் மரணத்துக்கு நியூயோர்க்ஆளுநர்ஆண்ட்ரூ குபோமோ இரங்கல் தெரிவித்துள்ளார்.(இ)

# பேஸ்புக்கினால் பறிபோனது 82 வயது மூதாட்டியின் உயிர்



North Dakota என்ற நாட்டை சேர்ந்த Grand Forks என்ற நகரில் 20 வயது பெண் ஒருவர் மணிக்கு 85மைல்கள் வேகத்தில் காரை ஓட்டிக்கொண்டே பேஸ்புக்கில் ஸ்டேட்டஸ் பதிவு செய்து கொண்டே சென்றதால் சாலையில் நடந்த சென்ற மூதாட்டி ஒருவர் மீது கார் மீது மோதி விபத்துக்குள்ளானது.

Grand Forks பகுதியை சேர்ந்த 20 வயது பெண் Abby Sletten. இவர் கடந்த சில வருடங்களாக சமூக வலைத்தளமான பேஸ்புக் இணையதளத்திற்கு அடிமையாக இருந்துள்ளார்.

இவர் சமீபத்தில் தனது SUV காரில் மிக வேகமாக மணிக்கு 85 மைல்கள் வேகத்தில் சாலையில் சென்றுகொண்டே, மொபைல் போன் மூலம் பேஸ்புக்கில் ஸ்டேட்டஸ் பதிவு செய்து கொண்டு வந்துள்ளார்.

அந்த சமயத்தில் காரின் வேகத்தை குறைக்காமலேயே காரை திருப்பியபோது திடீரென அவரது கட்டுப்பாட்டை இழந்த கார் சாலையின் ஓரத்தில் நடந்து சென்று கொண்டிருந்த மூதாட்டி மீது காரை மோதினார். இதனால் Phyllis Gordon என்ற அந்த மூதாட்டி பரிதாபமாக சம்பவ இடத்திலேயே மரணம் அடைந்தார்.

தற்போது கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் Abby Sletten அவர்களுக்கு குறைந்தது ஐந்து வருட சிறைத்தண்டனை கிடைக்கும் என கூறப்படுகிறது. (இ)

# நாடு திரும்பினார் நடராஜர்

(சென்னை)

தமிழ்நாட்டிலிருந்து சில ஆண்டுகளுக்கு முன்னர், கடத்தி வெளிநாட்டுச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டு, பின்னர் அவுஸ்திரேலிய அருங்காட்சியகத்தால் வாங்கி காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த இரண்டு புராதனச் சிலைகளை, இந்தியா வந்துள்ள அவுஸ்திரேலியப் பிரதமர் டோனி அபாட் நேற்று முன்தினம் இந்தியப் பிரதமரிடம் முறைப்படி ஒப்படைத்தார்.

இவை இரண்டும் சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமையானவை.

அவுஸ்திரேலியாவால் திருப்பியளிக்கப்பட்ட இரு சிலைகளில் ஒன்றான நடராஜர் சிலை ஐம்பொனனால் செய்யப்பட்டது. இது அரியலூரில் உள்ள ஒரு ஆலயத்தில் பூஜை செய்யப்பட்டு வந்தது. கருங்கல்லில் செதுக்கப்பட்டிருந்த அர்த்தநாரீஸ்வரர் சிலை விருதாச்சலம் விருதகிரீஸ்வரர் ஆலயத்தின் வெளிப் பிரகாரத்தில் பதிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சிலைகளை நேற்று இந்தியப் பிரதமரிடம் ஒப்படைத்தார் ஆஸி பிரதமர் டோனி அபாட்

இவை இரண்டும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், திருடப்பட்டு பல கைகள்மாறி, கடைசியாக அவுஸ்திரேலிய அருங்காட்சியத்துக்கு விற்கப்பட்டன. [illegible] ஸளினும் இந்தியத் தரப்பின் முயற்சிகள் காரணமாக, வழக்குகள் ஏதுமின்றி இவை இந்தியாவிடம் திருப்பிய ளிக்கப்பட்டுள்ளன.

பாண்டிச்சேரியிலுள்ள பிரெஞ்சு கலைக்கழகத்தின் ஆவணங்களில் இருந்த புகைப்படங்கள் மூலமே இவை தமிழகத்தைச் சேர்ந்தவை என்று உறுதி செய்யப்பட்டு இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சிலைகள் இந்தியாவிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது குறித்து, இந்தியத் தொல்லியல் கழகத்தின் முன்னாள் தலைவர் டி [illegible] தெரிவித்த தகவல்களை இங்கே கேட்கலாம். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமாலைக்காரனுக்கு
கண்டதெல்லாம் மஞ்சல்
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உங்களுக்கே இப்படி என்றால் நிலைமை எப்படி என்றுணருங்கள்

வடபகுதிக்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்ட ஜேர்மன் நாட்டு தூதுவரை இராணுவப் புலனாய்வாளர்கள் பின்தொடர்ந்ததாக அவரே கூறியிருப்பது எங்கள் நாட்டின் சின்னத்தனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

ஒரு நாட்டின் தூதுவர் விஜயம் செய்யும் போது அவரை இராணுவப் புலனாய்வாளர்கள் பின் தொடர்வதென்பது எங்கள் நாட்டின் சின்னத்தனமான ஆட்சியின் அடையாளமாகும்.

ஒரு நாட்டின் தூதுவரை இராணுவப் புலனாய்வாளர்கள் பின் தொடர்வதென்பது எதற்கானதென்ற கேள்வி இங்கு ஏற்படுவது நியாயமானதே.

அதாவது ஜேர்மன் நாட்டுத் தூதுவர் வடபகுதிக்கு விஜயம் செய்தால் அந்த விஜயத்தின்போது அவர் தமிழ் மக்களுக்கு ஏதாவது சொல்லிவிடுவார் என்பதா? அல்லது ஜேர்மன் தூதுவரிடம் தமிழ்ப் பிரதிநிதிகள் இலங்கை அரசு பற்றி ஏதாவது எடுத்துக் கூறிவிடுவார்கள் என்றப் பயத்தாலா? இப்படியொரு ஏற்பாடு என்பதை சம்பந்தப்பட்டவர்கள்தான் கூறவேண்டும்.

எதுவாயினும் ஜேர்மன் தூதுவரை இராணுவப் புலனாய்வாளர்கள் பின் தொடர்ந்தனர் என்றால் தமிழ் மக்கள் தொடர்பில் இவர்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என்பதை ஜேர்மனியத் தூதுவர் மிகத் தெளிவாகப் புரிந்திருப்பார்.

தனக்கே இக்கதி என்றால் வடபகுதியில் இராணுவப் பிரச்சன்னத்திற்குள் வாழும் மக்களின் நிலை என்ன என்பதை தமிழ் மக்கள் கூறாமலே ஜேர்மன் தூதுவர் புரிந்து கொள்ளும் அளவில் இராணுவப் புலனாய்வாளர்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

எதை நாம் தடுக்க வேண்டும் என்று நினைக்கின்றோமோ? அதை நாமே செய்துவிடுகின்ற சந்தர்ப்பங்கள் நடப்பது வழமை.

அதுபோன்ற ஒரு சந்தர்ப்பமே ஜேர்மன் தூதுவரை இராணுவப் புலனாய்வாளர்கள் பின் தொடர்ந்த சம்பவம் அமைந்துள்ளது.

இராணுவப் புலனாய்வாளர்கள் தன்னை பின் தொடர்வதை உணர்ந்து கொண்ட ஜேர்மன் தூதுவரிடம் தமிழ் மக்கள் சொல்லக் கூடியதெல்லாம் எங்கள் நிம்மதியான வாழ்விற்கு வழிசமையுங்கள் என்பது தான்.

ஆம், இலங்கை திரு நாட்டில் பெரும்பான்மை என்ற பெயரால் மொழியும் மதமும் கோலோச்சுகின்றன. பௌத்தமத குரு என்பதற்காக பொலிஸார் கைகூப்பி முழந்தாளில் நின்று வணங்கும் போது இந்த நாட்டில் சட்டம், நீதி, ஒழுங்கு என்பன எங்ஙனம் கட்டிக்காக்கப்படும் என்பதை சர்வதேச சமூகம் உணர்ந்தாக வேண்டும்.

மொழியின் பெயரால், மதத்தின் பெயரால் சிறுபான்மை இனம் நசுக்கப்படுகிறது. இதற்கு முடிவு கட்டாமல் - முற்றுப்புள்ளி வைக்காமல் எந்த அபிவிருத்தித்திட்டமும் - தூதுவர்களின் விஜயங்களும் வெற்றி தரமாட்டா.

அபிவிருத்தி என்பது நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்தும் என்று யாரேனும் கருதலாம். ஆனால் அபிவிருத்தி என்பதற்கு முன்னதாக மனித சுதந்திரம் - உரிமை என்பன நூறு வீதம் நிலை நிறுத்தப்பட வேண்டும்.

இதைச் செய்யாமல் அபிவிருத்தி என்ற எண்ணக்கரு முன்வைக்கப்பட்டால், ஒரு பயந்த சூழ்நிலையில் வாழ்கின்ற மனித இனமாகவே தமிழினம் இருக்கும் என்பதை வெளிநாட்டுத் தூதுவர்கள் உணர்ந்தாக வேண்டும்.

அதே சமயம் இலங்கை அரசு தொடர்ந்தும் தமிழ் மக்களை அடக்கு முறைக்குள் வைத்திருக்க நினைப்பதை விடுத்து, தமிழர்களும் இந்த நாட்டின் பிரஜைகள்; அவர்கள் வெளிநாட்டு தூதுவர்களையும் வெளிநாட்டு தூதுவர்கள் அவர்களையும் சந்திக்கும் உரிமை உண்டு என்பதை அங்கீகரித்து செயற்பட வேண்டும். வடபகுதிக்கு வருகின்ற வெளிநாட்டுத் தூதுவர்களை இராணுவப்புலனாய்வாளர்கள் பின் தொடர்கின்ற அநாகரிகச் செயல்களை நிறுத்துவதும் அவசியமாகும்.

## சந்திரிகாவிடம் சென்ற ரணிலின் தூதுக் குழுவினர்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நெருங்கிய சிலர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்தித்துள்ளனர்.

இதன்போது பொதுச் சின்னத்தின் கீழ் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது குறித்து ரணிலின் செய்தியை அவர்கள் சந்திரிகாவிடம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழுவில் திஸ்ஸ அத்தநாயக்க, மங்கள சமரவீர, கபீர் காசிம் மற்றும் மலிக் சமரவிக்கிரம ஆகியோர் உள்ளடங்கியிருந்தாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

எனினும் பொதுச் சின்னத்தின்கீழ் போட்டியிடுவது குறித்து சந்திரிகா சாதகமான பதிலை வழங்கவில்லை என்று ஐக்கிய தேசியக்கட்சி தரப்புக் கள் தெரிவித்துள்ளன.

ஏற்கெனவே இந்த யோசனையை ரணில் விக்கிரமசிங்க ஜேவிபி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவறறிட மும் தெரிவித்திருந்தார்.

எனினும் அந்தக்கட்சிகளும் ரணிலின் யோசனையை நீராகரித்து விட்டன. அத்துடன் ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பொன்னொளி ஐக்கிய விளையாட்டுக் கழகம் பொன்னொளி ஐக்கிய இலவச வாசிகசாலை ஆகியவற்றின் அனுசரணையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியினரால் இரத்தான முகாம் நடத்தப்படவுள்ளது.

இந் நிகழ்வு 9-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியிலிருந்து பிறபகல் 3 மணிவரை சந்நிதியில் அமைநதுள்ள பல்நோக்கு மண்டபத்தில் இடம் பெறவுள்ளதால் இரத்ததானம் செய்து உயிர்காக்கும் பணிக்கு ஒததுழைப்புவழங்குமாறு யாழ்போதனா வைத்தியசாலையின இரத்த வங்கி வைத்தியப் பொறுப்பதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார். (செ)

## சைவப்பெருவிழா

(யாழ்ப்பாணம்)

உலக சைவத்திருச்சபையின்மாபெரும் சைவப் பெருவிழா நல்லூரில் அமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மண்டபத்தில் இன்று மாலை 3.00 மணியளவில் யாழ்.மாவட்ட உலக சைவத்திருச் சபை தலைவர் 'சைவசிரோமணி' 'கலாநிதி' சுப்பிரமணியம் நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஓய்வு நிலை அதிபர் வி.கார்த்திகேசு கணபதிப்பிள்ளை கலந்து சிறப்பிக்கவுள்ளார். இந் நிகழ்வில் இலங்கை வாழ் சைவத்தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எனும் தலைப்பில் இறுவெட்டு வெளியீடு இடம்பெறவுள்ளது.

மேலும்சைவமணி 'சைவசிரோமணி' செல்வரத்தினம் சண்முகரத்தினம் தலைமையில் பட்டிமன்றம் ஒன்றும் இடம்பெறவுள்ளது. (செ)

## திருவெண்காட்டில் இன்று தேர்

மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்திவிநாயகர் ஆலயத் தேர்த் திருவிழா இன்று காலை 10.35 மணிக்கு இடம்பெறும்.

தேர்த் திருவிழாவைத் தொடர்ந்து பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா, **கஜமுகன் வதம** எனும் பொருளில் சங்கீத கதாப் பிரசங்கம் நிகழ்த்துவார். இந்நிகழ்வில் வித்துவான் ஏ.ஜெயராமன் வயலின், வித்துவான் து.இராஜன் மிருதங்கம் இசைப்பர்.

இதனைத் தொடர்ந்து திருமதி ஸ்ரீரங்கராணி இராமச்சந்திரன், ப.சிவமைந்தன் ஆகியோரின் தெய்வீக இசை நிகழ்வும், ஜாக்கிரத சைதன்ய சுவாமிகளின் தெய்வீகப் பேருரையும் இடம்பெறும். (ந)

## நடத்துநரின் அவசரப்படுத்தலால் ஆசிரியை ஒருவர் காயம்

(கரணவாய்)

தனியார் போக்குவரத்துக்கு சொந்தமான பேருந்து ஒன்றின் நடத்துநரின் அவசர நடவடிக்கையினால் ஆசிரியை ஒருவர் தவறிவிழுந்து இது கால்களிலும் காயங்களுக்குள்ளாக நேரிட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நெல்லியடி பெற்றோல் நிரப்பு நிலையம் முன்பாக இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்ற 750 வழித்தட பேருந்தில் குறித்த ஆசிரியை பயணம் செய்துள்ளார்.


பயணத்தின் போது நெல்லியடி பெற்றோல் நிரப்பு நிலையம் முன்பாக அவர் பேருந்தினைவிட்டு இறங்குவதற்கு எத்தனித்துள்ளார்.

இதன்போது நடத்துநர் பேருந்தில் இருந்து விரைவாக இறங்கும்படி குறித்த ஆசிரியையை விரைவு படுத்தியுள்ளார்.

இதனால் ஆசிரியை விரைவாக இறங்குவதற்கு எத்தனித்தவேளை திடீரென பேருந்தில் இருந்து தவறி கீழே விழுந்துள்ளார்.

இதனால் இரண்டு கால்களிலும் காயமடைந்த நிலையில் பிரஸ்தாப ஆசிரியை வீடுதிரும்பி சென்றுள்ளார். (௬௦)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### எங்கள் குருநாதன்

தித்திக்கு மொருமொழியா லெங்கள்குரு நாதன்
சின்மயத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன்
எத்திக்கு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம்நீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
வித்தின்றி நாறுசெய்வா னெங்கள்குரு நாதன்
விண்ணவரு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
தத்துவா தீதனானா னெங்கள்குரு நாதன்
சகலசம் பத்துந்தந்தா னெங்கள்குரு நாதன்.

## நம் நடுவில் இயேசு இருக்க நாம் உழைப்போம்

நமது வாழ்வின் மிக முக்கிய அம்சங்களில் ஒன்றான நமது குடும்ப உறவுகளைப் பற்றிய சில எளிய, தெளிவான பாடங்களை நாம் புரிந்து கொள்ள தவறுகிறோம், அல்லது, புரிந்து கொண்டாலும் பின்பற்றத் தவறுகிறோம் என்பதை ஆழமாக அலசிப்பார்க்க இன்றைய ஞாயிறு சிந்தனை நம்மை அழைக்கிறது.

இன்றைய நற்செய்தியின் ஆரம்பமே ஒரு சாட்டையடிபோல, நம்மை விழித்தெழச் செய்கிறது. 'உங்கள் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் உங்களுக்கு எதிராகப் பாவம் செய்தால்..." என இயேசு கூற ஆரம்பிக்கும் வார்த்தை களே அனைவருக்குமானஒருசவாலான செய்தி ஆகும்.நீ உன் சகோதரன் அல்லது சகோதரிக்கு எதிராகப் பாவம் செய்திருந்தால்..." என்று இயேசு ஆரம்பித்திருந்தால், அது இயல்பாக இருந்திருக்கும். ஆனால், அவர் அப்படி ஆரம்பிக்கவில்லை. 'உங்கள் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் உங்களுக்கு எதிராகப் பாவம் செய்தால்..." என்று ஆரம்பத்திலேயே நம் சிந்தனைகளைப் புரட்டிப் போடுகிறார்.


### பரமபிதா காட்டிய பாதை

பிரச்சினையைத் தீர்க்க, குற்றத்தைக் களைய நாம் மேற்கொள்ளும் முதல் முயற்சிகள் எவ்விதம் இருக்க வேண்டும் என்பதை இயேசு இன்றைய நற்செய்தியில் தொடர்ந்து தெளிவாக்குகிறார். அவர் கூறும் முதல் படி என்ன? நீங்களும் குற்றமிழைத்தவரும் தனித்திருக்கும்போது அவரது குற்றத்தை எடுத்துக்காட்டுங்கள். அவர் உங்களுக்குச் செவிசாய்த்தால் நல்லது உங்கள் உறவு தொடரும்.

ஆனால் நாம் தவறிழைத்தவரைத் தனியே அழைத்து, மனம் விட்டுப் பேசுவதற்குப் பதில் பல மாறுபட்ட, சிக்கலான வழிகளைக் கடைபிடிக்கிறோம். பிரச்சினைகளைப் பெரிதாக்குகி றோம். நாம் பார்க்கும் மெகாத்தொடர்கள் கூறும் வழியே இது.

இன்று தொலைக்காட்சிகளில் வரும் மெகாத தொடர்களினூடாக குடும்பத்திற்குள் நிகழும் பிரச்சினைகள் ஒவ்வொரு நாளும் காட்டப்படுகின்றன. பிரச்சினைகள் ஒன்றா, இரண்டா? ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிக்கொண்டே போகலாம். இந்த பிரச்சினைகளுக்குள் நசுக்கப்பட்டு அந்த கதாபாத்திரங்கள் படும் வேதனைகள் ஒவ்வொரு நாளும் வெகு நேரம் காட்டப்படுகின்றன.இந்த பிரச்சினைகள் இன்று எம் குடும்பத்தில் நிஜமாகின்றன. இதற்கு இத்தொடர்களில்வரும் நிகழ்சசிகள் பின்னர் அவற்றில் மூழ்கிவிடும் இந்தக் குடும்பங்களையே பாதிக்கின்றன என்று ஆணித்தரமாக கூறலாம்.

குடும்பப் பிரச்சினைகளைப் பற்றி நம் தொலைக்காட்சித் தொடர்கள் சொல்வதைப் பரவலாக ஏற்றுக் கொள்ளும் நம்மிடம், பிரச்சினைகளைத் தீர்க்கும் மாற்று வழியொன்றை இன்றைய நற்செய்தியில் இயேசு கூறுகி றார். இந்த நற்செய்தியைக் கேட்கும் போது நம் மனங்களில் நம்பிக்கை பிறக்கின்றதா? அல்லது, இயேசு கூறும் வார்த்தை நடைமுறை வாழவுக்கு ஒத்துவராது என்று நமது மனம் சொல்கிறதா?



உண்மையாகவே நம உள்ளத்தில் என்னதான் நிகழ்கிறதென்று அலசி தேடுவோம்.

குற்றவாளி ஒழிய வேண்டும், பழிக்குப் பழி தீர்க்கப்பட வேண்டும் என்ற விருப்பே மேலோங்குகிறது. நடை முறை வாழ்வில் நம் குடும்பங்களிலும் இது போல் நிகழ வேண்டுமா? பிரச்சினை பெரிதாக வேண்டுமா அல்லது, விடைகள், தீர்வுகள் வேண்டுமா என்று நாம் தீர்மானிக்க வேண்டும்.

இயேசு கூறும் இலக்கணப்படி அமையும் குடும்பங்களில் குற்றம் புரிந்தவர் திருந்தி வரவேண்டும் என்று காத்திருக்காமல், முதல் முயற்சிகளை நாம் மேற்கொண்டால், அங்கு பிரசசினைகள்தீர வழியுண்டு. உறவுகள் வலுப்பட வழியுண்டு. அவர்கள் கூடி வரும் நேரத்தில் இறைவனின் பிரசன்னம் அங்கு நிறைந்து பொங்கவும் வழியுண்டு. இந்த உறுதியைத் தான் இயேசு இன்றைய நற்செய்தியின் இறுதி வார்த்தைகளாக சொல்லியிருககிறார்: 'இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். "

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கொல்லப்படுவதை தான்தான் நிறுத்தினாராம்

## கருணா இப்படிக் கூறுகிறார்

தமிழ் மக்கள் கொல்லப்பட்டு வந்ததை நான்தான் நிறுத்தி னேன். கடந்த கால யுத்தத்தில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே என மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரி வித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் யுத்தத்தினால் பாதிக் கப்பட்ட 20 ஆயிரத்திற்கும் மேற் பட்ட குடும்பத் தலைவியர்கள் உள்ளார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 10 இலட்சம் ரூபாய் செலவில் கிராமத்துக்கு ஒரு வேலை த்திட்டத்தின் கீழ், போரதீவுப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட பட்டாபுரம் கிராமத்தில் பொதுக்கட்டடம் நிர் மாணிப்பதற்கான அடிக்கல் நேற்று முன்தினம் நாட்டப்பட்டது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இவ் வாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் உரை யாற்றுகையில்,

தமிழ் மக்கள் கொல்லப்பட்டு வந்ததை நான்தான் நிறுத்தி னேன். அவ்வாறு நிறுத்தியதற்காக பல கெட்ட பெயர்களையும் பெற்றுக் கொண்டேன். ஆனால், அந்நிலை தொடர்ந்திருந்தால் இளைஞர்கள் மாத்திரமின்றி வயோதிபர்களும் தற்போது உயிரோடு இருந்திருக்க மாட்டார்கள். பாரிய இழப்புக்களிலி ருந்து எமது மக்கள் காப்பாற்றப்பட் டுள்ளனர்.

தற்போது உலக நாடுகளில் ஆயுத மோதல் உக்கிரமடைந்து ள்ளன. அவ்வாறான யுத்தத்திலிரு ந்து எமது மக்கள் பாதுகாக்கப்பட் டுள்ளனர்.

தமிழர்களின் வரலாற்றில் சரியான அரசியல் காய்நகர்த்தல் களை மேற்கொள்ளாததினாலேயே யுத்தம் உருவாகியது. இதனாலேயே தமிழர்கள் யுத்தத்தினுள் தள்ளப் பட்டனர். யுத்தத்தினுள் ஈடுபடா மலிருந்தால் இன்னும் பாரிய வளர்ச்சி எம்மக்களிடத்தில் ஏற்பட் டிருக்கும்.

கடந்த யுத்தத்திலிருந்து விடு பட்டு தற்போதே எமது மக்கள் வாழத் தொடங்கியுள்ளனர். இந்த வாழ்க்கையிலிருந்து முன்னே ற்றகரமாக மக்கள் விளங்கி செயற் பட வேண்டும். இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மக்கள் தங்களது பிள்ளைகளை நன்கு கற்பித்து வளர்த்துவிட வேண்டும்.

நான் செய்துள்ள வேலைத்திட் டங்களை மட்டக்களப்பு மாவட்ட அரசியல் சரித்திரத்தில் எந்தவொரு அரசியல்வாதிகளும் மேற்கொள ளவில்லை. அந்தளவுக்கு பாரிய அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகின்றேன். குழாய் மூலம் குடி நீர் திட்டம், வீதி அபிவிருத்தி, மின் சார வசதி, பாலங்கள் அமைத்தல் போன்ற அபிவிருத்திகளை மக்கள் என்னிடம் கேட்காத போதிலும், செய்து வருகின்றேன்.

படுவான்கரையில் மின்விநி யோகத்துக்காக மட்டும் 6ஆயிரம் மில்லியன் ரூபாய் செலவு செய்யப் பட்டுள்ளது. மிகக் குறுகிய காலத் தில் படுவான்கரையில் வீதி அபிவி ருத்தி, மின்விநியோகம், குழாய் மூலம் குடிநீர்த்திட்டம் போன்றன மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத னால், மக்களின பொருளாதாரம் உயர்த்தப்பட்டு வருகின்றது. வாழ்க் கையில் முன்னேற்றமடைந்து வருகின்றனர்.

எமது தமிழ் மக்கள் பத்திரிகை களில் வரும் அறிக்கைகளை மாத் திரம் பார்க்காமல், கல்வி வளர்ச்சி வீதத்தையும் எமது சமூகத்தை விட ஏனைய சமூகம் எவ்வாறு முன்னேறிக்கொண்டு செல்கின்றது என்பதையும் நோக்க வேண்டும். இதற்காக நான் இரவும் பகலும் இடைவிடாது செயற்படுகின்றேன். இது எனது கடமையாகும். இவற் றுக்கு எமது மக்களும் ஒத்து ழைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)





இரு கைகளையும் இழந்த பெண்ணிற்கு கணனி நிலையம் அமைப் பதற்காக முதற்கட்டமாக 5 இலட்சம் ரூபாய் பணத்தை ஜெர்மனியை சேர்ந்த இரவீந்திரன் என்பவர் தனது மகளான அபிசாவின் மூன்றாவது பிறந்த தினத்தை முன்னிட்டு அந்த கனவை நிறைவேற்ற உதவும் இதயங்கள் அமைப்பினூடாக முன்வந்து வழங்கினார். அவருக்கான பணத்தை வலி வடக்கு பிரதேச சபை உப தவிசாளர் எஸ்.சஜிவன் நேரடியாக வழங்கி வைத்ததை படத்தில் காணலாம். (படம் அளவெட்டி செய்தியாளர்)

# ஐ.எஸ்.ஐ.எஸ்ஸை தடுத்து நிறுத்த நேட்டோ உறுப்பு நாடுகள் தயார்

## ஒபாமா தெரிவிப்பு

ஈராக் மற்றும் சிரியாவில் ஐஎஸ் கிளர்ச்சியாளர்களின் முன்னேற் றத்தை தடுப்பதற்கு நேட்டோ உறுப்பு நாடுகள் தயாராகவுள்ளதாக அமெ ரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியுள்ளார்.



ஐஎஸ் கிளர்ச்சியாளர்களின் பலத்தை குறைப்பதற்கும் அவர் களை அழிப்பதற்கும் நாடுகள் கட்டாயம் ஒன்றிணைய வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் சிரியாவிற்குள் தரை வழியாக் எந்தவொரு அமெரிக்க படையினரும் அனுப்படமாட்டார் கள் என பராக் ஒபாமா மீண்டும் உறுதி அளித்துள்ளார்.

வேல்ஸ்சில் நடைபெற்ற நேட்டோ உறுப்பு நாடுகளின் மாநாட்டில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடக ங்களுக்கு கருத்து தெரிவித்த போதே பரக் ஒபாமா இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார். (இ)

## பாம்புக்கு பயந்து முடங்கிய நகரம்

நெதர்லாந்தின் தென் பகுதியில் டிரிம்மெலான் என்ற நகரம் உள் ளது. இது நகராட்சி அந்தஸ்தை பெற்றது. அதன் அருகேயுள்ள பிரடா நகரில் பாம்புகள் மற்றும் முயல் போன்ற சிறிய மிருகங் களை கண்ணாடி கூண்டுகளில் வைத்து வளர்த்து வருகின்றனர். இந்த நிலையில், அவ்வாறு வளர்க் கப்பட்ட கொடிய விஷம் கொண்ட நாகப்பாம்பு ஒன்று அங்கிருந்து தப்பியது. அது டிரிம்மெலான் நக ருக்குள் புகுந்தது.

அந்த பாம்பு கடித்தால் மரணம் நிச்சயம். ஏனெனில் அது மிக கொடிய விஷம் கொண்டது.

பாம்பை பிடிக்கும் வரை பொது மக்கள் யாரும் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது என இணையத் தளத்தில் உத்தரவிடப்பட்டுள்ளது. அத னால் பொது மக்கள் தங்கள் வீடுகளில் கதவுகள் மற்றும் ஜன் னல்களை பூட்டி கொண்டு உள் ளேயே முடங்கியுள்ளனர். (இ)

## 18 நாட்களேயான சிசுவை நிலத்திலடித்த பெண் கைது

பிறந்து 18 நாட்களேயான ஆண் சிறு வொன்றை நிலத்தில் அடித்த 22 வயது பெண்ணொருவரை பொலிஸார் கைது செய்த சம்பவ மொன்று பொல்கஸ்ஓவிட்ட, அம்ப லங்கொட பகுதியில் நேற்று முன்தி னம் வெள்ளிக்கிழமை இடம்பெற் றுள்ளது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிசு, களு போவில வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சையளிக்க ப்பட்டு வருகின்றது. இருப்பினும், அந்த சிசுவின் நிலைமை கவலை க்கிடமாக உள்ளதென வைத்திய ர்கள் தெரிவித்தனர்.

சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பெண், குறித்த சிசுவின் தந்தை வழி உறவினர் என்றும் அவரும் அவர்களுடன் ஒரே வீட்டிலேயே வசித்து வந்துள்ளார் என்றும் விசாரணைகளிலிருந்து தெரியவந் துள்ளது.

சம்பவத்தின் போது, அந்த சிசு அதனது தாயிடமே இருந்துள்ள தாகவும் தாயிடமிருந்து சிசுவைப் ப றித்தே, சந்தேகநபரான பெண் அதனை நிலத்தில் அடித்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# யதார்த்த அரசியலை சம்பந்தனும் ஏற்பு!

## ஈ.பி.டி.பி. அறிக்கை

எமது யதார்த்த அரசியலையே இன்று சம்பந்தரும் ஏற்றுக் கொண்டி ருக்கிறார்!..

உணர்ச்சி பேச்சுக்களாலும் வெற் றுக் கோசங்களாலும் அரசியல் தீர்வை அடைய முடியாது என்றும், நடை முறை யதார்த்த வழியிலேயே தீர்வை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இ.ரா.சம்பந்தன் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாட்டில் கூறியிருப்பதோடு கடந்த காலங்களில் அரசியல் உரிமைப் பிரச்சினையை தீர்ப்பதற்கு கிடைததிருந்த பல நல்ல வாய்ப்புக்களையும் இழந்திருக் கின்றோம் என்பதையும் எற்றுக் கொண்டிருக்கின்றார்.

இது ஈ.பி.டி.பியினராகிய எமது நீண்டகால அரசியல் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டதன் வெளிப்பாடே யாகும். ஆகவே நாம் அதனை வர வேற்கின்றோம். இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்திருக கும் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் அரசிய லுரிமை பிரச்சினைகளுக்கு தீர்வு காண நாம் யதார்த்தமான வழிமு றையினையே வகுத்து செயலாற்றி வருகின்றோம்.

இந்த யதார்த்த வழிமுறை[illegible] நாம் அபிவிருத்தி முதற்கொண்டு மக்களின் வாழ்வாதார முயற்சி களை யும் திறம்பட செய்து வருகின்றோம்.

அது தவிர நாம் வகுத்துக் கொண்ட நடைமுறை யதார்த்த வழிமுறைதான் எமது மக்கள் இழந்து போன நிலங் களையும் படிப்படியாக மீட்டுத்தந்து கொண்டிருக்கிறது.

உணர்ச்சி பேச்சுக்களாலும், வெற் றுக் கோசங்களாலும் எமது உரிமை களை நாம் பெற்றுவிட முடியாது. மாறாக யதார்த்த வழிமுறை மூலமே நாம் [illegible] இலக்கை [illegible] முடியும்.

இதுவரை கால வெறும் உணர்ச்சி பேச்சுக்களும் வெற்றுக் கோசங்களும் எமது மக்களுக்கு அழிவுகளையும், அவலங்களையும் பெற்றுத்தந்ததை விட எதையும் தந்திருக்கவில்லை.

இதையே நாம் நீண்டகாலாக கூறி யும் வலியுறுத்தியும் வந்திருக்கி ன்றோம்.

நாம் கூறி வந்த அதே கருத்துக் களை இன்று தமிழ்தேசிய கூட்டமைப் பினர் காலம் கடந்தாவது கூற முற்பட் டதை நாம் வரவேற்கின்றோம்.

முன்னரே எமது யதார்த்த வழி முறையினை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் ஏற்றுக் கொண்டிருந்தால் எமது மக்களுக்கு இத்தனை அழிவு களும் அவலங்களும் நடந்திருக்காது.

முன்னரும் சம்பந்தர் நடைமுறை யதார்த்த அரசியல் குறித்து பல தட வைகள் கூறியிருக்கின்றார்.


ஆனாலும், அவையேதும் நடை முறையில் சாத்தியப்படுத்தப்படவி ல்லை. ஆனால், வவுனியாவில் நடைபெற்ற மகாநாட்டில் கூறியிருக் கின்ற இவ்விடயங்களாவது அர்த்த மானதாகவும் ஆத்மார்த்தமாகவும் செயல்வடிவம் கொடுக்கப்பட்டு சம்ப ந்தரால் முன்னெடுக்கப்படுமாக இரு ந்தால் அதை ஈ.பி.டி.பி வரவேற் பதோடு தேவையான பங்களிப்புக களை செய்யவும் தயாராகவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின் றோம். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| COURSE NAME | Z - SCORE | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | JAFFNA | | KILINOCHCHI | | VAVUNIYA | | MULLAITIVU | | MANNAR | |
| | NEW | OLD | NEW | OLD | NEW | OLD | NEW | OLD | NEW | OLD |
| AGRIC BUSINESS | 0.7662 | NQC | 0.1913 | NQC | 0.2685 | NQC | 0.5656 | NQC | 0.3209 | NQC |
| MANAGEMENTAGRICULTURAL RESOURCE MANAGEMENT & TECHNOLOGY | 0.8366 | NQC | 0.0816 | NQC | 0.5973 | NQC | 0.9571 | NQC | 0.4513 | NQC |
| AGRICULTURAL TECHNOLOGY & MANAGEMENT | 1.5672 | 0.4656 | 0.6810 | NQC | 1.1257 | 0.8880 | 1.4237 | 1.1966 | 1.0180 | NQC |
| AGRICULTURE | 0.8669 | 0.1546 | 0.4453 | NQC | 0.4342 | NQC | 0.9197 | NQC | 0.5869 | NQC |
| ANIMAL SCIENCE # | 0.8046 | NQC | NQC | NQC | NQC | NQC | 0.3702 | NQC | -0.1948 | NQC |
| ANIMAL SCIENCE & FISHERIES (University of Peradeniya) | 1.3254 | NQC | 0.1940 | NQC | 0.2622 | NQC | 1.0470 | NQC | 0.3528 | NQC |
| APPLIED SCIENCES (PHY.SC) | 0.9573 | NQC | 0.4081 | NQC | 0.6334 | NQC | 0.7927 | NQC | 0.6087 | NQC |
| APPLIED SCIENCES (BIO.SC) | 0.7371 | NQC | 0.1774 | NQC | 0.2196 | NQC | 0.9321 | NQC | 0.3539 | NQC |
| AQUATIC RESOURCES TECHNOLOGY # | 0.7239 | NQC | NQC | NQC | NQC | NQC | 0.8340 | NQC | NQC | NQC |
| ARABIC LANGUAGE * | 0.7310 | 0.9026 | 0.7310 | 0.9026 | 0.7310 | 0.9026 | 0.7310 | 0.9026 | 0.7310 | 0.9026 |
| ARCHITECTURE # | 0.5399 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| ART & DESIGN # (Ramanathan Academy of Fine Arts) | 0.0968 | NQC | NQC | NQC | 0.1530 | NQC | 1.1783 | NQC | NQC | NQC |
| ARTS (SP) / MASS MEDIA* # | 1.2990 | 1.1808 | 1.2990 | 1.1808 | 1.2990 | 1.1808 | 1.2990 | 1.1808 | 1.2990 | 1.1808 |
| ARTS (SAB) - A * | 1.4209 | 1.3867 | 1.4209 | 1.3867 | 1.4209 | 1.3867 | 1.4209 | 1.3867 | 1.4209 | 1.3867 |
| ARTS (SAB) - B * | 1.5472 | 1.1584 | 1.5472 | 1.1584 | 1.5472 | 1.1584 | 1.5472 | 1.1584 | 1.5472 | 1.1584 |
| ARTS (SP) / PERFORMING ARTS * # | 1.1330 | 0.2518 | 1.1330 | 0.2518 | 1.1330 | 0.2518 | 1.1330 | 0.2518 | 1.1330 | 0.2518 |
| ARTS * | 1.3778 | 1.3209 | 1.3778 | 1.3209 | 1.3778 | 1.3209 | 1.3778 | 1.3209 | 1.3239 | 1.3209 |
| AYURVEDIC MEDICINE & SURGERY | 0.7275 | NQC | -0.0628 | NQC | 0.7850 | NQC | 0.7697 | NQC | 0.5232 | NQC |
| BIOLOGICAL SCIENCE | 0.7567 | NQC | -0.0196 | NQC | 0.2514 | NQC | 0.4369 | NQC | 0.4131 | NQC |
| BUSINESS INFORMATION SYSTEMS (SPECIAL) | 1.6644 | NQC | 1.3744 | NQC | 1.3436 | 1.0659 | 1.7932 | 1.2045 | 1.6207 | NQC |
| COMMERCE | 1.1484 | 0.2607 | 1.0307 | NQC | 0.9427 | NQC | 1.2807 | NQC | 1.1949 | NQC |
| COMMUNICATION STUDIES * | 1.3660 | 1.2886 | 1.3660 | 1.2886 | 1.3660 | 1.2886 | 1.3660 | 1.2886 | 1.3660 | 1.2886 |
| COMPUTATION & MANAGEMENT | 1.7269 | 0.7648 | 1.2205 | NQC | 1.5134 | NQC | 1.5779 | NQC | 1.6185 | NQC |
| COMPUTER SCIENCE | 1.5382 | NQC | 0.7390 | NQC | 1.0530 | NQC | 1.0503 | NQC | 0.6679 | NQC |
| COMPUTER SCIENCE & TECHNOLOGY # | 1.2898 | NQC | NQC | NQC | NQC | NQC | 0.9264 | NQC | -0.1343 | NQC |
| COMPUTING & INFORMATION SYSTEMS | 1.3775 | NQC | 0.6588 | NQC | 0.3005 | NQC | 0.9971 | NQC | 0.5851 | NQC |
| DANCE # (Ramanathan Academy of Fine Arts) | 0.7438 | NQC | 0.2670 | NQC | 0.6006 | NQC | 0.6219 | NQC | 0.6949 | NQC |
| DANCE # (Swami Vipulananda Institute) | 0.5619 | NQC | 0.4470 | NQC | 0.1561 | NQC | 0.4487 | NQC | 0.0396 | NQC |
| DANCE # (University of the Visual & Performing Arts) | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 1.1616 | NQC | NQC | NQC |
| DENTAL SURGERY | 1.7703 | 0.9627 | 1.3535 | 0.4877 | 1.2952 | NQC | 1.6059 | NQC | 1.2322 | NQC |
| DESIGN (ARCHITECTURE) # | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| DRAMA & THEATRE # (Swami Vipulananda Institute) | 1.1497 | 0.6979 | 1.1462 | NQC | 1.0736 | NQC | 1.0637 | NQC | 1.1465 | NQC |
| DRAMA & THEATRE # (University of the Visual & Performing Arts) | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| ENGINEERING | 1.8142 | 1.4327 | 1.4527 | 1.1654 | 1.4151 | 0.6104 | 1.5625 | NQC | 1.0831 | NQC |
| ENGINEERING (EM) | 1.7986 | NQC | 1.4000 | NQC | 1.1865 | NQC | 1.2990 | NQC | 0.9665 | NQC |
| ENGINEERING (TM) | 1.7824 | NQC | 1.4054 | NQC | 1.0967 | NQC | 1.1699 | NQC | 0.9396 | NQC |
| ENTREPRENEURSHIP & MANAGEMENT # | 1.0237 | NQC | NQC | NQC | NQC | NQC | 1.0713 | NQC | 0.0494 | NQC |
| ENVIRONMENTAL CONSERVATION & MANAGEMENT | 1.3183 | NQC | 0.2090 | NQC | 0.6976 | NQC | 1.1059 | NQC | 0.7434 | NQC |
| ESTATE MANAGEMENT & VALUATION | 1.7438 | NQC | 1.4183 | NQC | 1.3052 | NQC | 1.6175 | 0.6097 | 1.6379 | NQC |
| EXPORT AGRICULTURE # | 0.6673 | NQC | -0.1961 | NQC | NQC | NQC | 0.3227 | NQC | NQC | NQC |
| FACILITIES MANAGEMENT | 1.5699 | NQC | 0.9683 | NQC | 0.9245 | NQC | 1.5385 | NQC | 1.3176 | NQC |
| FASHION DESIGN & PRODUCT DEVELOPMENT # | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| FISHERIES & MARINE SCIENCES (University of Ruhuna) | 1.0216 | NQC | 0.0028 | NQC | 0.2303 | NQC | 0.5231 | NQC | 0.4195 | NQC |
| FOOD PRODUCTION & TECHNOLOGY MANAGEMENT | 1.4139 | NQC | 0.6494 | NQC | 0.7582 | NQC | 1.1752 | NQC | 0.6459 | NQC |
| FOOD SCIENCE & NUTRITION | 1.5049 | NQC | 1.0387 | NQC | 0.7877 | NQC | 1.3405 | NQC | 0.9164 | NQC |
| FOOD SCIENCE & TECHNOLOGY | 1.6876 | NQC | 1.1179 | NQC | 1.0861 | NQC | 1.2333 | NQC | 0.7531 | NQC |
| GREEN TECHNOLOGY | 1.2435 | NQC | 0.1517 | NQC | 0.7418 | NQC | 0.5481 | NQC | 5012 | NQC |
| HEALTH PROMOTION | 1.1854 | NQC | 0.1362 | NQC | 0.7366 | NQC | 1.1356 | NQC | 0.6486 | NQC |
| HOSPITALITY, TOURISM AND EVENTS MANAGEMENT # (Uwa Wellassa University) | 1.1188 | NQC | NQC | NQC | NQC | NQC | 1.0095 | NQC | 0.4625 | NQC |
| INDUSTRIAL INFORMATION TECHNOLOGY # | 1.2526 | NQC | NQC | NQC | 0.0185 | NQC | 1.0593 | NQC | 0.0439 | NQC |
| INDUSTRIAL STATISTICS & MATHEMATICAL FINANCE | 1.5565 | NQC | 0.6727 | NQC | 0.7185 | NQC | 1.1682 | NQC | 0.6894 | NQC |
| INFORMATION & COMMUNICATION TECHNOLOGY # | 0.9849 | NQC | 0.1446 | NQC | NQC | NQC | NQC | NQC | 0.5555 | NQC |
| INFORMATION SYSTEMS # (University of Colombo School of Computing) | 1.2310 | NQC | NQC | NQC | NQC | NQC | 1.1714 | NQC | NQC | NQC |
| INFORMATION TECHNOLOGY (University of Moratuwa) | 1.6926 | NQC | 1.2096 | NQC | 1.3350 | NQC | 1.4888 | NQC | 0.6641 | NQC |
| INFORMATION TECHNOLOGY & MANAGEMENT | 1.8427 | 1.2662 | 0.8933 | NQC | 1.5996 | NQC | 1.4826 | NQC | 1.6232 | NQC |
| ISLAMIC STUDIES * | 1.2070 | 1.1353 | 1.2070 | 1.1353 | 1.2070 | 1.1353 | 1.2070 | 1.1353 | 1.2070 | 1.1353 |
| LANDSCAPE ARCHITECTURE # | 0.4480 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| LAW | 1.9434 | 1.8166 | 1.1444 | NQC | 1.9540 | NQC | 1.8233 | NQC | 2.0228 | NQC |
| MANAGEMENT | 1.2289 | 0.8519 | 1.0351 | NQC | 1.0075 | 1.2841 | 1.3091 | 1.5760 | 1.1997 | NQC |
| MANAGEMENT & INFORMATION TECHNOLOGY # (University of Kelaniya) | 1.5690 | NQC | NQC | NQC | NQC | NQC | 0.7050 | NQC | NQC | NQC |
| MANAGEMENT & INFORMATION TECHNOLOGY (SEUSL) | 1.5162 | 1.0713 | 1.3772 | 1.1772 | 1.3597 | 0.8705 | 1.3417 | 0.3472 | 1.6336 | 0.9003 |
| MANAGEMENT STUDIES (TV) - A | 1.1388 | NQC | 1.0103 | NQC | 0.9220 | NQC | 1.5543 | NQC | 1.1814 | NQC |
| MANAGEMENT STUDIES (TV) - B | 1.3755 | 1.0399 | 1.3704 | 0.7075 | 1.3622 | 1.2561 | 1.6624 | 1.3090 | 1.5884 | 0.4642 |
| MEDICAL LABORATORY SCIENCES | 1.6831 | 0.8508 | 0.3519 | NQC | 1.1700 | NQC | 1.5195 | NQC | 1.1429 | NQC |
| MEDICINE | 1.7889 | 1.5917 | 1.3849 | 2.3343 | 1.3789 | NQC | 1.6143 | 0.7099 | 1.2337 | NQC |
| MINERAL RESOURCES & TECHNOLOGY # | 0.9551 | NQC | NQC | NQC | NQC | NQC | 0.5692 | NQC | NQC | NQC |
| MOLECULAR BIOLOGY & BIOCHEMISTRY | 1.7647 | NQC | 1.1048 | NQC | 1.2944 | NQC | 1.3604 | NQC | 1.0928 | NQC |
| MUSIC # (Swami Vipulananda Institute) | 0.5933 | NQC | 0.3471 | NQC | 0.5737 | NQC | 0.2519 | NQC | 0.4489 | NQC |
| MUSIC # (University of the Visual & Performing Arts) | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| MUSIC # (Ramanathan Academy of Fine Arts) | 0.8187 | NQC | 0.7836 | NQC | 0.9118 | NQC | 0.8275 | NQC | 0.6386 | NQC |
| NURSING | 1.0769 | 0.6174 | 0.5249 | NQC | 0.3448 | NQC | 0.7440 | NQC | 0.7506 | NQC |
| PALM AND LATEX TECHNOLOGY & VALUE ADDITION # | 0.7770 | NQC | -0.2679 | NQC | NQC | NQC | 0.3290 | NQC | NQC | NQC |
| PEACE & CONFLICT RESOLUTION * | 1.8033 | 1.8200 | 1.8033 | 1.8200 | 1.8033 | 1.8200 | 1.8033 | 1.8200 | 1.8033 | 1.8200 |
| PHARMACY | 1.6060 | NQC | 0.6889 | NQC | 0.7678 | NQC | 1.2150 | NQC | 0.9612 | NQC |
| PHYSICAL EDUCATION # | 0.8096 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.9165 | NQC |
| PHYSICAL SCIENCE | 0.9740 | NQC | 0.4328 | NQC | 0.1676 | NQC | 0.3823 | NQC | -0.0690 | NQC |
| PHYSIOTHERAPY | 1.7614 | NQC | 1.1423 | 0.2818 | 1.1705 | NQC | 1.5877 | NQC | 1.0559 | NQC |
| PUBLIC MANAGEMENT (SPECIAL) | 1.8868 | 0.5887 | 1.7770 | NQC | 1.3833 | NQC | 1.7008 | NQC | 1.6684 | NQC |
| QUANTITY SURVEYING | 1.7405 | 0.3897 | 0.9132 | NQC | 0.7205 | NQC | 1.4291 | NQC | 0.7454 | NQC |
| RADIOGRAPHY | 1.5291 | NQC | 0.2485 | NQC | 0.9458 | NQC | 1.1835 | NQC | 0.9814 | NQC |
| SCIENCE & TECHNOLOGY # | 1.0722 | NQC | -0.0933 | NQC | NQC | NQC | 0.7335 | NQC | 0.2383 | NQC |
| SIDDHA MEDICINE | 0.7579 | NQC | 0.2811 | NQC | 0.7363 | NQC | 0.6882 | NQC | 0.6228 | NQC |
| SOFTWARE ENGINEERING | 1.7174 | NQC | 0.7611 | NQC | 1.3742 | NQC | 1.3339 | NQC | 0.7894 | NQC |
| SPEECH & HEARING SCIENCES | 1.3855 | 0.5936 | 1.3238 | 0.8744 | 1.5961 | NQC | 1.3251 | 0.1055 | 1.7301 | 0.4285 |
| SPORTS SCIENCES & MANAGEMENT # | 0.9068 | NQC | -0.1710 | NQC | NQC | NQC | 0.2038 | NQC | NQC | NQC |
| STATISTICS & OPERATIONS RESEARCH | 1.5516 | NQC | 0.6878 | NQC | 0.7068 | NQC | 1.0972 | NQC | 0.6550 | NQC |
| SURVEYING SCIENCE | 1.5523 | NQC | 0.7412 | NQC | 0.9481 | NQC | 1.1715 | NQC | 0.6571 | NQC |
| TEA TECHNOLOGY & VALUE ADDITION # | 0.8665 | NQC | -0.0502 | NQC | NQC | NQC | 0.3392 | NQC | NQC | NQC |
| TOURISM & HOSPITALITY MANAGEMENT | 1.4476 | 1.2034 | 1.4136 | 1.2119 | 1.3445 | NQC | 1.3597 | 0.1656 | 1.5759 | NQC |
| TOWN & COUNTRY PLANNING | 1.8868 | 0.8403 | 0.8879 | NQC | 0.8432 | 0.0863 | 1.3944 | NQC | 1.2232 | NQC |
| TRANSLATION STUDIES # (KELANIYA & SABARAGAMUWA) | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| TRANSLATION STUDIES # (University of Jaffna) | 1.5644 | NQC | 0.1962 | NQC | 0.9156 | NQC | 0.9284 | NQC | 1.5492 | NQC |
| TRANSPORT & LOGISTICS MANAGEMENT | 1.7109 | NQC | 1.1127 | NQC | 1.2515 | NQC | 1.1784 | NQC | 0.8988 | NQC |
| UNANI MEDICINE & SURGERY | 1.1721 | NQC | -0.0420 | NQC | 0.0484 | NQC | 0.4532 | NQC | 0.6610 | NQC |
| VETERINARY SCIENCE | 1.7377 | 0.2334 | 1.3161 | NQC | 1.2789 | NQC | 1.5074 | NQC | 1.1475 | NQC |
| VISUAL & TECHNOLOGICAL ARTS # (Swami Vipulananda Institute) | 0.5574 | NQC | NQC | NQC | 0.1344 | NQC | NQC | NQC | 0.6750 | NQC |
| VISUAL ARTS # (University of the Visual & Performing Arts) | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாதகல் நாவலர் புயல் வி.கழகம் மென்பந்தாட்ட கிரிக்கெட் போட்டி







## கந்தர்மடம் வின்னர்ஸ் சம்பியன்





மாதகல் நாவலர் புயல் விளையாட்டுக் கழகம் நடத்திய மாவட்ட மட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் கந்தர்மடம் வின்னர்ஸ் அணி சம்பியனாகியது.மாதகல் நாவலர் புயல் விளையாட்டுக் கழகம் அணிக்கு 9 பேர் 8 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டிகளை நடத்தியது. சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாதகல் சென் ஜோசப் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.இறுதிப் போட்டியில் கந்தர்மடம் வின்னர்ஸ் அணியும் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணியும் மோதியது,நாணயச்சுழற்சியில் வென்ற குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.நிர்ணயிக்கப்பட்ட 8 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது.இதில் அரவிந்தன் 16. சாந்தன் 11 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.பந்துவீச்சில் கந்தர்மடம் வின்னர்ஸ் அணி சார்பில் சுபதீஷ் 3 விக்கெட்களையும் அஜன் 2 விக்கெட்களையும். நிஷாந்தன் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.பதிலுக்கு 53 என்னும் வெற்றி இலக்கோடு துடுபபெடுத்தாடிய கந்தர்மடம் வின்னர்ஸ் அணி இறுதி விக்கெட்டில் வெற்றி பெற்றது.இதில் வினோத் ஆட்டமிழக்காமல் 32, கண்ணா 18 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.பந்துவீச்சில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணி சார்பில் சாரு. ஜது மற்றும் நிலக்ஷன் தலா ஒரு வக்கெட்டை வீழ்த்தினர்.போட்டியின் ஆட்டநாயகனாக கந்தர்மடம் வின்னர்ஸ் அணியின் வினோத் தெரிவானார்.

வெற்றிபெற்றவர்களுக்கான வெற்றிக்கிண்ணங்களையும் பரிசுகளையும் விருந்தினர்களாக கலந்துகொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன். இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன். மாதகல் சென் ஜோசப் மகாவித்தியாலய முன்னாள் அதிபர் பொ.நடராஜா ஆகியோர் வழங்கி கௌரவித்தனர். (க-23)

# உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

## ஊரெழு றோயல் - மயிலங்காடு ஞானமுருகன்

இன்று பலப் பரீட்சை





பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 7 பேர் கொண்ட காற்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் ஊரெழு றோயல் அணியும் மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதவுள்ளன.

இறுதிப்போட்டி வல்வை ரெஜின்போ மைதானத்தில் இன்று இடம் பெறவுள்ளது. மேற்படி சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்டத்தை சேர்ந்த 70 காற்பந்தாட்ட அணிகள் பங்குபற்றியிருந்தன. போட்டிகளில் அதிக புள்ளிகள் பெற்ற 4 அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகின.

ஊரெழு றோயல். மயிலங்காடு ஞானமுருகன். திக்கம் இளைஞர்கள். நவஜீவன்ஸ் ஆகிய அணிகளே அரையிறுதிக்கு தெரிவாகின. அரையிறுதிப்போட்டிகள், ஐ.பி.எல் துடுப்பாட்டப் போட்டிகளில் பின்பற்றப்படும் பிளேஓவ் முறைப்படி இடம் பெற்றது.


இதன்படி முதல் இரண்டு இடங்களிலும் இருந்த ஊரெழு றோயல் மற்றும் மயிலங்காடு றோயல் அணி முதலில் மோதின.

இதில் ஊரெழு றோயல் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி நேரடியாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது. மயிலங்காடு ஞான முருகன் அணி இறுதிப் போட்டிக்குள் நுழைவதற்கான சந்தர்ப்பமான மேலும் ஒரு போட்டிக்காக காத்திருந்தது.

தொடர்ந்து. திக்கம் இளைஞர்கள். நவஜீவன்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டி இடம் பெற்றது. இதில் திக்கம் இளைஞர்கள் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து. மயிலங்காடு ஞானமுருகன் அணியும் திக்கம் இளைஞர்கள் அணியும் மோதின.இதில் ஞான முருகன் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. (க-23)

# ரூட் சதம்

# இங்கிலாந்து ஆறுதல் வெற்றி தொடர் இந்தியா வசம்






இந்தியாவுக்கு எதிரான 5ஆவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி 43 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இந்தியா. இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஹெடிங்லியியில் உள்ள லீட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

போட்டியில் இங்கிலாந்து அணி 43 ஓட்டங்களால்வெற்றிபெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் டோனி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார். இதனையடுத்து துடுப்பெடுத்தாட களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் அதிர்ச்சி அளித்தனர்.

இங்கிலாந்து அணியின் முன்னிலை வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க, ரூட், குக் ஆகிய இருவரும் நிதானமாக விளையாடி ஓட்டங்களை சேர்த்து வந்தனர்.

இங்கிலாந்து அணி சார்பாக ரூட் அடித்த 113 ஓட்டங்களுடன் அவ்வணி 294 ஓட்ட எண்ணிக்கை பெற்றது.

295 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது.

இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில், 253 ஓட்டங்களை மட்டும் எடுத்து தோல்வியை தழுவியது. கடைசிவரை போராடிய ஜடேஜா 87 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன்மூலம் இங்கிலாந்து அணி 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.இதன் மூலம் இந்த ஒருநாள் தொடரில் அனைத்து போட்டியிலும் தோல்வி கண்ட இங்கிலாந்து அணிக்கு ஆறுதல் வெற்றி கிடைத்தது. இந்தத் தொடரில் ஏற்கனவே மூன்று தொடர் வெற்றியை பெற்ற இந்தியா சம்பியன் பட்டத்தை வென்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சதம் அடித்த இங்கிலாந்து அணியின் ரூட்டும் தொடர் நாயகனாக இந்திய அணியின் சுரேஸ் ரெய்னாவும் தெரிவாகினர். (க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏ-9 வீதி மீசாலைப் பகுதியில் உழவு இயந்திரமும் வர்ன் ஒன்றும் நேற்றுகாலை வேளை நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இதில் இரு வாகன சாரதிகளும் படு காயங்களுக்கு உள்ளானதுடன் வாகனங்களிற்கும் அதிகளவில் சேதம் ஏற்பட்டுள்ளது.

# இங்கிலாந்து-இந்தியா இருபது-20 இன்று





தோனி தலைமையிலான இந்திய அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளை யாடி வருகிறது. இரு அணிகள் இடையே யான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடர் முடிவடைந்துவிட்டன.

5 டெஸ்ட் கொண்ட தொடரை இங்கி லாந்து 3:1 என்ற கணக்கிலும், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரை இந்தியா 3:1 என்ற கணக்கிலும் கைப்பற்றின.

இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதும் ஒரேயொரு 20 ஓவர் போட்டி பேர்மிங்கா மில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) நடக்கிறது.

கடைசி ஒருநாள் போட்டியில் தோற்ற இந்திய அணி 20 ஓவர் ஆட்டத்தில் வெல்ல கடுமையாக போராடும். அதே நேரத்தில் இங்கி லாந்து அணி தனது சொந்த மண்ணில் வெற்றி பெறும் ஆர்வத்தில் உள்ளது.

இரு அணிகளும் 20-வது ஓவர் போட்டி யில் மோதுவது இன்று 8-வது ஆட்டமாகும். இதுவரை நடந்த 7 போட்டியில் இந்தியா 3 ஆட்டத்திலும், இங்கிலாந்து 4 போட்டியிலும் வெற்றி பெற்று உள்ளன.

**இரு அணி வீரர்கள் விவரம்:-**

இந்தியா: தோனி (கப்டன்), விராட் ஹோலி (துணை கப்டன்), ரகானே, ரெய்னா, தவான், அம்பதி ராயுடு, ரவிந்திர ஜடேஜா, அஸ்வின், ஸ்ரூவர்ட் பின்னி, புவனேஸ்வர் குமார், மொஹமட் ஷமி, உமேஷ் யாதவ், மோகித் சர்மா, முரளி விஜய், சஞ்சு சாம்சன், கரண் சர்மா, குல்கர்னி.

**இங்கிலாந்து:-**

மோர்கன் (கப்டன்), மொய்ன அலி, ரவி போப்ரா, ஹேல்ஸ், ஜோ ரூட், பட்லர், பிரஸ் னென், ஸ்ரீபன் பின், ஹேரி குர்னே, ஜோர் டான், ஜேசன் ராய், ஜேம்ஸ், ரெய்லர், டிரெட் வெல், ஹேக்ஸ். (க)

## சர்வதேச...

வன்முறைகள் குறித்து ஆணையாளர் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை புதிய ஆணையாளர், நவ நீதம்பிள்ளையை போலல்லாது இலங்கை யுடன் உரிய புரிந்துணர்வுடன் நடந்து கொள் வார் என்று இலங்கை அரசாங்கம் முன்ன தாக நம்பிக்கையை வெளியிட்டமை குறிப் பிடத்தக்கது. (செ-11)

## தமிழரசுக் கட்சியின்...

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முக்கிய அரசியல் கட்சியாகிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக அதன் செயலா ளராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவு செய்யப்பட்டி ருக்கின்றார்.

இரண்டாவது நாளாக நேற்று சனிக் கிழமை வவுனியா கலாசார மண்டபத்தில் நடைபெற்ற அந்தக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டம் கட்சியின் தலைவர் ஆர்.சம்பந்தன் தலைமையில்கூடி புதிய நிர்வாக சபை யினரைத் தெரிவு செய்துள்ளது.

இந்தத் தெரிவின்போதே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக மாவை சேனாதிராஜா தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.

இதுவரையில் தலைவராக இருந்த நாடா ளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவராகத் தொடர் ந்து பணியாற்றுவார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளியன்று ஆரம் பமாகிய தமிழரசுக் கட்சியின் 15 ஆவது மூன்று நாள் தேசிய மாநாட்டின் செயற்குழு வில் முதலில் மாவை சேனாதிராஜா தலை வராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

தொடர்ந்து இரண்டாவது நாள் நடை பெற்ற பொதுச்சபை கூட்டத்தில் அதற்கான அங்கீகாரம்வழங்கபட்டு அவர் அதிகாரபூர்வமாக தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன்படி தமிழரச்க் கட்சியின் தலை வராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, செயலாளராக கிழக்கு மாகா ணத்தைச் சேர்ந்த துரைராஜசிங்கம் ஆகி யோர் தெரிவு செய்யப்பட்டனர்.


அந்தக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலை வராக பொன்.செல்வராஜா, பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர். உப தலைவரர்களாக திருகோண மலைச் சேர்ந்த துரைரட்ணசிங்கம், அம் பாறையைச் சேர்ந்த தோமஸ் வில்லியம், வவு னியாவைச் சேர்ந்த ப.சத்தியலிங்கம், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களான எஸ்.பரஞ் சோதி, ஏ.எம்.இமாம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கட்சியின் துணைச் செயலாளராக எம்.ஏ. சுமந்திரன், சீ.வீ.கே. சிவஞானம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். தமிழரசுக் கட்சி யின் மகளிர் அணி செயலாள்களாக அனந்தி சசிதரன், பேராசிரியர் நாச்சியார் ஆகியோர் தெரிவாகினர். நிர்வாகச் செயலாளராக சி.குலநாயகம் தெரிவு செய்யப்பட்டார்.

சட்டத்துறை செயலாளராக சி.தவராஜா நியமிக்கப்பட்டார். அரசியல் செயற்குழுத் தலை வராக இரா.சம்பந்தன் தெரிவானார். இளை ஞர் அணி செயலாளராக சி.சிவகரன் தெரிவு செய்யப்பட்டார். கொள்கைப் பரப்புச் செயலா ராக கிளிநொச்சியைச் சேர்ந்த எஸ். வேளமா லிகிதன் தெரிவு செய்யப்பட்டார். (செ-286,11)

# மரண அறிவித்தல்

## இராசரத்தினம் கணேசலிங்கம்



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கரந்தன் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் கணேசலிங்கம் (06.09.2014) நேற்று சனிக்கிழமை கால மானார்.

இவர் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்-சிவபாக்கியம் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற நல்லதம்பி மற்றும் பரிமளம் தம்பதிகளின் மருமகனும், சற்குணத்தின் அன்புக் கணவரும், பாலாம்பிகை, மங்கையற்கரசி, பாலசுப்பிரமணியம், பாலதர்மர், தெய்வராணி, சந்திரமனோகரன், இராஜேஸ்வரன், பாஸ்கரன் மற்றும் காலஞ்சென்ற சறோஜினியின் சகோதரனும், ராகுலன், ராதிகா, தேவகி, பிரசன்னா ஆகியோரின் தந்தையும், அரவிந்தன், சுரேந்திரராஜ் ஆகியோரின் மாமனாரும், மிலான், மினேஷ், சோமியா, ஹரிகரன், கிரிஷான் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.09.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
கரந்தன், நீர்வேலி.

தகவல்:குடும்பத்தினர்

(7711)

## தமிழீழம்...

ளுக்கு நீண்டகாலமாக உதவிகள் நல் கிய வெளிநாட்டினர் பலரும் இதன் உரு வாக்கத்தில் உள்ளனர் எனவும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

மாநாட்டில் கோத்தபாய ராஜபக்ஷ, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தொடர்பில் கருத் துரைக்கும் பொழுது,

இந்த அமைப்பின் தலைமைப் பொறுப் பில் உள்ள வி.உருத்திரகுமாரன் நாடுகடந்த அரசாங்கம் ஒன்றை நிறுவும் வேலைகளில் இறங்கினார். இந்த அமைப்பு தன்னை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்று அழைக் கின்றது.

தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடுகிறோம் என்று கூறும், இந்த அமைப்பின் முக்கியமான குறிக்கோள் ஏன்னவென்றால், இலங்கையின் வடக்கி லும் கிழக்கிலும் ஒரு தனி நாட்டை உரு வாக்குவதற்கு, அயல்நாட்டு அரசாங்கங்க ளிடம் முறையிட்டு அவர்களின் ஆதரவைப் பெறுவதுதான்.

அவர்கள் சொல்லிக்கொள்ளும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தில் சுமார் இரு பது அமைச்சர்களும், உதவி அமைச்சர்க ளும் உள்ளனர். இது உருவானது தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரபலமான தீவிர ஆதரவாளர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவின் துணையால்தான். விடுதலைப் புலிகளின் இந்தத் தீவிரமான ஆதரவாளர்க ளில் விடுதலைப் புலிகளுக்குப் பல ஆண்டு களாக உதவிகள் நல்கிய வெளிநாட்டினரும் உள்ளனர் என தெரிவித்திருந்தார். (செ-11)

## மன்னார்...

றப்பட்டுள்ளது.

இரண்டு பிளாஸ்டிக் கொள் கலன்களில் இட்டு கஞ்சா தொகை கடலில் மூழ்க செய்து மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அவற்றில் 18.15 கிலோ கிராம் கஞ்சா இருந்ததாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர். இது குறித்து தலை மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## மாணவர்...

கூறியுள்ளார்.

பாதுகாப்பற்ற உறவுகள் அதி கரித்திருப் பது, எயிட்ஸ் தொற்று ஏற்பட்டுள்ளதா என் பதை அறிய மேற்கொள்ளும் பரிசோதனை கள் அதிகரிப்பது என்பன எயிட்ஸ் நோயாளிக ளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை காட்டுவதற்கான காரணமாகும்.

2013 ஆம் ஆண்டு 196 எயிட்ஸ நோயா ளிகள் அடையாளம் காணப பட்டதுடன் 2012 ஆம் ஆண்டு 180 பேர் அடையாளம் காணப் பட்ட னர். அத்துடன் இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் மாத்திரம் 110 எயிட்ஸ் நோயா ளிகள் அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பற்ற உடலுறவுகளே இதற்கு பெரும் காரணமாக அமை ந்துள்ளது.

எயிட்ஸ் நோய்க்கு உள்ளான 95 வீதமா னவர்கள் பாதுகாப்பற்ற உடலுறவு காரண மாகவே நோய் க்கு ஆளாகியுள்ளனர்.

இதனால், பாதுகாப்பற்ற உட்லு றவுகளே நாட்டில் எயிட்ஸ் நோயாளர்கள் அதிகரிக்க காரணமாக அமைந்துள்ளது.

15 முதல் 25 வயதிற்கு உட்பட்ட எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து ள்ளது. பாடசாலை மாணவர்கள் மத்தியி லும் எயிட்ஸ் நோய் பரவும் ஆபத்து இருப்பதை இது காட்டுகிறது என்றும் சிசிரலியனகே குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## மாகாண...

றும் இராணுவ முகாம்கள் அமைப்பது தொடர்பில் தமக்கு அறிவிக்கப்பட வேண்டி யது அவசியமானது என வடக்கு முதலமை ச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அண்மையில் குறிப்பிட்டிருந்தமைக்கு பதிலளிக்கும் வகை யில், இராணுவப் பேச்சாளர் இதனைத் தெரி வித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் மத்திய அர சாங்கம் மட்டுமே தீர்மானிக்க முடியும்.

இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளி லும் தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் மத்திய அரசாங்கமே தீர்மானங்களை எடுக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மகிந்த...

யில் நேற்று நடைபெற்றது. ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபே இன்று இலங்கைக்கு விஜயம் செய்வதுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார். இந்தநிலையில் ஜப்பான் பிரதமரின் வருகைக்கு முன்னோடியான சந்திப்பாகவே யசுசி ஜனாதிபதியை சந்தித்துள்ளார்.

எனினும் இதன்போது பேசப்பட்ட விடயங்கள் குறித்து ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு எந்த தகவலையும் வெளியிடவில்லை.(செ-11)

## ஆரம்ப...

ளும் இந்த வாய்மூல அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, ஐ.நாவின் இந்த விசாரணையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும், இலங்கையில் விசாரணை நடத்த அவர்களுக்கு நுழைவு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றும் அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கடைத்தெரு மத்தியில் 80, செம்மா தெரு ஒழுங்கையில் மலாயன் சங்கத்திற்கு பக்கத்தில் 1 1/2 பரப்பு (15 பேச் காணி) விற்பனைக்குண்டு.

தொடர்பு:-021 222 8333

(8408)

Personal Class-கணினி

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CS6, CorelDraw X6, PageMaker, Adobe Illustrator, Adobe Indesign)

*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்

*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்

TP:0779672038 ஆசிரியர்:KRC

மாபெரும் வேலைவாய்ப்பு

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே......

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் காப்புறுதித் துறையில் பணியாற்றுவதற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தகுதி

- O/L இல் 6 பாடங்களில் சித்தி
- அரச, தனியார் துறையில் ஓய்வு பெற்றவர்கள்
- பகுதி நேரம் தொழில் புரிய விரும்புபவர்கள்

விண்ணப்ப முடிவுத் திகதி – 20.09.2014

முகவரி : முகாமையாளர் சிறிலங்கா இன்சூரன்ஸ் இல.31, A9 வீதி, கிளிநொச்சி.

(7594)

நீங்கள் மாற்றத்துக்கு தயாரா?

நீங்கள் தற்பொழுது எடுக்கும் சிறந்த தீர்மானமே உங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கும்

Chartered Accountants of Sri Lanka நடாத்தும் மாபெரும் தொழில் வழிகாட்டிக் கருத்தரங்கு

இடம் : Spectra Skills No 19, Stanley Road, Jaffna

காலம் : 08 Sep 2014

ஆலோசகர் : Mr.E.Annalingam F.C.A,FSCMA,Dip in Public Financial Management

தொலைபேசி இல : 021 222 1422 / 1423

முன் பதிவுகளுக்கு உங்கள் பெயரை 771519390 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்

(C-8416)

SPEED LANKA EXPRESS Courier

வெளிநாடுகளுக்கான

தபால் பொதி விநியோக சேவை

- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

(சி-8418)

Speed Lanka Express (Pvt) Ltd.

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே - 0772931062, 0776217926

www.speedlanka.net

சந்நிதியின் அருளால் ஆரோக்கியம் தழைக்கட்டும்

மாபெரும் அறிமுக விற்பனை

Sylo ICE CREAM

பால், வெண்ணை, தேன், பாதாம், பிஸ்தா, முந்திரி, திராட்சை, அத்திப்பழம் போன்ற இயற்கையான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த புதிய தலைமுறை அம்சங்களுடன், TCT, Preser Vative இரசாயனங்கள் சேர்க்காமல் அதிஉயர் தொழில் நுட்ப முறையில் உங்கள் ஆரோக்கியத்தின் மீது அக்கறையுடன் தயாரிக்கப்படும் ஐஸ்கிறீம் வகைகள் அறிமுகவிலையில்!

Hot Line:-0777710785

Phone:-021 221-2003

சந்நிதியின் கோவில் முன்புறம் எமது விற்பனை நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்

விசேட வைபவங்களுக்கு ஐஸ்கிறீம் ஓடர்கள் சிறந்த முறையில் வழங்கப்படும்

Factory

இல.76 அம்மன் கோவில் வீதி கொக்குவில் கிழக்கு.யாழ்ப்பாணம்

(7548)

தற்போது யாழ் நகரில்...



BTEC HND in BIOMEDICAL SCIENCE

Leadind to BSc (Hons) from UK universities

- ஆய்வுகூட பரிசோதனைகளை உள்ளடக்கிய முழு நேர பாடநெறி
- உயிரியல் துறையில் தொழில் சார் Biomedical Scientist களாக UK இல் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம்
- சர்வதேச ரீதியில் அதிக தொழில் வாய்ப்புக்களுக்கு இட்டுச் செல்லும்
- பாடநெறி முடிவில் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி
- உயிரியல் துறையில் நவீன வசதிகளுடனான கற்றல் சூழல்

மருத்துவ / உயிரியல் / உயிர் இரசாயனவியல் துறையில் ஆராய்ச்சியாளர்களை உருவாக்கும் பாடநெறி

ISO 9001:2008 CERTIFIED

14 Years of Trust & Excellence in Higher Education

BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES

www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.

021 221 9910 / 077 710 2131

Colombo : 077 482 9765

Kandy : 081 222 4731


Batticaloa : 077 766 6432

Kurunegala : 077 387 4747

(C-8417) Macro Ads

Building Careers - Transforming Lives


## துயர் பகிர்கின்றோம்



## பிரமஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் சிரேஷ்ட சமஸ்கிருதத்துறை விரிவுரையாளர், புகழ் பூத்த சிவன் கோவில் ஆலய அறங்காவலராகவும் திகழ்ந்த பிரம்மஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா அமரரான செய்தி அறிந்து அதிர்ச்சி அடைந்தோம். பேராசான் கையிலாசநாதக்குருக்களை குருவாக வரித்து வந்த சர்மா அவர்கள் பல்கலையில் தனது துறைசார்ந்த வளர்ச்சியிலும் பிராமண சமுதாயத்தை வழி நடத்துவதிலும், ஆலயத்தை சிறந்த நிலையில் வழிப்படுத்துவதிலும் முத்திரை பதித்தவர். தனது காலத்தில் ஆலயத்தில் புனர்ஸ்தாபன வேலைகள் நிறைவேற்றி வைத்த அன்னாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதாகும். அவர்கள் இழப்பால் துயருற்று இருக்கும் குடும்பத்தினர் துயரைப் பகிர்ந்து எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிதம்பரம் தில்லைக்கூத்தன் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

க.கு.கந்தையாபிள்ளை ... வீதி, யாழ்ப்பாணம்.

க.கு.க.சிவபாலன் K.K.K, யாழ்ப்பாணம்.

(சி-8429)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.